டாக்டர் முத்துச்சண்முகன்
இரா. பிரேமா

# இரட்டைக்காப்பியக் கிளைக்கதைகளும் துணைக்கதைகளும்

முத்துப் பதிப்பகம்
மதுரை - 625019.

# இரட்டைக் காப்பியக்
# கிளைக் கதைகளும் துணைக் கதைகளும்

டாக்டர் முத்துச்சண்முகன்
இரா. பிரேமா

முத்துப் பதிப்பகம்
"மாதவி"
ஆழ்வார் நகர், மதுரை-625 019.
1980

வெளியிடுவோர் : S. முத்துத் திருநாவுக்கரசு

இரட்டைக் காப்பியக் கிளைக் கதைகளும் துணைக் கதைகளும்

முத்துப் பதிப்பகம் : 25

முதல் பதிப்பு : அக்டோபர், 1980

விலை : ரூ. 10·00

| | | |
|---|---|---|
| *Authors* | : | Dr. M. Shanmugam Pillai<br>R. Prema |
| *Title* | : | Iraṭṭaikkāppiyak kiḷaikkataikaḷum tuṇaikataikaḷum |
| *Contents* | : | A critical exposition of episodes in Twin Epics in Tamil |
| *Number of copies printed* | : | 900 |
| *Number of pages* | : | 169+12=181 |
| *Size* | : | 18×12.5 cms. |
| *Letters used* | : | 10 pt. |
| *Paper used* | : | 11.6 kg. white printing paper |
| *Binding* | : | Card-board |
| *Copyright* | : | Authors |
| *Printed at* | : | Priya Prints,<br>Alagar Nagar, K. Pudur,<br>Madurai — 625 007. |
| *Publisher* | : | S. Muttu Thirunavukkarasu<br>Muttu Patippakam<br>" Madavi ", Alwarnagar,<br>Madurai — 625 019. |

# உள்ளே


1. காப்பியக் கிளைக்கதைகள் ... 1

2. சிலப்பதிகாரத்தில் கிளைக்கதைகள் ... 24

3 மணிமேகலையில் கிளைக்கதைகள் ... 49

4. இரட்டைக் காப்பியக் கிளைக்கதைகளின் ஒப்பீடு ... 97

5. காப்பியத்தில் துணைக்கதைகள் ... 107

6 சிலப்பதிகாரத்தில் துணைக்கதைகள் ... 120

7. மணிமேகலையில் துணைக்கதைகள் ... 136

8. இரட்டைக்காப்பியத்தில் துணைக்கதைகளின் ஒப்பீடு ... 153

9. முடிவுரை ... ... ... 158

© No part of this book could be reproduced in any form without written permission from the authors, except short passages for reviews and quoting.

# முன்னுரை

இராமாயணத்தில் கிளைக் கதைகளைப் பற்றிய ஆய்வினை மேற்கொண்டதும், கிளைக்கதைகள் (episodes) எவை, ஏன் என்ற வினாக்களை எழுப்பினோம். தமிழிலோ, ஆங்கிலத்திலோ அவைகளுக்குத் தெளிவான விடை எதுவும் கிடைக்கவில்லை. அடிப்படையே தெளிவில்லாதபொழுது மேலே எப்படிச் செல்லமுடியும்? மாதிரிக்காகச் சிலப்பதிகாரக் கிளைக்கதைகளைத் திரட்டி வகைப்படுத்த முயன்றபொழுது பல சிக்கல்கள் எழுந்தன. மணிமேகலையோடு ஒப்பிட்டபொழுது சிக்கல்கள் பெருகின. இரண்டு தமிழ்க் காப்பியங்களையும் மையமாகக் கொண்டு இதற்கு ஒரு விளக்கம் காண முயன்றதின் விளைவே இந்நூல்.

இது இத்துறையில் ஒரு புதிய முயற்சி என்றுதான் கூறவேண்டும். மேலும் இந்த முறையில் சிந்தித்தால் இன்னும் தெளிவு கிடைக்கலாம். நாங்களே எங்கள் கருத்துக்களை மாற்றிக்கொள்ளவும் நேரிடலாம். அதுதானே வளர்ச்சி.

இந்த முறையில் பலரைச் சிந்திக்கத்தூண்ட இந்நூல் ஒரு கருவியாகட்டும்.

டாக்டர் முத்துச்சண்முகன்

இரா. பிரேமா

# 1

## காப்பியக் கிளைக்கதைகள்

1.1. ''காப்பிய நூல்களைச் சிறுபான்மையோரே அறிவர். ஆயின் காப்பியக் கதைகளை நாடே அறியும்.''[1] நாடறிந்த இக்காப்பியக் கதைகள், பல கிளைக்கதைகளைத் தம்முடன் இணைத்து ஒருமித்த வடிவமாகக் காட்சி அளிக்கின்றன. காப்பியக் கதையை மையக்கதை, கிளைக்கதை, துணைக்கதை என மூன்றாக வகைப்படுத்தலாம்.

1.2 'மையக்கதை' என்பது காப்பியத் தலைமை மாந்தர்களைப் பற்றியதாக அமைந்திருக்கும். இது, பல பாத்திரங்களை உள்ளடக்கியதாக இருந்தாலும் தலைமை மாந்தர்களுக்கே, அவர்களைப்பற்றிய நிகழ்ச்சிகளுக்கே முக்கியத்துவம் அளித்துச் செல்வதாய் அமைந்திருக்கும். மையக்கதை விளக்கமுறையில் (descriptive) சொல்லப்பட்டிருக்கும். இது நிகழ்கால ஓட்டத்திலேயே அமைந்திருக்கும். மையக்கதையிலிருந்து ஒரு பகுதியை வெட்டி எடுத்துவிட்டால் கதை தொடர்ந்து நடைபெறாது. மையக்கதையின் தொடக்கம் காப்பியத் தொடக்கமாகவும், மையக்கதையின் முடிவு காப்பிய முடிவாகவும் அமைந்திருக்கும். தவிர, மையக்கதை, 'தொடக்கம், வளர்ச்சி, உச்சகட்டம், வீழ்ச்சி, முடிவு' என்ற ஐந்து உறுப்புக்களைக் கொண்டிருக்கும்.

1.3 கிளைக்கதை என்பது மையக்கதைப் போக்கிலிருந்து மாறுபட்டு அமைந்திருக்கும். மையக்கதையின் ஊடே அமைந்திருக்கும் கதைவடிவம் (Story form). இது. கிளைக்

கதைகள் கூற்றுமுறையில், அதாவது விவரிப்புப் போக்கில் அமைந்திருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. மையக்கதை, கூறப்படும் அந்தக்காலத்திலன்றி, அதற்கு முன்பு நடந்ததை அல்லது பின்பு நடக்கப்போவதைக் கதைப்படுத்திக் கிளைக்-கதையில் கூறப்பட்டிருக்கும்.[2] மையக்கதையில் இடம் பெறும் பாத்திரங்களின் வாயிலாகவோ, பிற கற்பனைப் பாத்திரங்களின் வாயிலாகவோ அல்லது காப்பியப் புலவர் தானே கூறுவதாகவோ கிளைக்கதைகள் அமைந்திருக்கும். மையக்கதைப் போக்கிலிருந்து வாசகன் மனத்தைத் திசை திருப்புகின்றன இக் காப்பியக் கிளைக் கதைகள்.

1.4 காப்பிய உறுப்பாக விளங்கும் இக்கிளைக் கதை-களைப்பற்றிய சிந்தனை பழங்காலத்திலேயே ஐரோப்பிய, வடமொழி அறிஞர்களுக்கு இருந்திருக்கிறது. தமிழில் காப்-பிய இலக்கணம் பேசும் முதல்நூலான தண்டியலங்காரத்-திலோ, பின் வந்த காப்பிய இலக்கணம் பேசும் பாட்டியல் நூல்களிலோ கிளைக்கதை பற்றிய செய்தி எதுவும் இல்லை. இதனால், கிளைக்கதையை ஒரு காப்பிய உறுப்பாக அவர்-கள் சிந்திக்கவில்லை என்பது தெளிவாகிறது. ஆனால், சிலப்-பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லாரிடம் கிளைக்கதை பற்றிய சிந்தனை ஓரளவு இருந்திருக்கிறது என் பதை அவர் உரையிலிருந்து அறிய முடிகிறது.[3] ஆனால், அவர்தானும் கிளைக்கதையைப் பற்றி விரிவாகப் பேச-வில்லை. பின் வந்தோரிடமும் அச்சிறுசிந்தனை எத்தகைய தாக்கத்தையும் உண்டாக்கவில்லை.

1.5 கிரேக்க அரசியல் இலக்கிய ஞானியான 'அரிஸ்டாட்-டில்' முதன்முதலாகக் 'கிளைக்கதை' பற்றிய சிந்தனையைப் பழங்காலத்திலேயே தோற்றுவித்தார். தவிர, அவரேகிளைக்-கதையைப்பற்றிய இலக்கணத்தையும் தந்து விளக்கி-யுள்ளார். கிளைக்கதையை இவர் 'Episode' என்ற கிரேக்கச்

சொல்லால் குறித்தார். பின்வந்த ஐரோப்பிய இலக்கிய அறிஞர்கள் அனைவரும் இச்சொல்லையே கிளைககதையைக் குறிக்கப் பயன்படுத்தியுள்ளனர். ஐரோப்பியத் திறனாய்வாளர்களின் முதல் ஆசானான அரிஸ்டாடில் கிளைக்கதையைப்பற்றிக் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

''கவிதைக் கலையும் போலச் செய்யும் முறையில் படைக்கப்படும் கலையாதலால் அது மையநிகழ்ச்சி ஒன்றை அடிப்படையாகக் கொண்டு படைக்கப் பெறுதல் வேண்டும். எடுத்துக் கொண்ட மையக்கதை முழுமை வாய்ந்ததாக அமைய, அதனைச் சுற்றிப் பின்னப்படும் கிளைக்கதைகளும் மையக்கதையிலிருந்து பிரித்துக்காண முடியாதவாறு கட்டமைப்பு நிலையில் ஒன்றிடவேண்டும்,இவற்றில் ஒன்றை நீக்கினாலும், இடமாறி அமைத்தாலும், அதன் முழுமைத்தன்மை சிதைந்து கட்டமைப்புக் குலைந்துவிடும். நீக்கிவிட்டாலும், சேர்த்துக்கொண்டாலும், அதன் முழுமைக்கு எவ்விதத் தீங்கும் விளைவிக்காத கிளைக்கதை, அதன் கட்டமைப்போடு உயிர்த்தொடர்புடைய உறுப்பாக விளங்க முடியாது.''[4]

ஆக, அரிஸ்டாட்டில், கிளைக்கதை என்பது காப்பிய மையக் கதையுடன் இணைந்த, அதாவது ஒன்றிய கதையாகவே வரவேண்டும் என்கிறார். ஒன்றாத கிளைக்கதையை இவர் போற்றவில்லை என்று தெரிகிறது. தவிர, காப்பியக் கட்டமைப்பு செறிவாக இருக்க வேண்டுமானால், கிளைக்கதை மையக்கதையுடன் திறம்பட இணைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதையும் அரிஸ்டாடில் சுட்டுகிறார்.

1.6 இவருக்குப்பின், காப்பிய இலக்கணங்களைப் பற்றி ஆராய்ந்த ப்ளேட்டோ (Plato), ஆபர்கிராம்பி (Abercrombie), சி. எம். பௌரா (C. M. Bowra), எப். எல். லூகாஸ் (F. L. Lucas), கெர் (Ker) போன்ற ஐரோப்பிய இலக்கிய அறிஞர்கள் கிளைக்கதைகளைக் காப்பிய உறுப்பாகச் சுட்-

டிச் சென்றிருக்கின்றனர். பின்பு வந்த ஆங்கிலக் கலைச்சொல் அகராதிகளும், கலைக்களஞ்சியங்களும் இவ்வறிஞர்கள் சுட்டிச் சென்ற கிளைக்கதைகளை ஆய்ந்து, கிளைக்கதைகளுக்கான பொது விளக்கங்களை நல்கியிருக்கின்றன. ஏறக்குறைய அந்நூல்கள் கீழ்க்கண்டவிளக்கத்தையே கிளைக்கதைகளுக்குத் தந்திருக்கின்றன.

1. ஒரு நிகழ்ச்சி அல்லது ஒரு காட்சி எடுத்துரைக்கும் பாங்கில் கூறப்பட்டிருக்கும்.[5]

2. மூலக்கதையிலிருந்து இயல்பாகத் தோன்றியும், ஆனால் அதிலிருந்து தனிமைப்படுத்தும்விதமாகவும் அமைந்திருக்கும்.[6]

3. கிளைக்கதை, ஒரு மனிதன் வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சியாகவும் அமையலாம்.[7]

4. கிளைக்கதை, மூலக்கதைப்பின்னலுடன் ஒரு சில நேரங்களில் ஒன்றி வருகிறது.[8]

இவ்வாறு, கிளைக் கதை பற்றிய இலக்கணம் கூறும் ஐரோப்பியத் திறனாய்வாளர்களோ, ஆங்கிலக்கலைச்சொல் அகராதிகளோ, காப்பியக் கிளைக்கதைகளைத் தேவையற்ற காப்பிய உறுப்பு என்றோ, காப்பிய நெடும் வீச்சுக்காகப் பயன்படுத்தப்படும் ஒரு உத்தி என்றோ சுட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

1.7 இராமாயணம், மகாபாரதம் என்னும் இதிகாசங்களைத் தங்கள் இரு பெரும் இலக்கியங்களாகப் பெற்றிருக்கும் வடமொழி அறிஞர்களிடையேயும் கிளைக்கதை பற்றிய சிந்தனை இருந்திருக்கிறது. இவர்கள் கிளைக் கதையை 'உபாக்கியானம்' என்ற பெயரால் குறிப்பிடுகின்றனர். பாரதத்தில் இடம் பெற்றுள்ள நளனுடைய கிளைக்கதை 'நளோபாக்கியானம்' என்றும்,[9] குசேலருடைய கதை குசேலோபாக்கியானம்' என்றும் குறிப்பிடப்படுகின்றன.

1.8 இவ்வாறு, ஐரோப்பியத் திறனாய்வாளர்களும், வடமொழி அறிஞர்களும் கிளைக்கதையை எண்ணிப்பார்த்த அளவு, இன்றைய அளவும் நம் தமிழ் இலக்கிய அறிஞர்கள் கிளைக்கதைக்கு ஒரு சிறப்பிடம் கொடுத்து எண்ணிப்பார்க்கவில்லை. இதனால், இன்றைய திறனாய்வாளர்களுக்கு இது பற்றிய சிந்தனையே இல்லை என்று கூறவரவில்லை. தமிழ்க் காப்பியங்களைப் பற்றி ஆராயந்த திரு. வையாபுரி பிள்ளை கிளைக்கதையைப் பற்றித் தம் 'காவிய காலம்' என்ற நூலில் சுட்டியிருக்கிறார்.

''ஒருமையுணர்ச்சியை விளைவிக்கின்ற இதிகாசத்திலே பல உபகதைகளும் வருதல் தகும். ஆனால் இவ்வுபகதை பிரதான கதையோடு இயைபு உடையனவாதல் வேண்டும். கதாநாயகன், நாயகி, பிரதிநாயகன் முதலிய முக்கிய பாத்திரங்களின் வரலாற்றோடு ஏதாவது ஒரு வகையில் தொடர்பு கொண்டனவாக இக்கதைகள் அமைதல் வேண்டும்'' [10] என்று ஒரு சிறு விளக்கமாக மட்டும் சொல்லிச் செல்கிறார். கிளைக் கதைகளைப் பற்றித் தங்கள் கட்டுரைகளிலும் நூல்களிலும் ஆங்காங்கே தெ. பொ. மீ., மு. வ. போன்ற தமிழறிஞர்கள் எழுதியிருந்தாலும், அந்நூல்களிலும் தெளிவான விளக்கம் காணப்படவில்லை. அவர்களும், இதுதான் கிளைக்கதையின் இலக்கணம் என்று வரையறுத்து எழுதவும் இல்லை.

**1.9** இன்றைய தமிழறிஞர்களில் ச. வே. சுப்பிரமணியன், மா. செண்பகம், கே. பி. சங்கர்லால் போன்றவர்கள் சற்று முனைப்போடு கிளைக்கதைகளை ஆராய்ந்திருக்கின்றனர். எஸ். ராமகிருஷ்ணனும் தன்னுடைய 'கம்பனும் மில்டனும் ஒரு புதிய பார்வை' என்றநூலில் கிளைக்கதைகளைப் பெயரளவில் சுட்டிச் சொல்கிறார். ச. வே. சுப்ரமணியம் தன்னுடைய 'சிலம்பும் சிந்தாமணியும்' (ஒப்பாய்வு-அறிமுகம்) என்ற நூலிலும், [11] 'காப்பியப் புனைதிறன்' என்ற நூலி-

லும்[12] மா. செண்பகம் 'தமிழ்க்காப்பியங்கள்' என்ற நூலி-லும்[13] கிளைக்கதைக்குரிய இலக்கணங்களை வரையறுத்துப் பேசவில்லை என்றாலும், தங்கள் நூல்களில் கிளைக்கதை-களை வகைப்படுத்திப் பேசியுள்ளனர். கே. பி. சங்கர்லால் 'சிலம்பில் திறனாய்வு' என்ற நூலில் 'சிலம்பில் கிளைக்-கதைகள்' என்ற தலைப்பில், கிளைக்கதை பற்றியும், அது எடுத்தாளப்படும் நோக்கத்தையும், கிளைக்கதைகளைக் கூறுபவர்கள் பற்றியும் ஆய்ந்து எழுதியுள்ளார்.[14] சங்கர்லால் கிளைக்கதைகள் என்று குறிப்பிடுவதை, மா. செண்பகம் பழங்கதைகள் என்று குறிப்பிடுகிறார்.[15] இவர், கவுந்தி, செங்குட்டுவன் போன்ற துணைமாந்தர்கள் கதையைக் கிளைக்-கதைகள் எனச் சுட்டுகிறார்.[16] இதேபோல், எஸ்.ராமகிருஷ்-ணனும், 'பரதன் பற்றிய கிளைக்கதை' என்று காப்பிய துணை மாந்தர் வரலாற்றைக் கிளைக்கதையாகக் குறிப்பிடு-கிறார்.[17] ச. வே. சுப்பிரமணியன், உவமையாக வருவன-வற்றைக் கிளைக்கதைகளின் வகைகளில் ஒன்றான தனிக்-கதை என்று குறிப்பிட்டுள்ளார்[18]. இவ்வாறு உவமையாக வருவதை மற்ற மூவரும் கிளைக்கதையாகக் குறிப்பிட-வில்லை.

**1.10** இவற்றை எல்லாம் தொகுத்து ஆராய்ந்தபோது' கிளைக்கதை என்று எதைக் குறிப்பிடலாம்? என்ற வினா-விற்குக் குழப்பமே விடையாகிறது. 'கிளைக்கதை' என்றால் என்ன? என்பதற்கு ஒரு தனித்த, தெளிந்த இலக்கண வரை-யறை இல்லாத நிலைதான் இக்குழப்பச் சூழலுக்குக் காரணம் என்பது தெளிவாகியது. மேலைநாட்டு, நம்நாட்டுத் திறனாய்வாளர்களின் கருத்துக்களையும், நம் தமிழ்க் காப்பியங்களையும் துணையாகக் கொண்டு ஒரு வரையான இலக்-கணத்தையும் ஆய்வாளர்கள் உருவாக்க முயன்றபோது, முந்திய ஆய்வாளர்களின் போக்கில் ஏற்பட்ட குழப்பத்திற்-கான காரணமும், கிளைக்கதை பற்றிய ஓரளவு தெளிவும்

கிடைத்தன. கிளைக்கதை அல்லாது பிறகதைகளும் காப்பியத்தில் பயன்படுத்தப்படுதலையும், கிளைக்கதை பற்றிப் பழங்காலம் முதல் இன்றுவரை மூன்று விதமான எண்ணங்கள் (concepts) இருத்தலையும், முந்திய ஆய்வாளர்கள் இவற்றை ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தி நோக்கியதால், ஒரு தெளிந்த, ஒருமித்த முடிவைப் பெறமுடியாமல் போனதையும் ஆய்வாளர்களால் அறியமுடிகிறது.

**2.1 கிளைக்கதை அல்லாது காப்பியத்தில் பயன்படுத்தப்படும் கதைகள் :**

கிளைக்கதை என்பது புராணக்கதை, புராண வரலாற்றுக்கதை, முன்னோர் கதை, வரலாற்று வழிக்கதை, கர்ணபரம்பரைக் கதை, பழம்பிறப்புக்கதை, சாப வரலாற்றுக் கதை, முனிவர், அரக்கர், தேவர் பற்றிய கதைகள், பஞ்சதந்திரக் கதை, புத்த ஜாதகக் கதை போன்ற கதைகளில் ஒன்றாக அமைந்திருக்கலாம். ஆனால், இக்கதைகள் எல்லா இடங்களிலுமே கிளைக்கதைகளாகவே எடுத்தாளப் பட்டிருக்கின்றன என்று கூற முடியாது. பல இடங்களில் காப்பிய உவமைகளாக (allusions) எடுத்தாளப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் சிறு எடுத்துக்காட்டுக்களாக அல்லது வர்ணிக்கும் முகமாக எடுத்தாளப்பட்டிருக்கின்றன. இவ்விடங்களிலெல்லாம் இக்கதைகளைக் கிளைக்கதையாகக் கொள்ள முடியாது. இவற்றை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குவோம்.

எ. காட்டுக்கள் :

**2.1.1 காப்பிய உவமை :**

விராடன் பேரூர் விசயனாம் பேடியைக்
காணிய சூழ்ந்த கம்பலை மாக்களின்
மணிமேகலைதனை வந்துபுறஞ் சுற்றி [10]

இங்கு 'அர்ச்சுனன் பேடி வேடம் பூண்டு வந்த கதை'

கூறப்படுகிறது. அர்ச்சுனன் பேடி வேடம் பூண்டு நின்ற பொழுது, அவனைக் காணும் விருப்பத்தோடு மக்கள் சுற்றி நின்றிருந்தனர், அதுபோல் துறவு பூண்ட மணிமேகலையைக காணும் விருப்பத்தோடு மக்கள் அவள் புறம் சுற்றி நின்றனர் என்பது இதன் விளக்கம்.

2.1.2. வர்ணனை:

பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்
இங்குநம் ஆனுள் வருமேல் அவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழி[20]

இங்குப், 'பாற்கடல் சடைந்தகதை' கூறப்படுகிறது. மாயவனைக் கூறவந்த பெண்டிர், அவன் பாற்கடல் கடைந்ததை இணைத்து அவனை வர்ணித்துக் கூறுகின்றனர்.

2.1.3. சிறு எடுத்துக் காட்டுக்கதை:

எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான் தன்
அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகாரென் பதியே [21]

இங்குக், கண்ணகி, சிபி மன்னன் கதையையும், மனுநீதிச் சோழன் கதையையும் எடுத்துக் காட்டுகிறாள்.

இம்மூன்று எடுத்துக்காட்டிலும், கதைகள் அமைந்திருந்தாலும், இவற்றைக் கிளைக்கதைகள் எனக் கொள்ள முடியாது. காரணம்:

1. இககதைகள் இங்குக் கதைவடிவத்தில் [Story form] காப்பியப் புலவனால் படைக்கப்படவில்லை.

2. முதல் இரண்டு எடுத்துக்காட்டுக்களும் கூற்றுமுறையில் அமையவில்லை. மூன்றாவது எடுத்துக்காட்டு கூற்று முறையில் அமைந்திருந்தாலும் 'கதைப்படுத்தப்படவில்லை'

என்ற நிலையில் அதுவும் கிளைக்கதையாகும் தகுதியை இழந்துவிடுகிறது.

அதாவது, இம்மூன்றிலும் கதைகளைப், படிப்பவர்கள் ஊகத்திற்கு விட்டுவிடுகிறான் புலவன். தானே கதை கூறாமல், இப்படிப் படிப்பவர் ஊகத்திற்கு விட்டுவிடுவதால் இவையெல்லாம் கிளைக் கதைகளாகக் கொள்ளப்படமாட்டா. இத்தகைய கதைகளை எல்லாம் கிளைக்கதைகளிலிருந்து வேறுபடுத்தித் துணைக் கதைகள் என்று குறிப்பிடலாம்.

ஆகவே, கிளைக்கதையின் உயிர்க்கூறு, 'கதை வடிவமே' (Story form) என்பது பெறப்படுகிறது. கிளைக்கதை பற்றி ஆராய்ந்தவர்களுக்கும், ஆராய்பவர்களுக்கும் குழப்பத்தை உண்டுபண்ணும் இந்தக் காப்பிய உவமைக்கதை, வர்ணனைக்கதை, சிறு எடுத்துக் காட்டுக்கதை ஆகிய இத் துணைக் கதைகளிலிருந்து காப்பியக் கிளைக்கதைகளைப் பிரித்துப் பார்ப்பது இன்றியமையாததாகிறது.

**3.1 கிளைக்கதை பற்றிய மூன்றுமாறுபட்ட எண்ணங்கள் :**

காலந்தோறும் இலக்கிய வகைமாற்றம் ஏற்படுவது போல், கிளைக்கதை பற்றிய எண்ண மாற்றமும், அதாவது கருத்து மாற்றமும், அந்தந்தக் கால இலக்கியச் சூழலுக்கேற்ப இருந்திருக்கிறது.

3.1.1 காப்பிய காலத்திற்குச் சற்று முற்பட்ட காலத்தில், கிரேக்க அவல நாடகங்களில் இரண்டு பாடல்களுக்கு இடையே அமைக்கப்பட்ட பகுதியைக் கிளைக்கதை என்ற பெயரால் குறிப்பிட்டனர்.[22] இந்தக் கருத்து தமிழுக்குப் பொருந்தாது.

3.1.2 காப்பிய காலத்தில் காப்பிய மையக்கதையினூடே சொல்லப்பட்டிருக்கும் மற்றொரு கதையைக் கிளைக் கதையாகக் குறித்தனர். இந்த எண்ணத்தின் அடிப்படை-

யிலேயே காப்பியக் கிளைக்கதைகளைப் பிரித்து ஆய்தல் வேண்டும்.

3.1.3 இன்றைய புதிய இலக்கிய காலத்தில், நாவலில் வரும் துணை மாந்தர்களின் கதைகள் கிளைக கதைகளாகக் கொள்ளப்படுகின்றன.

இந்த, மூன்று கால எண்ண ஓட்டத்தையும் (three concepts) குழப்பிக்கொள்ளுதல் ஆகாது. நாவல் இலக்கியத்தில் வரும் கிளைக்கதையை ஆய்பவர்கள், காப்பியக் காலக் கருத்தைப் பொருத்தி ஆய்தல் கூடாது. அதுபோலவே, காப்பியக் கிளைக் கதையைப் பற்றி ஆய்வு செய்பவர்களும், இக்கால நாவல் இலக்கிய எண்ணத்தைப் புகுத்தி ஆய்தல் கூடாது. இவற்றைத் தனித்தனியாக அவை வரும் இலக்கிய வகையின் சூழ்நிலையில் ஆராய்தல் வேண்டும்.

**3.2 முந்திய ஆய்வாளர்களிடம் கண்ட சிக்கல்களுக்குக் காரணம்:**

மேற்கூறிய கிளைக் கதைகள் அல்லாத கதைகளைப் பற்றியும், கிளைக்கதைப் பற்றிய மூன்று கால எண்ண ஓட்டத்தையும் அறிந்துகொண்டபின், முந்திய ஆய்வாளர்களிடம், ஆய்வாளர்கள் கண்ட சிக்கல்களுக்குரிய காரணங்கள் புலப்பட்டன. மா.செண்பகம் அவர்களும், எஸ்.இராமகிருஷ்ணன் அவர்களும் நாவலிலக்கிய கால எண்ண ஓட்டத்தைக் காப்பியத்தில் புகுத்திப் பார்த்ததால்தான், துணை மாந்தர் கதைகளையும் கிளைக்கதைகளாகக் குறிப்பிட்ட தவறு புலப்படுகிறது. ச. வே. சுப்பிரமணியம் அவர்கள் உவமையாக வருபவற்றைக் கிளைக்கதைகளின் வகைகளில் ஒன்றான தனிக்கதையாகக் குறிப்பிட்டுள்ள தவற்றிற்குக் காப்பிய உவமையை அவர் கிளைக்கதைகளில் இருந்து வேறுபடுத்திக் காணாததேயாகும். சங்கர்லால் அவர்கள் கற்புக்கரசி எழுவர் வரலாற்றைக் கிளைக்கதையாகச் சுட்டிய தவறு, சிறுஎடுத்-

துக் காட்டுக்களிலிருந்து கிளைக்கதைகளை வேறுபடுத்திக் காணாததேயாகும்.

கிளைக்கதைகளைப் பகுத்துக் காண்பதில் ஏற்படும் சிக்கல்களை, மேலும் தெளிவாக்க, அக்கிளைக் கதைகளுக்குரிய தெளிவான இலக்கணங்களை வரையறுக்கமுயலுதல் வேண்டும். இம்முயற்சியை ஆய்வாளர்கள் மேற்கொண்டபோது, அவர்களுக்குக் கீழ்க்கண்ட விளக்கங்கள் கிடைத்தன.

**4.0 கிளைக்கதைகளின் இலக்கணம் :**

1. தொடர்ந்து விளக்க நடையில் (descriptive) சொல்லப்படும் காப்பிய மையக்கதையினூடே அமையும் ஒரு கதை நிகழ்ச்சி.

2. ஒரு நிகழ்ச்சி அல்லது காட்சி கதைப்படுத்தப்பட்டிருக்கும். அது, வெளிப்படையாகவே பரிணமளித்துத் தோன்றும். அதாவது, கதையானது, படிப்பவரின் ஊகத்திற்கு விடப்படாது, காப்பியப் புலவராலேயே விவரிக்கப்பட்ட தன்மையதாய் அமைந்திருக்கும்.

3. பெரும்பாலும் கூற்றுமுறையில் அமைந்திருக்கும். மிகச்சிறுபான்மை மாறுபட்டும் அமையலாம். கூற்றுக்குரியவராகக் காப்பியப் பாத்திரங்களோ, காப்பியப் பாத்திரமல்லாத தெய்வீகப் பாத்திரங்களோ, காப்பியப் புலவரோ அமைவர்.

4. காப்பியக் கிளைக்கதைகள் நடந்த கதையாகவே அமைந்திருக்கும். பெரும்பாலும் காப்பியம் நடந்த காலத்திற்கு முன்பு நடந்ததாக அமைந்திருக்கும். சிறுபான்மை இடங்களில் காப்பியம் நடந்த காலத்தில் நடத்திருந்தாலும், நடக்கின்ற நிகழ்ச்சியாக அல்லாமல், நடந்த நிகழ்ச்சியாகவே அமைக்கப்பட்டிருக்கும்.

இந்நான்கையும் கிளைக்கதைகளைப் பிரித்தறிவதற்குப் பயன்படும் அடிப்படை இலக்கணமாகக் கொள்ளலாம்.

## 5.0 கிளைக்கதைகளை காப்பியப்புலவன் எடுத்தாளும் நோக்கம்:

காப்பிய உறுப்பாக விளங்கும் கிளைக் கதைகளைப் புலவன் வெற்றெனத் தொடுத்திருக்க முடியாது. ''கிளைக்கதைக்கென கிளைக்கதைகள் வருவதனைப் பழங்கதைகளிலும் இன்றைய காலட்சேபம் என வழங்கும் சொற்பொழிவு வகையிலும் காணலாம்''.[23] இது, மக்களின் கதைகேட்கும் ஆர்வத்தையே காட்டுகிறது. இப்படிக் கதை கேட்கும் நோக்கையே பிரதானமாகக் கொண்டு காப்பியங்களில் கிளைக்கதைகள் எடுத்தாளப்படவில்லை. காப்பியக் கிளைக் கதைகளை ஆராய்ந்தபோது புலவன் கீழ்கண்ட நோக்கங்களுக்காக எடுத்தாண்டுள்ளான் என்பது பெறப்படுகிறது.

### 5.1 தலைமைப் பாத்திரங்களின் பண்பை உயர்த்திக் காட்டுவதற்காக:

சான்று: சிலப்பதிகாரத்தில் மாடலன் கூறும் கோவலனைப் பற்றிய மூன்று கிளைக்கதைகள். சிலம்பின் தலைவனான கோவலனை, கருணை மறவனாக, செல்லாச் செல்வனாக, இல்லோர் செல்வனாக, அவன் பண்பை இக்கதைகள் மிகுவித்துக் காட்டுகின்றன.[24]

### 5.2 காப்பியக் கதைப்போக்கின் தெளிவிற்காக:

படிப்பவர்களிடையே ஏன்? எப்படி? எவ்வாறு? என்ற வினாக்கள், இவ்வகைக் கிளைக்கதைகள் இல்லையெனில் எழக்கூடும்.

சான்று: சிலப்பதிகாரத்தில் கோவலன் கண்ணகி முற்பிறப்புக்கதை. சிலம்பின் நாயகன் இம்மை செய்தது நல்வினையாகவே இருக்க, கொலைத் தண்டனை பெறக் காரணம் யாது எனப் படிப்பவர் மனதில் எழும் வினாவை இக்கிளைக்கதை தெளிவுறுத்துகிறது.[25]

### 5.3 மூலக்கதையின் திருப்பத்திற்கு வழிகோல்வதாக :

சான்று: சிலப்பதிகாரம்: பொற்கொல்லன்கூறும் கதை. பொற்கொல்லன் கூறிய கதையைக் கேட்டுத்தான் கல்லாக் களிமகன் கோவலனைக் கொல்ல, காப்பியத்தின் போக்கு மாறுபடுகிறது.[26]

5.4 காப்பியப் புலவனின் கோட்பாட்டை உணர்த்த: அதாவது, ஒரு சிறப்பான நீதியை அல்லது உண்மையை உணர்த்த, காப்பியப் புலவர்கள் கிளைக் கதைகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

சான்று: மணிமேகலையில், விசுவாமித்திரன் கதை, பசிப்பிணியின் கொடுமையை எடுத்துக்காட்டப் புலவனால் எடுத்தாளப்படுகிறது.[27]

5.5 துணைப் பாத்திரங்களின் அறிமுகத்திற்காகவோ அல்லது துணைப் பாத்திரங்களின் கதை கூறுவதற்காகவோ சில கிளைககதைகள் அமைதல்:

சான்று: சிலப்பதிகாரத்தில் தேவந்தி கதை துணைப் பாத்திரத்தின் அறிமுகமாக அமைந்துள்ளது.[28] மணிமேகலையில் சுதமதி கதை துணைப்பாத்திரத்தின் கதையாகவே அமைந்துள்ளது.[29]

5.6 காப்பியப் பாத்திரத்தின் செயல்பாட்டுக்கு வழிகோல்வதாக அல்லது செயல்பாட்டைத் தடுக்கும் முகமாக:

சான்று: சிலப்பதிகாரத்தில் குரங்குக்கை வானவன் கதை மாதரியை அடைக்கலம் ஏற்சுத்தூண்டுவதாய் அமைந்துள்ளது.[30] மணிமேகலையில் சுதமதிக் கதையின் முற்பகுதி, மேகலை தனித்து மலர் கொய்யச் செய்வதைத் தடுக்கும் முகமாக அமைந்துள்ளது.[31]

5.7 காப்பியப் புலவர்கள் காப்பியத்தில் இடம்பெறும் நாடு நகரங்களைச் சிறப்பிக்கச் சிலகதைகள் வருதல்:

சான்று: சிலப்பதிகாரத்தில் நாளங்காடிப் பூதக்கதை புகாரின் பெருமை பேசுவதற்காக எடுத்தாளப்படுகிறது.[32]

5.8 கதையில் வருவார் நிலையை உடன்பாட்டாலும் எதிர்மறையாலும் விளக்க:[33]

சான்று: இராமாயணத்தில் அகலிகை கதை. அகலிகை, தன் கணவன் என இந்திரனை நினைத்து மயங்கி நிற்பது, சீதை இராவணனிடத்தில் பல துன்பங்களிலும் மயங்காது நின்று தன் பெண்மை காத்த நிலைக்கு முரணாக அமைந்துள்ளது.

சுயம்பிரம்பை கதை; சீதை மாற்றானிடத்துச் (இராவணனிடத்து) சிறைப்பட்ட நிலையில் அனுமன் வந்து விடுவிக்கின்றான். அதற்கு இணையானது சுயம்பிரம்பை சிறையிருந்து அனுமனால் விடுவிக்கப்படுவது.

இவ்வாறு, பற்பல நோக்கங்களுக்காகக் காப்பியப் புலவர்களால் கிளைக்கதைகள் எடுத்தாளப்படுகின்றன. அன்றியும், ''பிற இலக்கிய வகைகளைக் காட்டிலும் காப்பியங்களில் கிளைக்கதைகள் மலிந்திருப்பதற்குக் காரணம் அதன் நெகிழ்வான கட்டமைப்புத் தன்மையாகும். நடிப்பின் துணையின்றி, கதை கூற்று முறையில் புலவன் கதையை நடத்திச் செல்வதால், காப்பியத்தில் கிளைக்கதைகளைப் படைக்க முடிகிறது.[34]

## 6.0 காப்பியக் கிளைக்கதை மையக்கதையுடன் இணைக்கப்படும் உத்தி

காப்பியக் கிளைக்கதைகள் சிறப்பாக இருவழிகளில் மையக்கதையுடன் இணைக்கப்படுகின்றன. புலவர் கூற்று-மூலமும், பாத்திரக் கூற்று மூலமும் பெரும்பான்மையான கிளைக்கதைகள் மையக்கதையுடன் இணைக்கப்படுகின்றன. கூற்று முறையில் அல்லாது சொல்லப்படும் மிகச் சில கிளைக்கதைகள், காப்பியப் பாத்திர நினைவோட்டத்தால் மையக் கதையுடன் தொடர்பு படுத்தப்படுகின்றன.

### 6.1 புலவர் கூற்றுத் தொடர்பு:

காப்பியப் புலவன் தானே கிளைக்கதையைச் சொல்வது

தமிழ்க்காப்பியங்களில் அருகிக் காணப்படுகிறது. சிலப்பதிகாரத்தில் தேவந்தி கதை ஒன்றுதான் காப்பியப் புலவரால் சொல்லப்படுகிறது. அக்கதை துணைப் பாத்திர அறிமுகத்திற்காக எடுத்தாளப்படுகின்ற கதை; ஆதலால் காப்பியப் புலவராலேயே சொல்லப்படுகிறது.

### 6.2 பாத்திரக் கூற்றுத் தொடர்பு:

இதை ஆறு வகையாகப் பிரிக்கலாம்.

1. நிகழ்ச்சித் தொடர்பு
2. பாத்திரத் தொடர்பு
3. பாத்திரக் கூற்றுத் தொடர்பு
4. காப்பியத்தில் இடம் பெற்றுள்ள ஊர், ஆறு சம்பந்தபட்டத் தொடர்பு
5. காப்பியம் பேசும் சமயத் தொடர்பு
6. காப்பியப் பாவிகத் தொடர்பு

இந்த ஆறு வகையும் பாத்திரக்கூற்றாக அமைந்திருக்கும். அவற்றில் மூன்றாவது குறிப்பிட்ட வகையைத் தவிர, மற்ற ஐந்தும் பாத்திரக்கூற்றாக வந்தாலும், அந்த இணைப்பைக் காட்டிலும், அவற்றில் முறையே நிகழ்ச்சித்தொாடர்பு, பாத்திரத் தொடர்பு, ஊர் ஆறு சம்பந்தப்பட்ட தொடர்பு, சமயத் தொடர்பு, பாவிகத் தொடர்பு இவைகளே அதிக இணைப்பைத் தருவதால், அவைகளைப் பாத்திரக் கூற்றுத் தொடர்பு என்ற மூன்றாவது வகையில் அடக்கவில்லை. ஆனால், மூன்றாவது பிரிவில், கூற்றுத் தொடர்பு ஒன்றே மையக் கதையுடன் கிளைக்கதையை இணைப்பதால் இவ்வகைக் கதைகள் 'பாத்திரக்கூற்றுத் தொடர்பு' என்ற வகையில் அடக்கப்பட்டுள்ளது.

#### 6.2.1 நிகழ்ச்சித் தொடர்பு:

காப்பிய மையக்கதை ஓட்டத்தில் ஒரு நிகழ்ச்சி நடக்க, அந்நிகழ்ச்சியின் முன்பாங்கை விளக்குமுகமாக்ச் சில கிளைக்கதைகள் இணைக்கப்பட்டிருக்கும்.

சான்று: கம்பராமயணத்தில் அகலிகைக்கதை, இராமன் கால் துகள் பட்டுக் கல்வடிவம் உயிர்பெற்று எழ, அதுகண்டு, காரணம் வினவி நின்ற இராமனுக்கு விசுவாமித்திரர் அகலிகை வரலாற்றைக் கூறுவதாக அக்கிளைக்கதை மூலக் கதையுடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளது.

### 6.2.2 பாத்திரத் தொடர்பு:

சில கிளைக்கதைகளில் காப்பியத் தலைமை மாந்தரோ, காப்பியத் துணை மாந்தரோ இடம் பெறுவர். இதனால் மையக் கதையும், கிளைக் கதையும் இயல்பாகத் தொடர்புபடுத்தப்பட்டுவிடுகின்றன.

சான்று: சிலம்பில் தேவந்திகதை துணைமாந்தர் கதையாகவும்[35], கண்ணகி கதை தலைமை மாந்தர் கதையாகவும்[36] அமைந்திருக்கின்றன.

### 6.2.3 பாத்திரக் கூற்றுத் தொடர்பு:

காப்பியத் தலைமைப் பாத்திரங்களோ, துணைப் பாத்திரங்களோ சொல்வதாய்ச் சில கதைகள் அமைந்திருக்கும். மையக்கதையில் சில நிகழ்ச்சிகளை நடத்துவிக்கவோ அல்லது ஏதாவது ஒரு பாத்திரத்தின் பண்பை உயர்த்துவதற்கோ இக்கிளைக்கதைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

சான்று: சிலம்பில் குரங்குக்கை வானவன் கதை காப்பியத் துணைமாந்தரான கவுந்தியடிகளால் சொல்லப்படுவதால், மையக்கதையுடன் அக்கிளைக்கதை இயல்பாக ஒன்றித்திகழ்கிறது[37].

### 6.2.4 காப்பியத்தில் இடம்பெறும் ஊர், ஆறு சம்பந்தபட்ட தொடர்பு:

காப்பியக் கதை நடப்பதாகக் கூறப்படும் நகரம் அல்லது அதன் ஆறு, சோலை போன்ற சிறப்பு மிகுந்த இடங்களின் கதையாகச் சில கிளைக்கதைகள் அமைந்திருக்கின்றன.

சான்று: சிலப்பதிகாரத்தில் கதை தொடங்கும் நகரான புகாரில் உள்ள நாளங்காடிப் பூதக்கதை புகாரின் சிறப்பு பேசவே காப்பியத்தில் எடுத்தாளப்பட்டிருக்கிறது. காப்பியக்கதை நடக்கும் புகார் பற்றிய கதை ஆதலால் தொடர்புடையதாக அமைந்துவிடுகிறது.[38]

### 6.2.5 காப்பியம் பேசும் சமயத் தொடர்பு

காப்பியப் புலவன் தான் பேச விரும்பும் சமயத்தை மையக்கதையுடன் புகுத்திப் பேசுவது போல், கிளைக்கதையிலும் பேசுவான். மையக்கதை பேசும் சமயத்தைக் கிளைக்கதையும் பேசுவதால் காப்பியத்துடன் அக்கிளைக் கதை தொடர்புடையதாகிறது.

சான்று: மணிமேகலையின் மையக்கதை பௌத்தமதக் கொள்கை பேசும். சாத்தனாரும் சக்கரவாளக கோட்டக் கதையைப் பௌத்தம் பேசுவதாய் அமைத்து மூலக்கதையுடன் தொடர்புபடுத்தி விடுகிறார்.[39]

### 6.2.6 காப்பியப் பாவிகத் தொடர்பு

காப்பியம் பேசும் பாவிகத்தை விளக்கும் முகமாகச் சில கதைகள் மையக் கதையுடன் இணைக்கப் பட்டிருக்கின்றன.

சான்று: கம்ப ராமாயணத்தின் பாவிகம் 'அறம் வெல்லும் பாவம் தோற்கும்' என்பதே. இரணியன்கதை இப்பாவிகத்தையே விளக்கி நின்று காப்பியத்தில் தொடர்புடையதாக அமைகிறது.

## 7.0 கிளைக்கதைகளின் வகைகள்

காப்பியக் கிளைக்கதைகளை வகைப்படுத்திக் கண்டால் கிளைக்கதை பற்றிய தெளிவு ஏற்படும். கிளைக்கதைகளை, அவற்றின் பயன்பாட்டை ஒட்டி வகைப் படுத்தலாம். அவற்றின் தன்மை கருதி வகைப்படுத்தலாம். அவை, காப்பியத்துடன் இணையும் பாங்கைக் கொண்டு வகைப்படுத்தலாம்.

### 7.1 பயன்பாட்டை ஒட்டி வகைப்படுத்தல்

காப்பியத்தில், கிளைக்கதைகள், அதன் ஓட்டத்திற்கோ பாத்திரத்திற்கோ பயன்படும் விதத்தில் அவைகளை,

1. ஒன்றிய கிளைக்கதை
2. ஒட்டிய கிளைக்கதை
3. ஊன்று கிளைக்கதை

என முப்பிரிவாக வகைப்படுத்தலாம்.

#### 7.1.1 ஒன்றிய கிளைக் கதை

இவ்வகைக் கிளைக்கதை, மையக் கதையின் ஓட்டத்தைத் திசைதிருப்பும்; அல்லது மையக்கதைத் தலைவன், தலைவியின் வாழ்க்கைப் போக்கில் இக்கதைகள் மாறுதலை உண்டாக்கும்.

சான்று: சிலப்பதிகாரத்தில், பொற்கொல்லன் கூறும் கதை கோவலன் வாழ்வினைப் போக்குவதுடன், காப்பிய ஓட்டத்தையும் திசை திருப்புகிறது. இவ்வகைக் கிளைக்கதை மிகச் சிறுபான்மையாகவே காப்பியத்தில் காணப்படும்.[40]

#### 7.1.2 ஒட்டிய கிளைக் கதை

மையக்கதையின் விளக்கத்திற்காக இவ்வகைக் கிளைக்கதைகள் எடுத்தாளப்பட்டிருக்கும்; அல்லது சில பாத்திரங்களைப் புரிந்து கொள்ள இக்கதைகள் உதவி செய்யும். காப்பியத் தலைவன், தலைவியின் வாழ்க்கையோடு இவ்வகைக் கதைகள் சம்பந்தப்பட்டிருக்கும்.

சான்று: 1) மாடலன் கூறும் கோவலன் பற்றிய மூன்று கிளைக்கதைகள்

2) கோவலன்-கண்ணகி முற்பிறப்புக் கதை

#### 7.1.3 ஊன்று கிளைக் கதை

மையக்கதையின் போக்கில் ஆங்காங்கு ஊன்றுகோல்

போலத் துணைநிற்க வரும் கதைகளை ஊன்று கிளைக்கதை-கள் என்று கூறலாம். இக்கதைகள் பெரும்பாலும் எடுத்துக்-காட்டுக் கதைகளாகவே அமைந்திருக்கும். இதன் பயன் காப்பியத்தில் அச்சூழலிலேயே முடிந்துவிடும். காப்பியத்தில் இவ்வகைக் கிளைக்கதையின் பங்கும் மிகக் குறைந்ததே.

சான்று: 1. குரங்குக்கை வானவன் கதை
2. பொற்கைப் பாண்டியன் கதை

சிலம்பில் குரங்குக்கை வானவன் கதை அடைக்கலச் சிறப்பு பேசுவதற்காக எடுத்தாளப்பட்டு, அதன் பயன் மாதரி கண்ணகியை அடைக்கலம் ஏற்றுக் கொண்ட சூழலிலேயே முடிந்து விடுகிறது. அதுபோல், பொற்கைப் பாண்டியன் கதை, பாண்டியர் பெருமையை எடுத்துக்காட்ட மட்டுமே பயன்படுகிறது.

## 8.0 தன்மையை ஒட்டி வகைப்படுத்தல்

கிளைக் கதைகளை அவற்றின் தன்மையை ஒட்டி உபகதை, தனிக்கதை என இரண்டாக வகைப்படுத்த லாம். டாக்டர் ச. வே. சுப்பிரமணியம் இப்பிரிப்புமுறை-யையே துணைக்கதை, தனிக்கதை எனத்தன் நூல்களில் எடுத்துக் காட்டியுள்ளார்.[41] உபகதை என்பது காப்பியப் பாத்திரங்களுடன் தொடர்புடையது. தனிக்கதை என்பது எடுத்துக்காட்டுக் கதையாக வரும். இது, காப்பியப் பாத்-திரங்களுடன் கூற்றளவில் மட்டுமே தொடர்புடையதாக அமைந்திருக்கும்.

சான்று:
உபகதை: தேவந்தி கதை
தனிக்கதை: குரங்குக்கை வானவன் கதை

## 9.0 இணைவை ஒட்டி வகைப்படுத்தல்

காப்பிய மையக்கதையுடன் கிளைக்கதை இணைந்துள்ள பாங்கை ஒட்டி

1. செறிவுக் கிளைக்கதை

2. நெகிழ்வுக் கிளைக்கதை

என இருவகையாக வகைப்படுத்தலாம்.

**9.1 செறிவுக் கிளைக்கதை:** இவ்வகைக் கிளைக்கதை காப்பிய மையக்கதையுடன் அதிகத் தொடர்புடையதாக அமைந்திருக்கும். நிகழ்ச்சித்தொடர்பு, பாத்திரத்தொடர்புடைய கிளைக்கதைகளைச் செறிவுக்கிளைக்கதைகள் எனலாம்.

**9.2. நெகிழ்வுக் கிளைக்கதை:** இவ்வகைக் கதைகள், மையக்கதையுடன் மிகக் குறைந்த தொடர்புடையனவாக அமைந்திருக்கும். காப்பியப்பாத்திரங்கள் (தலைமைப்பாத்திரங்கள் அல்லது துணைப்பாத்திரங்கள்) இவ்வகைக்கிளைக்கதையில் இடம்பெற மாட்டார்கள். பாத்திரக் கூற்றுத் தொடர்பு, காப்பியத்தில் இடம்பெறும் ஊர், ஆறு சம்பந்தப்பட்ட தொடர்புடைய கிளைக் கதைகளை நெகிழ்வுக் கிளைக்கதைகள் எனலாம்.

சான்று: குரங்குகைகை வானவன் கதை. சிலப்பதிகாரத்தில் மையக்கதையில் இடம்பெறும் துணை மாந்தரான கவுந்தி அடிகளின் கூற்றில் இக்கதை அமைந்திருக்கிறது.

தன்மையை ஒட்டி வகைப்படுத்துவதும், இணைவை ஒட்டி வகைப்படுத்துவதும், முதலில் கூறப்பட்ட பயன்பாட்டை ஒட்டி வகைப்படுத்துவதிலே அடங்கி விடுவதால், அப்பிரிவையே காப்பியக் கிளைக் கதைகளைப்பற்றி ஆராயப் பயன்படுத்தலாம். இம்முறை தெளிவானதும் செறிவானதும் ஆகும்.

## அடிக்குறிப்புகள்

1. செண்பகம். மா., **தமிழ்க் காப்பியங்கள்**, பக் : 24.

2. நடக்கப் போவதைக்கதைப்படுத்திக் கிளைகக்கதை யாக எடுத்தாளும் போக்கு வடமொழிக் காப்பியங்களின் மட்டும் காணப்படுகிறது. தமிழ்க் காப்பியங்களிலே இப்போக்கு அறவே கிடையாது.

3. பாண்டுரங்கன். அ., கம்பராமாயணமும் காப்பியக் கொள்கையும், பக் : 277.

4. மேலது., பக் : 278.

5. "An incident, Scene, etc within a narrative"

— The Randam House Dictionary of the English Language.

6. "...Separable form, but arising naturally out of the main Subject"

—The Shorter Oxford English Dictionary

7.' 'An incidental passage in a Person's life"

— The Oxford English Dictionary. Pa. 245.

8. " It is sometime closly related to the Plot"

— Scott. A. F. *Current Literary Terms* Pa. 95.

9. பாண்டுரங்கன். அ., கம்பராமாயணமும் காப்பியக் கொள்கையும், பக் 277.

10. வையாபுரிப்பிள்ளை. எஸ்., காவிய காலம், பக்: 282.

11. சுப்பிரமணியம். ச. வே., சிலம்பும் சிந்தாமணியும், பக் : 227.

12. சுப்பிரமணியம். ச வே., காப்பியப் புனைதிறன் பக் : 76-77.

13. செண்பகம். மா., தமிழ்க்காப்பியங்கள், பக்: 24-29.

14. சங்கர்லால்.கே.பி., சிலப்பதிகாரத் திறனாய்வு, பக்:434-6

15. நாளங்காடிப் பூதக்கதை, திருமாவளவன் வெற்றி, ஊர்வசி கதை, குரங்குக்கை வானவன் கதை, பொய்த்தொழில் கொல்லன் புனையும் பழைய அரண்மனைத்திருட்டு, மதுராபுரித் தெய்வம் உரைக்கும் ஊழ்வினை பற்றிய கோவலன்

முற்பிறப்புக்கதை, பொற்கைப் பாண்டியன் கதை, பராசுரன் கதை - ஆகியவற்றைச் சங்கர்லால் கிளைக்கதைகள் எனக் காட்ட [பக் : 46-57], மா. செண்பகம் இவைகளைப் பழங்கதைகளாக எடுத்துக்காட்டுகிறார். [பக் : 29-30]

16. செண்பகம். மா., தமிழ்க் காப்பியங்கள், பக் : 28 அட்டவணைப் பகுதி.

17. இராம கிருஷ்ணன். எஸ்., கம்பனும் மில்ட்டனும் ஒரு புதிய பார்வை, பக் : 194, 195.

18. சுப்பிரமணியன். ச. வே., காப்பியப் புனைதிறன், பக்: 76.

19. மணிமேகலை, 3 : 146-148.

20. சிலப்பதிகாரம், 17 : பாட்டு : 2

21. சிலப்பதிகாரம், 20 : 51-56.

22. "In the old Greek tragedy, the interlocatory parts between two choric songs, because these were originally inter polations"
—The Oxford English Dictionary, P. 245.

23. மீனாட்சி சுந்தரனார் தெ. பொ., குடிமக்கள் காப்பியம், பக் : 121.

24. சிலப்பதிகாரத்தில் கிளைக்கதைகள் என்ற தலைப்பின்கீழ் 2.4.5-இல் இதுபற்றிக் காண்க.

25. மேலது., 2.4-இல் இது பற்றி விரிவாகப் பேசப்பட்டுள்ளது.

26. மேலது., 2.4-இல் இதுபற்றிப் பேசப்பட்டுள்ளது.

27. மணிமேகலையில் கிளைக்கதைகள் என்ற தலைப்பில் 3.4-இல் இது பற்றிய கருத்தைக் காண்க.

28. சிலப்பதிகாரத்தில் கிளைக்கதைகள் என்ற தலைப்பின்கீழ் 2.4-இல் இதுபற்றிப் பேசப்பட்டுள்ளது.

29. மணிமேகலையில் கிளைக்கதைகள் என்ற தலைப்பின்கீழ் 3.1.3-1, 1.2-இல் இதுபற்றிக் காண்க.

30. சிலப்பதிகாரத்தில் கிளைக்கதைகள் என்ற தலைப்பின்கீழ் 2.4.6-இல் இதுபற்றிய விளக்கத்தைக் காண்க.

31. மணிமேகலையில் கிளைக்கதைகள் என்ற தலைப்பின் கீழ் 3.1-இல் இது பற்றிக் காண்க.

32. சிலப்பதிகாரத்தில் கிளைக்கதைகள் என்ற தலைப்பில் 2.4.1-இல் இதுபற்றிய கருத்தைக் காண்க.

33 காப்பிய மையக்கதை நிகழ்ச்சிக்கு அழுத்தம் தர, அது போன்று ஒரு நிகழ்ச்சியையோ, அதற்கு மாறுபட்ட நிலையில் ஒரு நிகழ்ச்சியையோ, கிளைக்கதையாகப் படைத்துக் காட்டுவர் சாப்பியப் புலவர்கள். இதைத்தான் காப்பிய இணை என்றும், காப்பிய முரண் என்றும் குறிப்பிடுவர்.

34. பாண்டுரங்கன். அ., கம்பராமாயணமும் காப்பியக் கொள்கையும், பக் : 278.

35. சிலப்பதிகாரத்தில் கிளைக்கதைகள் என்ற தலைப்பில் 2 4.3-இல் இக்கதை பற்றிய விளக்கத்தைக் காண்க.

36 மேலது., 2.4.10-இல் காண்க.

37. மேலது., 2.4.6-இல் காண்க.

38. மேலது.,2.4.1-இல் காண்க.

39. மணிமேகலையில் கிளைக்கதைகள் என்ற தலைப்பில் 3.4.3-இல் இதுபற்றிய விளக்கத்தைக் காண்க.

40. சிலப்பதிகாரத்தில் கிளைக்கதைகள் என்ற தலைப்பில் 2.4.7-இல் காண்க.

41. சுப்பிரமணியன் ச.வே., காப்பியப் புனைதிறன், பக்; 76 மீனாட்சி சுந்தரம்; கா., சிலம்பில் துணைப்பாத்திரங்கள் என்ற நூலில் பாத்திரங்களை வகைப்படுத்தியுள்ள தன்மையை ஒட்டி, இங்குக் காப்பியக் கிளைக்கதைகள் பிரிக்கப்பட்டுள்ளன.

—oOo—

# 2

## சிலப்பதிகாரத்தில் கிளைக்கதைகள்

2.1 தமிழ்க் காப்பிய முன்னோடியான இளங்கோவடிகள் படைப்பான சிலப்பதிகாரத்தில், கோவலன் கண்ணகி மாதவி ஆகியோரின் வாழ்க்கைப் போராட்டக் கதையையே மையக் கதையாக அமைத்துள்ளார். கண்ணகி கோவலன் திருமண வாழ்வில் தொடங்கும் மையக்கதை கண்ணகி தெய்வமாகக் கொண்டாடப்படுவதுடன் முடிவடைகிறது. இடையில் கோவலன் கண்ணகியைப்பிரிந்து மாதவியை நாடுவது வளர்ச்சியாகவும், கோவலனும் கண்ணகியும் மதுரைக்குக் செல்வது உச்சகட்டமாகவும், கோலவன் கொலையுறுவது வீழ்ச்சியாகவும் அமைந்து சிறக்கிறது.[1] இம் மையக்கதை கோவலன், கண்ணகி, மாதவியைத் தலைமை மாந்தர்களாகவும், தேவந்தி, கவுந்தி, மாடலன், பாண்டியன் பொற்கொல்லன் செங்குட்டுவன் ஆகியோரைத் துணை மாந்தர்களாகவும், மாங்காட்டு மறையோன், மாதரி, ஐயை, வேண்மாள், கோப்பெருந்தேவி போன்றவர்களைச் சிறு பாத்திரங்களாகவும் கொண்டு திகழ்கிறது.[2]

2.2. சிலப்பதிகார மையக்கதை கடலில் கலக்கும் சிற்றாறுகளென, பல கிளைக்கதைகள் இடையிடையே சேர்ந்து காப்பியத்தை உலகம் தழுவியதாக்குகின்றது. பதினாறு கிளைக்கதைகள், கோவலன் கண்ணகி வாழ்க்கைக் கதையில்

இணைந்துநின்று, மூலக்கதைக்குத் திருப்பத்தையும், அழுத்தத்தையும், தெளிவையும் சிறப்பையும் தந்து நிற்கின்றன. துணைப்பாத்திரத்தின் கதைகள், ஊர்ப் பெருமை பேசும் கதைகள், புராணக் கதைகள், முற்பிறப்புக் கதைகள் என்று பல வகையான கிளைக்கதைகள் சிலப்பதிகாரத்தில் பயின்று வருகின்றன. இக்கிளைக்கதைகள் காப்பியக்கதை மாந்தர்களின் வீரச் செயல்களையும், பல்வேறு சிறப்புக்களையும், நீதிக்கருத்துக் களையும் கற்போர் மனங்கொள்ளுமாறு விளக்கவல்லன.

2.3 சிலப்பதிகாரத்தில் மையக்கதையையும், கிளைக்கதைகளையும் தவிர, பல துணைக்கதைகளும் பயின்று வருகின்றன. இத்துணைக் கதைகள் பின்னணி விளக்கமாகவும், பரவுமொழியாகவும், சான்றாகவும், வர்ணனையாகவும், உவமையாகவும் நின்று காப்பியத்தைச்சிறப்பிக்கின்றன. இத்தகைய துணைக்கதைகளைக் கிளைக்கதைகளினின்று பிரித்துக்காண்பது இன்றியமையாத ஒன்றாகும். துணைக்கதைகளின் பயன்பாடு அவை பயின்று வரும் சூழலிலேயே முடிந்து விடுகிறது. சிலப்பதிகாரத்தில் மொத்தம் 61 இடங்களில் துணைக்கதைகள் எடுத்தாளப்பட்டிருக்கின்றன.[3] அவற்றில் 43 கதைகள் புராணக் கதைகளாகவும், 11 கதைகள் வரலாற்றுக் கதைகளாகவும், 7 கதைகள் நாட்டுப்புறக் கதைகளாகவும் காணப்படுகின்றன. புராணக்கதைகளிலும் திருமாலின் அவதாரக்கதைகளே பெருமளவில் இடம் பெறுகின்றன. வரலாற்றுக் கதைகளில் சிபி, மனு வரலாறு திரும்பத் திரும்ப எடுத்தாளப்பட்டிருக்கின்றன.

## 2.4 கிளைக்கதைகளும் இடம்பெறும் காதைகளும்

| எண் | கிளைக் கதைகள் | காண்டம் | காதை | அடிகள் |
|---|---|---|---|---|
| 1. | நாளங்காடி பூதக்கதை | புகார் | கடலாடு காதை | 7—13 |
| 2. | ஊர்வசி சாப வரலாறு | புகார் | ,, ,, | 18—25 |
| 3. | தேவந்தி பற்றிய கிளைக்கதை | புகார் | கனாத்திறமுரைத்தகாதை | 4—40 |
| 4. 5. 6. | மாடலன் கூறும் கோவலனைப் பற்றிய கதைகள் | மதுரை | அடைக்கலக்காதை | 20—92 |
| 7. | குரங்குக்கை வானவன் கதை | மதுரை | ,, ,, | 149—200 |
| 8. | அரண்மனையில் திருட்டு பற்றிய கதை | மதுரை | கொலைக்களக்காதை | 190—202 |
| 9. | பொற்கைப் பாண்டியன் கதை | மதுரை | கட்டுரை காதை | 41—47 |
| 10. | பராசுரன் கதை | மதுரை | ,, ,, | 55—131 |
| 11. | கோவலன் முற்பிறப்புக் கதை | மதுரை | ,, ,, | 137—170 |
| 12. | கண்ணகி கதை | வஞ்சி | காட்சிக் காதை | 66—92 |
| 13. | மணிமேகலை துறவு பூண்ட வரலாறு | வஞ்சி | வரந்தரு காதை | 10—37 |
| 14. | கோவலன், கண்ணகி தாய்மார்களின் முற்பிறப்புக் கதை | வஞ்சி | ,, ,, | 120—140 |
| 15. | தேவந்தி பற்றிய கிளைக் கதை | வஞ்சி | ,, ,, | 74—87 |
| 16. | இளங்கோ அரசு துறந்த வரலாறு | வஞ்சி | ,, ,, | 171—183 |

### 2.4.1 நாளங்காடி பூதக் கதை

வெள்ளிமால் வரை வாழ் விச்சாதரன், தன் காதலி-யுடன் இந்திரவிழா காணப் புகார் வருகிறான். அப்பொழுது, தன் காதலியுடன் சிறப்புமிக்க புகாரில், காணத் தகுந்த இடங்கள் பல இருக்கின்றன என அவள் மனங்கொள்ளுமாறு எடுத்துரைக்கின்றான். இவை இவை பார்க்கத்தகுந்த இடங்-கள் என்றுமட்டும்சுட்டாது, அவ்விடங்களின் பின்னணியோடு தன் காதலிக்குச் சுவைபடக் கதையாக விளக்குகின்றான். புகாரில் காணக்கூடிய ஒன்றாக நாளங்காடிப் பூதத்தைச்சுட்-டுகிறான். முசுகுந்தன் என்ற சோழமன்னன் அப்பூதத்தை இந்திரனிடமிருந்து பெற்றவிதத்தைப் பேசுவது, இக்கதை. இக்கிளைக்கதை ‘ஊர்ப்பெருமை’ பேசும் நோக்கிலேயே எடுத்தாளப்பட்டிருக்கிறது. புகாரை, செல்வச் செழிப்பினை-தாக, அரும்பொருள் காட்சியகமாகப் பேச நினைத்த அடி-கள், அதனைத் தன் கூற்றாக அல்லாமல் விச்சாதரன் கூற்-றாக அமைத்துள்ளார். இக்கிளைக்கதை மையக்கதைக்குத் தேவையில்லாத ஒன்று. தவிர, இதில் காப்பியப் பாத்திரங்-கள் இடம் பெறவில்லை. பழம்பெருமை பேசும் நோக்கு-டனே, அதாவது புகாரின் சிறப்பைப் பேசும் நோக்குடனே இக்கதை அமைக்கப்பட்டிருப்பதால், காப்பியத்தில், இது ஒரு ஊன்று கதையாகவே அமைந்துவிடுகிறது.

### 2.4.2 ஊர்வசி சாப வரலாறு

முதல் கதையில் ஊரின் பெருமை பேசிய அடிகள், இரண்-டாவது கதையில், அவ்வூரின் நடன நாயகியாம் மாதவியின் உயர்வைப் பேசுகிறார். மாதவி, ஊர்வசியின் பரம்பரை-யினள் என்பதை இக்கதை வாயிலாகவே அடிகள் நமக்கு உணர்த்துகிறார். இக்கதையும் விச்சாதரன் கூற்றாகவே அமைந்திருக்கிறது. அகத்தியர் சாபத்தால் ஊர்வசி நில-வுலகில் மாதவியெனப் பெயர்பெற்று, கணிகையர் குலத்தில்

பிறந்தாளெனவும், அம்மாதவியின் வழிவந்த மாதவி இவ-ளெனவும் தன் காதலிக்கு விச்சாதரன் எடுத்துரைக்கிறான். மாதவியின் பாத்திர அறிமுகத்தின்போது வர்ணனையாக இக்கதையை அடிகள் சொன்னாலும், திரும்பவும் ஒரு கிளைக்கதையாக இக்கதையைச் சொல்லக் காரணம் உண்டு. இக்கதையைத் திரும்பச் சொல்வதின் மூலம் மாதவியின் பாத்திரத்தை உயர்த்தியிருக்கிறார், அடிகள். புகாரின் சிறந்த நடனநாயகி என்றும், வெளியிடத்தவரும் வந்து காணத்தகுந்த நடனக்கலைச் சிறப்பினையும், அவர்கள் வியந்து போற்றும் குலமரபினையும் பெற்றவள் என்று மாதவியைக் காட்டி, இப்படிப்பட்டவளைப் பின்னால் கோவலன் அடையப்போகிறான் என்பதை உணர்த்துகிறார். காப்பியத் தலைமை மாந்தர்களில் ஒருத்தியான மாதவியின் குல வரலாறு பேசினாலும் இக்கதையின் பயன்பாடு இவ்-விடத்திலேயே நிறைவு பெற்றுவிடுவதால், இதுவும் ஒரு ஊன்று கதையாகவே திகழ்கிறது.

### 2.4.3 தேவந்தி பற்றிய கிளைக் கதைகள்

இக்கதை தேவந்தி என்ற துணைப்பாத்திரத்தின் கதை. அவள் கதை என்பதைவிட, அவள் புகுந்த வீட்டுக்கதை என்பது பொருந்தும். தேவந்தி இக்கிளைக் கதையின் முடிவில் அறிமுகப்படுத்தப்படுகிறாள். 'மேல் ஒரு நாள்' எனக் கதையைத் தொடங்குகிறார், அடிகள். சிலப்பதி காரத்தில் இக்கதை ஒன்றே புலவர் கூற்றாக அமைந்துள்ளது. கேட்போர் வாசகர்களே. தேவந்தியை அறிமுகப்படுத்தும் நோக்கில் இக்கதை கூறப்படுவதால், இது ஆசிரியர்கூற்றில் அமைந்துள்ளதே பொருத்தம் உடையதாகும். காப்பியப்-பாத்திரங்களில் தேவந்தி பற்றி நன்கு அறிந்தவள், அவள் தோழியான கண்ணகிதான். அவள்தான், இக்கதையைக் கூற முடியும். ஆனால், அவள் இருக்கும் ஆற்றாமை நிலை-யில் கதை கூறுவதாக, அதிகம் பேசுபவளாகக் காட்டினால்

அது சிறக்காது. ஆகையால், அடிகள், தானே கதை கூறு-வதாக அமைந்திருப்பது மிகப் பொருத்தமுடையதாகும். இக்கிளைக்கதை துணைப்பாத்திர அறிமுகத்திற்கும், அத்-துணைப் பாத்திரத்தின் வாழ்க்கைப் பின்னணியைக் காட்டு-வதற்கும் அடிகளால் பயன்படுத்தபட்டுள்ளது. தேவந்தி பாத்திரத்தையே நாம் இக்கதைப்பின்னணியில்தான் புரிந்து கொள்ள முடிகிறது என்பதால் இக்கதையை 'ஒட்டிய கிளைக்கதை' என்ற வகையில் அடக்கலாம்.

2.4.4 இதே 'தேவந்திகதை' பின்னால் வஞ்சிக்காண்-டத்திலும் கிளைக்கதையாக எடுத்தாளப்படுகிறது. வரந்-தரு காதையில் செங்குட்டுவனுக்கு, மாடலன் கூறுவதாக இக்கிளைக் கதை இடம்பெறுகிறது. ஒரே கிளைக்கதையைக் காப்பியத்தில் இருவேறு இடத்தில், இருவேறு பயன்பாடு கருதி எடுத்தாண்டுள்ளார், அடிகள். தேவந்தி பற்றி யாதும் அறியாதவன் குட்டுவன். அவள் கண்ணகியைப் பற்றிப் புலம்புவதும், அவள் சம்பந்தப்பட்டவர்களைப் பற்றி அறிந்து வைத்திருப்பதும், அவனுக்கு வியப்பை அளிக்கிறது. தவிர, தெய்வம் அவன்மேல் ஏறிப் பேசுவது கண்டும் திகைத்து நிற்கிறான். ஆக, தேவந்தி பற்றி யாதும் அறியாத குட்டுவன் கேட்க, முன்பே சாத்தனுடன் தொடர்புடைய மாடலன் இககதையைக் கூறும் பொருத்தம் சிறப்புடையது. குட்டுவன் பின்னுல் தேவந்தியைக் கண்ணகிக்கு, பூஜை செய்பவளாகப் பணிக்கப் போகிறான். அந்நிலையில், அவள் வரலாறு அறிந்து, அதைச் செய்வது பொருத்தமாக அமையும் என‌ற நிலையிலும், குட்டுவன், நடக்கும் யாவை-யும் கண்டு ஒன்றும் புரியாமல் திகைத்து நின்ற நிலையிலும், அவன் திகைப்பை நீக்க, இக்கிளைக்கதையை இரண்டாவது முறையாக அடிகள் எடுத்தாள்கிறுர். காப்பிய முடிவில் பேசப்படும் இககதையின் பயன் குட்டுவன் கேட்பதுடன் முடிந்து விடுவதால், இதை ஊன்று கதையாகவே கொள்ள முடிகிறது.

### 2.4.5 மாடலன் கூறும் கோவலன் பற்றிய மூன்று கிளைக் கதைகள் :-

மறை ஓதும் அந்தண முதல்வனான மாடலன் என்பான், கோவலன் வாழ்வினுள் நிகழ்ந்த மூன்று முக்கிய நிகழ்ச்சிசளைக்கூறுவது மூன்று கிளைக்கதைகளாக அமைந்துள்ளன. இவை மூன்றும் கோவலன் பற்றிய செய்திகள் என்றாலும், நடக்கின்ற ஒன்றாகக் காட்டாமல், நடந்த ஒன்றாகக் காட்டும் விதத்திலும், கதைப்படுத்திக் கூறும் கூற்றினாலும் கிளைக்கதைகளாகக் கொள்ளப்படுகின்றன. மூன்று கிளைக்கதைகளுமே கோவலன் வாழ்நாளில் செய்த நற்செயல்களைப் பற்றியே பேசுகின்றன.

கோவலனை (1) மடக்களிறு அடக்கிய கருணை மறவனாக, (2) ஒல்காச் செல்வத்து உறுபொருள் கொடுத்து நல்வழிப்படுத்திய செல்லாச் செல்வனாக (3) படிற்றுரை கூறிய பாதகனுக்கும் இரங்கி அவன் இளைஞரின் பசிப்பிணி அறுத்துப் பல்லாண்டு புரந்த இல்லோர் செம்மலாக, இதுவரை நாம் காணாத கோவலனாக அடிகள் இக்கிளைக் கதைகளின் வாயிலாகப் படைத்துக் காட்டியுள்ளார்.

மாடல மறையோன் என்ற துணைப் பாத்திரத்தின் மூலம் இம்மூன்று கிளைக்கதைகளையும் அடிகள் எடுத்துரைக்கிறார். மாடலன் 'நலம்புரிக் கொள்கை மாமறை முதல்வனாக' அடிகளால் அறிமுகப்படுத்தப்படுகிறான். தவிர, குமரி முதல் இமயம் வரை செல்பவனாகவும், நாட்டில் நடக்கும் முக்கிய நிகழ்ச்சிகளை அறிந்து வைத்திருப்பவனாகவும், பின்னால் குட்டுவனுக்கும் அறிவுரை கூறும் நல்அந்தணனாகவும் படைத்துக் காட்டியுள்ளார். அப்படிப்பட்ட மாமறையோன் வாயிலாகக் கோவலன் பண்பு நலன்களை எடுத்துக்காட்டியுள்ளது அப்பாத்திரத்திற்குப் பெருமை சேர்க்கின்றது.

கோவலன் தன்வாழ்நாளில் செய்த நல்ல செயல்களை, அவனிடமே இன்னொருவர் கூறுவதாகப் படைத்துக் காட்டியிருக்கும் அடிகளின் புலமை நுட்பமும் அறிந்து மகிழத்தக்கதே. ''இல்லோர் செம்மலாக, செல்லாச் செல்வனாக, கருணை மறவனாக விளங்கிய நீ, இம்மைப் பிறப்பில் நன்மைகளைச் செய்த நீ, மாமணிக் கொழுந்தாகிய கண்ணகியுடன், அறியா நகரில் தனியே நிற்கிறாயே'' என மாடலன் வருந்திக் கூறுவது அங்கு ஒரு அவலச் சூழலை உண்டாக்குகிறது. தவிர, நீ ஒரு தனி உழந்து நிற்கும் கோலம், உம்மைப் பயனின் விளைவோ?' என மாடலன் வினவிய பின்னரே கோவலன் தான் கண்ட தீக்கனவைப் பற்றி நினைக்கிறான்.

கோவலனுக்கு தன் முன்நிலைகளை, தான் முன்பு செய்த நன்மைகளை உணர்ந்தபின் தான் இதுவரை கவுந்தி அடிகளிடமும், கண்ணகியிடமும் கூறாத தீக்கனவின் நினைப்பு எழுந்து, அதை மாடலனிடம் கூறத் தோன்றுகிறது. ஆக, கோவலன் இவற்றைக் கேட்பதால்தான் அவனுககும் 'வினைப்பயன்' பற்றிய சிந்தனையே எழுகிறது. மேற்கூறிய காரணங்களால் கோவலனே இக்கதைகளைக் கேட்பதாக அமைத்திருப்பது சிறப்புடையதாகிறது.

இளங்கோவடிகள், இம்மூன்று கதைகளையும் கோவலன் கொலைப்படுவதற்குச் சற்று முன்னதாகவே படைத்துக் காட்டுகிறார். கோவலன் தன் வாழ்நாளில் செய்த நன்மைகளை அவன் இறப்புக்குப்பின் காட்டினால், அது 'இறந்தோர் துதி' பாடுவதாக அமைந்துவிடும். ஆகவே அவன் இறப்புக்கு முனனரே படைத்துக் காட்டி, இப்படிப்பட்ட நல்லவன் சாகிறான் என்ற நிலையில் அவலச் சுவையை மிகுவிக்கிறார்.

இக்கதைகளை அடிகள் மூன்று நோக்கங்களுக்காக எடுத்தாள்கின்றார்.

(i) காப்பியத் தலைவனான கோவலனின் பண்பினை

உயர்த்திக் காட்ட இக்கதைகளை அடிகள் எடுத்தாண்டுள்ளார். கோவலன் மாதவியுடன் வாழ்ந்த காலத்து நடந்த செயல்களே இங்கு மூன்று கதைகளாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. அதனால், அடிகள் மாதவியுடன் வாழ்ந்த காலத்தைப் படைத்துக் காட்டும்போதே, இந்நிகழ்ச்சிகளையும் சொல்லி, இவற்றை மையக்கதையாகவே அமைத்திருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்யாது, இவற்றைக்கிளைகதைகளாக்கிக் கூறுவதற்குக் காரணம் உண்டு. நாடறிந்த மாடலன் வாயிலாகக் கோவலன் பண்பினைச் சிறப்பித்துக் காட்டுவதற்காகவும், அவன் பண்பினைத் தனித்து உயர்த்திக் காட்டுவதற்காகவும் இப்படிக் கிளைக் கதைகளாகப் படைத்திருக்க வேண்டும்.

(ii) முன்பே கூறியபடி, கொலைக்களக் காதையின் அவலப் பெருக்கத்திற்காக இக்கதைகள் எடுத்தாளப் பட்டிருக்கின்றன.

(iii) இம்மூன்று கிளைக்கதைகளும், முன்வினைப்பயன்தான் கோவலனின் இப்பிறப்பு துன்பத்திற்குக் காரணம் என்பதைக் குறிப்பாகச் சொல்கின்றன. பின்னால்கூறப்படும் கோவலனின் முற்பிறப்புக் கதைக்கு இக்கிளைக் கதைகள் மறைமுகமான அழுத்தத்தைத் தருவதற்காகவும் அடிகளால் எடுத்தாளப்பட்டிருக்கலாம்.

காப்பியத் தலைவனான கோவலனைப் பற்றியதாக இம்மூன்று கிளைக்கதைகளும் அமைந்துள்ளன. அவனுடைய பாத்திரத்தை முழுமையாக அறிந்து கொள்ள இக்கதைகள் உதவுவதால் இவற்றை ஒட்டிய கிளைக்கதைகளாகக் கொள்ளலாம்.

**2.4.6 தூங்கக் கை வானவன் கதை**

இக்கதை அடைக்கலத்தின் பெருமையையும், அதனால் உண்டாகும் பேற்றையும் பற்றிப் பேசுகிறது. கவுந்தி அடிகள் இடைக்குல மகளான மாதரிக்குச் சொல்வதாக இக்-

சதை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. கண்ணகியை மாதரி-யிடம் தந்து, அதற்கு அரணாக அடைக்கலத்தின் பேரின்-பத்தை ஒரு கதைமூலம் எடுத்துக்காட்டுகிறார், கவுந்தியடி-கள். அடைக்கலம் கொடுக்கும் கவுந்தியடிகள், அடைக்கலம் பெறும் மாதவியிடம் இக்கதையைக் கூறுவதும், பின்னவர் கேட்பதுமாக, பொருத்தமாக அமைந்துள்ளது.

மாதரியிடம் கண்ணகியை அடைக்கலம் தரும் கவுந்தி யடிகள், கண்ணகியின் கற்பின் மேன்மையையும், அவள் குடும்பச் செல்வ நிலையையும் கூறி, அவளையும் கோவல-னையும் மதுரை நகர் செல்வந்தர்கள் விருந்தினராக ஏற்றுக் கொள்ளும் வரை 'அடைக்கலமாக ஏற்றுக் கொள்க' என்று கூறுகிறாள். அதோடு, முன்பு அடைக்கலம் பெற்றதினால் பேறு அடைந்த எட்டிசாயலன் கதையையும் கூறுகிறாள். குரங்கிற்கு அடைக்கலம் கொடுத்த சாயலனும், அவன் மனைவியும் முட்டா இன்பம் பெற்றதை எடுத்துக்காட்டி, மாதரியையும் அவ்வின்பம் பெறும்படி வேண்டுகிறாள்.

இக்கதை காப்பியச் சூழலைப் பொறுத்தவரை, மாதரி-யின் செயல்பாட்டைத் தூண்டுவதற்காக எடுத்தாளப்பட்டி-ருந்தாலும், சிறந்த நீதியையும் எடுத்துரைக்கிறது. தவிர, இளங்கோவடிகளுக்கும் அடைக்கலக் கோட்பாட்டைப் பற்-றிப்பேசும் எண்ணம் இருந்திருக்க வேண்டும். மிக் விரிவாகக் கதை கூறுவது மட்டும் அன்றி, அடைக்கலப் பயனை,

> தவத்தோர் அடைக்கலம் தான் சிறிதாயினும்
> மிக்க பேரின்பம் தரும் அது[4]

என்று கூறுவதாலும் இதை உறுதி செய்ய முடிகிறது. இக்-கதையின் பயன், மாதரி அடைக்கலம் ஏற்பதுடன் முடிந்து விடுவதாலும், கூற்றளவில் மட்டுமே காப்பிய மையக்கதையு-டன் இக்கிளைக்கதை தொடர்புபடுத்தப் பட்டிருப்பதாலும் இதை ஊன்றுகதையாகவே கொள்ள முடிகிறது.

### 2.4.7 அரண்மனையில் திருட்டுப்பற்றிய கதை

இக்கிளைக்கதை அரண்மனைப் பொற்கொல்லனால் சொல்லப்படுகிறது. பொற்கொல்லன், அரசன் அனுமதியுடன் கோவலனைக் கொல்ல, காவலர்களுடன் வருகிறான். அவர்கள் கோவலனைக்கண்டு, அவனை நல்லவன் எனக்கருதிக் கொல்லத்தயங்கி நிற்கின்றனர். இச்சமயத்தில் அவர்கள் கோவலனுடன் உரையாடினால், அவன் திருடன் அல்ல என்பதை அறிந்து விடுவார்கள். பொற்கொல்லனின் சூழ்ச்சி கெட்டுவிடும். ஆகவே, மதிநுட்பம் வாய்ந்த அந்தப் பொற்கொல்லன், காவலர்கள் தயங்கிய அந்த வினாடியே கள்வர்களின் சாகஸங்களைப் பற்றிக் கூறியும், கள்வர் ஆற்றலுக்குச் சான்றான இக்கதையைக் கூறியும் அவர்கள் பேச்சைத் தடைப்படுத்துவதுடன், அவர்கள் மனத்தையும் மாற்றிவிடுகிறான்.

இக்கதை மூலம், இளங்கோ, வேந்தனின் மாலையைக் கைப்பற்றத் தூதுவன் வேடத்தில் திருடன் வந்ததுபற்றியும், வேந்தன் அவனைத் தன் வாளால் தடுக்கும்போது, அத்திருடன் அதைத் தன்கை உறையால் தடுத்து மாயமாய் மறைந்ததுபற்றியும் சுவைபட எடுத்துரைக்கின்றான். பொற்கொல்லன். இக்கதை, அரண்மனைத்திருட்டைப் பற்றி அககாலத்திலநாட்டில் வழங்கிய கதையாக இருந்திருக்க வேண்டும். இந்த அரண்மனைத் திருட்டுப் பற்றிய கதை, காவலர்கள் கோவலனுடன் பேசும் பேச்சைத் தடுப்பதற்காகவும், காவலர்களின் மனத்தை மாற்றுவதற்காகவும் என்ற இருநோக்கத்துடன் பொற்கொல்லனால் கூறப்பட்டுள்ளது.

இக்கதை, காப்பியத்தில் ஒரு பெரும் திருப்பத்தை உண்டுபண்ணுகிறது. இக்கதையைச கேட்டபின்தான், கல்லாக்களிமகனொருவன் கோவலனைக் கொல்வதால் காப்பிய ஓட்டம் திசை மாறுகிறது. இப்படி, இக்கிளைக்கதை காப்பிய மையக்

கதைப்போக்கையே மாற்றுவதால், இதை ஒன்றிய கிளைக்கதையாகக் கொள்ளமுடிகிறது. இக்கதை எடுத்துக்காட்டு கதையாக வந்தாலும், கூற்றளவிலேயே காப்பியத்துடன் தொடர்பு படுத்தப்பட்டிருந்தாலும், காப்பியத்தில் இதன் பயன்பாடு, முடிவுவரை அமைந்திருப்பதாலும், காப்பியத் திருப்பத்திற்கு வழி கோல்வதாலும் இக் கதையை ஒன்றிய கிளைககதையாகக் கொள்ளமுடிகிறது. சிலம்பைப் பொறுத்தவரை, இக்கதை ஒன்றே ஒன்றிய கதையாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### 2.4.8 பொற்கைப் பாண்டியன் கதையும், பராசுரன் கதையும்

இவ்விரண்டு கிளைக்கதைகளும், பாண்டிய மன்னர்களின் செங்கோல் சிறப்பைப் பேச எழுந்தவைகளாகும். மதுரையின் காவல் தெய்வமான மதுராபுரித் தெய்வம் கண்ணகிக்குச் சொல்வதாக இவ்விருகதைகளும் அமைந்துள்ளன. பாண்டிய மன்னன், தன் கணவனை ஆராயாது கொன்றான் என்ற சினத்தில் ஊரை எரித்து, ஆற்றாமல் உழன்று நின்ற கண்ணகியிடம், மதுராபுரித் தெய்வம், பாண்டிய மன்னன் குற்றமற்றவன். 'உன் சினம் தணிக' என்பதை உணர்த்துவதற்கு முன்பாக, ஒரு முன்னோடியாய், பாண்டியர் குலப் பெருமையையும், செங்கோல் சிறப்பையும் பேசும் இக்கதைகளைச் சொல்கிறது. சினந்து பொங்கி நிற்கும் கண்ணகியிடம் எடுத்தவுடன் பாண்டியன் குற்றமற்றவன் என்று கூறினால் அவள் சீறுவதுடன், மனத்திலும் கொள்ளமாட்டாள் எனக்கருதி, மதுராபுரித் தெய்வம் பாண்டியர்களின் செங்கோல்சிறப்பை முதலில்பேசி, அவள் மனத்தைச் சற்றுப் பண்படுத்துகிறது. பின்னால் கோவலனின் பழவினைக் கதை எடுத்தாளப்படுகிறது. அது, கோவலனின் இறப்புக்கு அவன் முன்செய்த வினையே காரணம் என்று காட்டி நிற்கிறது. அதாவது, பாண்டியன் குற்றமற்றவன் என்பதை அக்கதை

சொல்லாமல் சொல்லி நிற்கிறது. மதுராபுரித்தெய்வம், இவ்விரு கதைகளையும் கூறி, இப்படிப்பட்ட குலமரபும், செங்கோன்மையும் உடைய பாண்டியன் தவறிழைக்க, உன் கணவனின் பழ வினையும், சூழலுமே காரணம் எனக் கண்ணகிக்கு உணர்த்துகிறது.

முதல் கதை, பாண்டிய குல முன்னோன் ஒருவன், வேற்றுநாடு சென்ற கீரந்தையின் மனைவிக்குத் துணையாக நிற்கும் பொருட்டு, அவன் வீட்டுக் கதவினைத் தட்ட, அதை உணராத அவள், அரசவேலி தன்னைக் காக்கவில்லையே எனப் புலம்ப, தவற்றை உணர்ந்த மன்னன், தன் கையை வெட்டி முறைசெய்த சிறப்பைப் பேசுகிறது. இரண்டாவது கதையான பராசுரன் கதை, முறை நிலை திரிந்த அறியா மாக்களின் தவற்றைப் பேசுகிறது. பின்பு, மன்னன் அதை அறிந்து முறை செய்வதையும் கதை விளக்கி நிற்கிறது. இதே போன்று, நடந்த பிழைதான் கோவலன் மரணத்திற்குக் காரணம் என்பதையும் இக்கதை மறைமுகமாக உணர்த்துகிறது. மேலும், பாண்டியன் 'தேரா மன்னன்' என்னும் கோட்பாட்டை உடைய கண்ணகியிடம், இக்கதை மூலம், அவன் ஒற்றர் மூலம் ஒற்றி உண்மை தேரும் பாங்கையும், குறை நேர்ந்த வழி, அவன் அதற்குச் செய்யும் செங்கோன்முறைமையையும் மதுராபுரித் தெய்வம் திறம்பட எடுத்துக் காட்டுகிறது.

ஆக, இவ்விருகிளைக்கதைகளும், பாண்டியன் குற்றமற்றவன் என்பதை விளக்குவதற்காகவும், அவன் குலப்பெருமை பேசுவதற்காகவும், கோவலன் விதியே அவன் மரணத்திற்குக் காரணம் என்பதை விளக்குவதற்காகவும், பின்வரும் கிளைக் கதைக்கு அழுத்தம் தருவதற்காவும் அடிகளால் எடுத்தாளப் பட்டுள்ளன. இக்கதைகள் எடுத்துக்காட்டுகளாக அமைவதாலும், கண்ணகியின் சினத்தைத் தணிப்பதுடன் முற்றுப்-

பெற்று விடுவதாலும், இவைகளை ஊன்று கதைகளாகவே கொள்ளமுடிகிறது.

2 4.9 கோவலனின் முற்பிறப்புக் கதை

இககதையும், மதுராபுரித் தெய்வம் கண்ணகியிடம் கூறுவதாகவே படைக்கப்பட்டுள்ளது. இக்கிளைக்கதை, கோவலனின் வினைப்பயன் கூறவும், கோவலன் கொலை-யுண்ட காரணத்தை உணர்த்தவும் அடிகளால் எடுத்தாளப்-பட்டுள்ளது. தவிர, முன்பே கூறியபடி இக்கதை மறைமுக-மாகப் பாண்டிய மன்னனின் குற்றமின்மையும் சுட்டுகிறது. காப்பியப் பாவிகத்தில் ஒன்றான 'ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்' என்ற வினைக கோட்பாட்டை விளக்க வந்த கதையும் இதுதான். கணவனை, அறியாத பதியில் இழந்து பாண்டியனிடம் நீதி கேட்டு, பின் ஆற்றாது மதுரையை எரித்து, மேலும் செய்வதறியாது திகைத்துத் திரிந்த கண்ணகிக்கு, அவள் இந்நிலை அடைந்த காரணத்தை உணர்த்தி, நெறிப்படுததுகிறது மதுராபுரித் தெய்வம். முற்பிறவியில், கோவலன் கலிங்க நாட்டில் சிங்கபுரத்தில் பரதன் என்னும் பெயருடையவனாய் இருந்தான் எனவும், சங்கமன் என்னும் வணிகனைப் பகை காரணமாக, அரசனி-டம் ஒற்றன் எனக்கூறிக் கொல்வித்தான் என்பதையும் இக்-கதை சுட்டுகிறது சங்கமன் மனைவியான நீலி, மன்றினும் மறுகினும் பூசலிட்டு, 'எம்முறு துயரம் செய்தோர், தம்முறு-துயரம் கொள்க' என இட்ட சாபமே, இப்பிறவியில் நீயுறும் துயரமாக அமைந்திருக்கிறது' என மதுராபுரித்தெய்வம் இக்கதைமூலம் கண்ணகிக்குச் சுட்டுகிறது.

காப்பியப்புலவனின் கருத்தான 'ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்' என்ற கருத்தை விளக்குவதற்காகவும், கண்-ணகி துயர் களைந்து செயல்படுவதற்காகவும் இக்கதையை அடிகள் எடுத்தாண்டுள்ளார். காப்பியத்தலைமை மாந்தர்-களான கோவலன், கண்ணகியின் முற்பிறப்பு வரலாறு பேசுவ-

தாலும் காப்பியத்தில், கோவலன் இப்பிறப்பில் நன்மையே செய்திருக்க, ஏன் கொலைப்படுகிறான்? என்பதற்கு விடையாகவும் அமைந்திருப்பதால் இக்கதையை 'ஒட்டிய கதை' வகையாகக் கொள்ள முடிகிறது.

### 2.4.10 கண்ணகி பற்றியக் கிளைக்கதை

இக்கிளைக்கதை, தண்டமிழ் ஆசான் சாத்தன் உரைக்கச் சேர மன்னன் செங்குட்டுவன் கேட்பதாக அமைந்துள்ளது. கண்ணகி வாழ்வில் நடந்த முக்கிய நிகழ்ச்சிகளை இக்கதை விளக்கி நிற்கிறது. காப்பியக் கதையையே, அக்காப்பியத்திலேயே கிளைக்கதையாக வடித்த புதுமையும், புரட்சியும் அடிகள் ஒருவருக்கே உரியது. இக்கதை, கண்ணகியின் திருமணத்தையும், கோவலன் மாதவியிடம் சென்று மனையறம் மறந்ததையும் பேசவில்லை. கோவலன் சிலம்பு காரணமாக இறந்துபடுதலையும், பத்தினி நீதி கேட்ட திறத்தையும் பின் மன்னர் உயிர்நீக்கி வளைந்த செங்கோலை நிமிர்த்திய திறத்தையும் பேசுவதாக இக்கிளைக்கதை அமைந்துள்ளது.

'கான வேங்கைக்கீழோர் காரிகை, தான் முலை இழந்து தனித்துயரெய்தி, வானவர் போற்ற மன்னொடுங்கூடிச்' சென்ற நிகழ்ச்சியைமலைமிசை மக்கள் கண்டு, குட்டுவனிடம் கூறி, பின், அவள் யார்? எந்நாட்டவளோ? என்பதற்கு விடையின்றி வியந்து நின்ற இடத்தில், அவர்களுக்கும், குட்டுவனுக்கும், கண்ணகி வாழ்வினைப்பற்றி நன்கறிந்த சாத்தனார், அவள் கதையைக் கூறுவது பொருத்தமாக அமைந்துள்ளது. இக்கதையைக் குட்டுவன் கேட்பதாக, அடிகள் அமைந்திருக்கும் புலமைத் திட்பம் அறிந்து இன்புறத்தக்கது. பின்னால், அவன் கண்ணகிக்குச் செய்யப் போகும் சிறப்புக்கு, அவன் கேட்கும் 'கண்ணகி வாழ்க்கை வரலாற்றுக் கதையே கால்கோளாகிறது. வஞ்சிக் காண்ட நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் இக்கதையைக் குட்டுவன் கேட்பதே அடிப்-

படையாகிறது. தன்நாட்டு அகன்வயின் வந்து நின்ற கண்ணகியை மன்னன் அறிந்து, போற்றி, சிறப்புச் செய்யும் நோக்கமாகவே இக்கதை அடிகளால் எடுத்தாளப்படுகிறது. காப்பியத் தலைவியான கண்ணகியின் கதையாக இக்கிளைக் கதை அமைவதாலும், குட்டுவனின் பத்தினி வழிபாட்டிற்குக் காரணமாக அமைவதாலும் இக்கதையை ஒட்டிய கிளைக் கதையாகக் கொள்ள முடிகிறது.

**2.4.11 மணிமேகலை பற்றிய கிளைக்கதை**

இக்கிளைகதையைக் குட்டுவன் கேட்க, தேவந்தி கூறியதாக அடிகள் படைத்துள்ளார்.

போதியின்கீழ் மாதவர்முன் புண்ணியதானம் புரிந்த
மாதவி தன்துறவுங் கேட்டாயோ தோழி
மணிமேகலை துறவுங் கேட்டாயோ தோழி[5]

என அடித்தோழி அரற்ற, மாதவி பற்றி அறிந்த குட்டுவன், தானறியாத மணிமேகலையைப் பற்றி அறிந்து கொள்ள, தேவந்தியைப் பார்த்து,

வாயெடுத் தரற்றிய மணிமேகலையார்
யாதவள் துறத்தற் கேதுவீங் குரையெனக்[6]

கேட்க, அவள் பற்றிய செய்தியை வர்ணித்துக் கதையாகக் கூறுகிறாள் தேவந்தி. கண்ணகியின் உயிர்த் தோழியாகவும், அவளைச் சார்ந்தோரை நன்கறிந்தவளாகவும், புகார்பதி வாழ்பவளாகவும் விளங்குகின்ற தேவந்தி வாயிலாக அடிகள் இக்கதையைப் பேசியிருக்கும் நோக்கம் பொருத்தமுடையதே.

காப்பியத் தலைமை மாந்தர்களான கோவலன், கண்ணகி ஆகிய இருவரின் முடிவு கூறியபின், மாதவியின் முடிவைக் கூறாமல் விட்டால் காப்பியம் நிறைவுறாது என்பதையும், அவள் மகள் மேகலையின் துறவு பற்றிக் கூறாவிடில் காப்பியம் சிறக்காது என்பதையும் உணர்ந்த அடிகள், இக்-

கதை மூலம் அவற்றை எடுத்துக்காட்டுகிறார். மாதவியின் மகளான மணிமேகலை உரிய வயதை அடைந்தவுடன் கோதைத் தாமங் குழலோடு களைந்து, போதித் தானம் புரிந்து அறப்படுத்தியதை இக்கதை நவில்கிறது. பின்னால் தனி ஒரு காப்பியம் எழ, இக்கதையே அடிகோலாகிறது.

அடிகள், இச்கதை மூலம் மாதவியின் பண்பினை உயர்த்திக்காட்டுகிறார். கணிகை குலத்தவளாகப் பிறந்தாலும், தான் ஒருவருடன் ஒழுகியது மட்டுமல்லாமல், தன் மகளை அரசும், ஊரும் எதிர்க்க நனனெறியாம் துறவற நெறி பேணச் செய்த பண்பை இக்கதைமூலம் அடிகள் வாசகர்களுக்கு எடுத்துக் காட்டுகிறார். மையக்கதைப் பாத்திரமான மாதவியின் பண்பு விளக்கமாக அமைவதால் இக்கதையை ஒட்டிய கிளைககதை வகையில் அடக்கலாம்.

## 2.4.12 கண்ணகி கோவலன் தாய்மார்களின் முற்பிறப்புக் கதை

இக்கிளைக்கதை, செங்குட்டுவனுக்கு மாடல மறையோனால் கூறப்படுகிறது. தொடுகழல் வேந்தன் குட்டுவன், செட்டியின் இருபெண்களும், சேடக்குடும்பியின் மகளும் அரற்றுவதைக் கண்டு வியந்து மாடலனை நோக்க, மாடலன் அவர்களின் முற்பிறப்பு வரலாற்றைக் கூறுகிறான்.

கண்ணகியின் தாயும் மாமியும் அவன்பால் கொண்ட அன்பின் காரணமாக அரட்டன் செட்டி வயிற்றில் இரட்டைப் பெண்களாகப் பிறந்ததையும், மாதரி, கண்ணகிபாற் கொண்ட பேரன்பினால், அவள் தெய்வமாகப் போற்றப்படும் நாட்டின்கண், திருமால் மேல் அன்புடையவளாய்க் குரவைக் கூத்து எடுத்தமையால், அந்திருமாலுக்குத் தொண்டுபூண்டு ஒழுகும் சேடக்குடும்பியின் மகளாகப் பிறந்தாள் என்பதையும் இக்கதை விளக்கி நிற்கிறது. இக்கதையின் முடிவில் மாடலன் வாயிலாக அடிகள்,

நற்றிறம் புரிந்சோர் பொற்படி யெய்தலும்
அற்புளஞ் சிறந்தோர் டற்றுவரிச் சேறலும்
அறப்பயன் விளைதலும் மறப்பயன் விளைகலும்
பிறந்தவர் இறந்தலும் இறந்தவர் பிறத்தலும்
புதுவதன்றே தொன்றியல் வாழ்க்கை [7]

எனப் பிறப்பு பற்றிய தத்துவத்தையும், வினைப்பயனையும் எடுத்துரைகிறொா. ஒரு மாமறையோன் வாயிலாக, அடிகள், சமண தத்துவக்தைப் பேசவைத்த புலமைப் பாங்கையும் சுட்டுதல் வேண்டும். வினைக் கோட்பாடு சமண தத்துவம் என்றாலும் அதை ஒரு உலகப் பொது அறமாக்கி, மாடலன் கூறுவதாக அமைத்துக் காட்டியிருப்பதும் சிறப்புடையதாக விளங்குகிறது.

இக்கதை, 'வினைக்கோட்பாடு' பேசும் நோக்கிலேயே அடிகளால் எடுத்தாளப்பட்டுள்ளது. தவிர, இக்கிளைக்கதை புலவரின் கருத்துக்கு அரணாக எடுத்தாளப்படுவதால் ஊன்று கிளைக்கதையாக அமைந்து விடுகிறது.

### 2 4.13 இளங்கோ அரசு துறந்த வரலாறு

அடிகள் தன்னையும் ஒரு காப்பியப் பாத்திரமாக இணைத்துக் கொள்ள இக்கிளைக்கதையைப் பயன்படுத்திக் கொண்டுள்ளார். வடமொழி இதிஹாஸமான வியாசபாரதத்தில் இவ்வுத்தியை நாம் காணலாம். அடிகள், தன் வரலாற்றை, கண்ணகியின் வாய் மூலமாகக கூறப்படுவதாக அமைத்துக் காட்டித் தன்னைத் தெய்வம் போற்றும் மனிதனாக இனங்காட்டிக் கொண்டுள்ளார். இளங்கோ, தன்முன்னோனுக்காக அரசு துறந்த வரலாறு வேறு எந்தச் சங்கநூல்களிலும் இல்லை. எனவே, இக்கதை ஒரு வரலாற்றுச் சான்றாதாரமாகவும் அமைந்துவிடுகிறது. அடிகள், தன்னை மண்ணரசு துறந்து அந்தமில் இன்பத்து அரசு பேணிய சான்றோனாகக் காட்டிக் கொள்வதில் பெருமை கொள்கிறார். காப்பியப் புலவனின் வாழ்க்கையில் நடந்த முக்கிய நிகழ்ச்-

கியை இக்கிளைக்கதை பேசுவதால், காப்பியத்துடன் இயல்-பாக ஒன்றிவிடுகிறது. இக்கிளைக்கதையின் பயன்பாடு-சொல்லப்படும் சூழலிலே முடிந்துவிடுவதால், இதை ஊனறு கிளைக்கதையாகவே கொள்ள முடிகிறது.

### 2.5 சிலப்பதிகாரக் கிளைக்கதைகளின் சில தனி இயல்புகள்

'கிளைக் கதைகள்' காப்பிய உறுப்புக்கள் ஆதலால், எல்லாக் காப்பியங்களிலும் அமைந்திருக்கும் என்றாலும், ஒவ்வொரு காப்பியத்திலும், அக்காப்பியப் புலவர்களின் திறனுக்கு ஏற்பத் தனித்துவம் பெற்று விளங்கும். சிலப்பதி-காரககிளைக்கதைகளும் அதற்கு விதிவிலககலல. சிலப்பதி-காரக் கிளைக்கதைகளின் குறிப்பிடத்தக்க தன்மைகளைக் கீழ்க்கண்டவாறு வரிசைப்படுத்தலாம்.

2.5.1 சிலப்பதிகாரத்தில் அமைந்துள்ள கிளைக்கதைகளில் ஒன்றைத்தவிர, மற்றப் பதினைந்தும் பாத்திரக்கூற்றா-கவே அமைந்துள்ளன. அதாவது, தேவந்தி பற்றிய கிளைக் கதை ஒன்றுதான் புலவர் கூற்றில் அமைந்துள்ளது.

2.5 2 பொற்கொல்லன் கூறும் அரண்மனைத் திருட்டுப் பற்றிய கதை ஒன்றுதான் சிலம்பில்ஒன்றிய கிளைக்கதையாக அமைந்துள்ளது. மற்ற பதினைந்திலும், ஒட்டிய கிளைக்-கதைகளாக ஏழும், ஊனறு கிளைக் கதைகளாக எட்டும் அமைந்துள்ளன.

2.5.3 சிலப்பதிகாரத்தில் 'ஊர்வசி சாப வரலாறு' என்ற ஒரே ஒரு புராணக்கதையும்,' 'நாளங்காடி[8] பூதக் கதை' என்ற ஒரே ஒரு புராண வரலாற்றுக் கதையும்[9] இடம் பெறுகின்றன.

2.5.4 சிலப்பதிகாரத்தில் சில கிளைக்கதைகள் மிகத்-திறம்பட அடிகளால் எடுத்தாளபபட்டுளளன. ஒரு கிளைக்-

கதை, பின்னால் வரும் மற்றொரு கிளைக்கதைக்கு அழுத்தம் தருவதாக அமைக்கப்பட்டிருக்கும் போக்கை, மற்றக் காப்பியங்களில் காண்பதரிது.

2.5.5 அடைக்கலக்காதை, சட்டுரைக்காதை, வரந்தரு காதை என்ற மூன்று காதைகளிலும் மூன்றும், அதற்கு மேற்பட்ட கிளைக் கதைகளும் இடம் பெறுகின்றன. இப்படி ஒரு காதையிலேயே, அதாவது ஒரு உட்பிரிவிலேயே, அடுத்தடுத்து மூன்று கிளைக் கதைகளைக் கட்டுக் கோப்புக் குலையாது அமைந்திருப்பது சிலம்பின் தனி இயல்பே.

2.5.6 ஒரே கிளைக் கதையையே (தேவந்தி கதை) இருவேறு நோக்கில், இரு வேறு கூற்றில், ஒரே காப்பியத்தில் அமைந்துள்ளார் அடிகள்.

2.5.8 காப்பியக் கதையையே, கிளைக் கதையாக்கி, அதே காப்பியத்தில் இடம்பெற வைத்தும் அடிகளின் தனிச் சாதனைதான்.

2.5.8 மற்றக் காப்பியங்களுடன் ஒப்பிடும் போது, சிலம்பில் எந்த ஒரு கிளைக் கதையும் தனித்துச்சமயம் பேசுவதற்காக எடுத்தாளப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

2.5.9. தமிழ்க் காப்பியங்களில், சிலம்பில் மட்டுமே, கிளைக்கதை மூலம், காப்பியப் புலவரும் தன்னைக் காப்பியத்தில் இடம் பெற வைத்துக் கொண்ட தன்மையைக் காணலாம்.

2.5.10 ஒரே இடத்தில், ஒரே நோக்கில், ஒரே கூற்றில் மூன்று கிளைக்கதைகளை அடுக்கிக்கூறும்போக்கையும் சிலப்பதிகாரத்தில் காணலாம்.

2.5.11 ஒரே செய்தியை (ஊர்வசி சாப வரலாறு) வர்ணனையாகவும், கிளைக்கதையாகவும் எடுத்தாண்டுள்ள

தன்மையையும் சிலப்பதிகாரத்தில் காணலாம்.

## அடிக்குறிப்புக்கள்

1. காப்பிய மையக்கதை வளர உதவும் களங்களைக் கொண்டு இந்நாடக உறுப்புக்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. அதாவது, கண்ணகி கோவலனைப் பிரியாவிட்டால் கதை தொடராது. ஆக, கதைத்தொடர்ச்சிக்கு உதவும் இக்களத்தை வளர்ச்சியாகக் கொள்ளப்படுகிறது. கோவலன் கண்ணகியுடன் மதுரைக்குவராவிடில் அவன் உயிரோடு கண்ணகியுடன் வாழ்ந்திருப்பான். கோவலன் கொலையுண்டு, கண்ணகி வாழ்வு அழிய, அவர்கள் இருவரும் மதுரைக்குப் புறப்பட்டு வந்ததே காரணமாகிறது. ஆகவே, அது உச்சகட்டமாகக் கொள்ளப்படுகிறது. கோவலன் கொலையுண்டது கண்ணகியின் தெய்வத்தன்மை வெளிப்பட ஒருகளனாகிறது. கண்ணகியின் தெய்வத்தன்மை கண்டு, குட்டுவனால் ஏத்தப்படுவது மையக்கதை முடிவு ஆதலால், அம்முடிவுக்கு நிலைக்களனாக உள்ள கோவலன் கொலை விழ்ச்சியாகக்கொள்ளப்படுகிறது.

2. சிலப்பதிகார மையக்கதையே கோவலன் கண்ணகி, மாதவி பற்றியது. ஆதலால் அவர்கள் தலைமை மாந்தர்களாகக் கொள்ளப்படுகிறார்கள். இவர்களில் ஒருவர் இல்லாவிடினும், காப்பிய மையக்கதை நடவாது. சிலம்பில், இம்மூவர்பங்கே முதன்மையானது ஆதலால், இவர்கள் தலைமை மாந்தர்களாகக் கொள்ளப்படுகிறார்கள். தேவந்தி, கவுந்தி, மாடலன் போன்றோர் காப்பியக்கதை நிகழ்ச்சி தொடர்ந்து நடைபெறத் துணை புரிபவர்கள் ஆதலால் அவர்கள் துணைமாந்தர்களாகக் கொள்ளப்படுகிறார்கள். இப்பாத்திரங்கள் காப்பியத்தில் ஆங்காங்கு சிறுதொடர்ச்சியாகத் தோன்றிச் செயல்படுவார்கள்; அல்லது இப்பாத்திரங்களின் செய்கையில் ஏற்பட்ட விளைவுகள் காப்பியக்கதையின்

திசை மாற்றத்திற்கு உதவியிருக்கும். இப்படிக்காப்பிய ஓட்டத்திற்கு ஏதோ ஒருவிதத்தில் இவர்களின் பங்கு துணை நிலையாக இருப்பதால் இவர்கள் துணை மாந்தர்களாகக் கொள்ளப்படுகிறார்கள். சிறு பாத்திரங்கள் காப்பியக்கதையில் ஆங்காங்கே தோன்றி மறைபவர்கள். இவர்களின் பங்கு காப்பியத்தில் மிகக் குறைவு. இப்பாத்திரங்கள், மையக்கதைப் போக்கில் பெரிய விளைவுகளை ஏற்படுத்தாவிட்டாலும், அம்மையக்கதைக்கு ஏதோ ஒரு விதத்தில் ஊன்றுகோலாக விளங்குவதால், இவர்கள் சிறு பாத்திரங்களாகக் கொள்ளப்படுகிறார்கள்.

3. சிலப்பதிகாரத்தில் பயின்றுவரும் துணைக்கதைகள் பற்றிய அட்டவணையில் இதுபற்றிய முழுவிபரத்தையும் காண்க.

4. சிலப்பதிகாரம்., 15 : 149 - 150

5. மேலது., 29 : 7 அடித்தோழி அரற்றுதல்

6. மேலது., 30 : 4 - 5

7. மேலது., 30 : 136 - 140

8. இங்குப் புராணக்கதை என்று குறிப்பிடப்பட்ட வகை, முழுவதும் கற்பனை சார்ந்தது. இவ்வகைக்கதைகளில் தெய்வங்களும் தெய்வத் தன்மை வாய்ந்த முனிவர்களும், அரக்கர்களுமே இடம் பெறுவார்கள்

9. புராண வரலாற்றுக் கதை என்பது வரலாறும் கற்பனையும் சார்ந்தது. இவ்வகைக் கதையில் வரலாற்று மன்னரோ அல்லது வரலாற்று நிகழ்ச்சியோ இடம் பெற்றாலும், அவை முழுக்க முழுக்க வரலாற்று உண்மைகளாக அமைந்திருக்கா. தவிர, வரலாற்றுப் பாத்திரங்களுடன் தெய்வங்களும், தெய்வம் சார்ந்த முனிவர்களும், அரக்கர்களும் இவ்வகைக் கதைகளில் இடம் பெறுவதால், இவைகள், 'புராணவரலாற்றுக் கதை'களாகக் கொள்ளப்படுகின்றன.

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| கிளைககதைகள் | நோக்கம் | இடம்பெறும் காதை | கதைகூறு-பவர் | கேட்-போர் | கதை வகை |
| 1. நாளங்காடி பூத கதை | ஊர்ப்பெருமை பேசுதல் | கடலாடு காதை | விச்சாதரன் | விச்சாதரன் காதலி | ஊன்று கதை |
| 2. ஊர்வசி சாப வரலாறு | பாத்திரப்பெருமை பேசுதல் | கடலாடு காதை | விச்சாதரன் | விச்சாதரன் காதலி | ஊன்று கதை |
| 3 தேவந்தி பற்றிய கிளைக்கதை | துணைப்பாத்திர அறிமுகம் | கனாத்திற முரைத்த காதை | புலவர் கூற்று | வாசகர் | ஒட்டிய கதை |
| 4, 5, 6 மாடலன் கூறும் மூன்று கிளைக் கதைகள் | பாத்திரப் பண்பை உயர்த்திக் காட்ட | அடைக் கலக் காதை | மாடலன் | கோவலன் | ஒட்டிய கதை |
| 7 குரங்குக்கை வானவன் கதை | பாத்திர செயல்-பாட்டைத்தூண்டு கிறது; நீதி உணர்த்துகிறது | அடைக் கலக் காதை | கவுந்தி அடிகள் | மாதரி | ஊன்று கதை |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 8 அரண்மனைத் திருட்டு | காப்பியத்திருப்-பத்திற்காக. | கொலைக் களக் காதை | பொற் கொல்லன் | அரண்மனைக் காவலர் களிடம் | ஒன்றிய கதை |
| 9 பொற்கைப் பாண்டியன் கதை | பாண்டியன் செங்-கோல் திறன் பேச, பின்கிளைக் கதைக்கு அழுத்தம் தருவதற்காக | கட்டுரைக் காதை | மதுராபுரித் தெய்வம் | கண்ணகி | ஊன்று கதை |
| 10 பராசுரன் கதை | பாண்டியன் செங்-கோல் திறன் பேச, பின் கிளைக் கதைக்கு அழுத்தம் தருவதற்காக | கட்டுரைக் காதை | மதுராபுரித் தெய்வம் | கண்ணகி | ஊன்று கதை |
| 11.கோவலன் முற்-பிறப்புக் கதை | காப்பியத் தெளி விற்காக;வினைக் கோட்பாடு பேச | கட்டுரைக் காதை | மதுராபுரித் தெய்வம் | கண்ணகி | ஒட்டிய கதை |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| --- | --- | --- | --- | --- | --- |
| 12 கண்ணகி கதை | செங்குட்டுவன அறிந்து காப்பியப் பின்நிகழ்ச்சிகளை நடப்பிப்பதற்கு | காட்சிக் கதை | தண்டமிழ்ச் சாத்தன் | செங்குட்டுவன் மலைவாழ் மக்கள் | ஒட்டிய கதை |
| 13 மணிமேகலை கதை | பாத்திர முடிவு கூற | வரந்தரு காதை | தேவந்தி | குட்டுவன் | ஊன்று கதை |
| 14 கண்ணகி கோவலன் தாய்களின் மறுபிறப்புக் கதை | வினைக் கோட்பாடு பற்றிப்பேச | வரந்தரு காதை | மாடலன் | குட்டுவன் | ஊன்று கதை |
| 15 தேவந்தி கதை | குட்டுவன் ஐயம் தீர்க்க | வரந்தரு காதை | மாடலன் | குட்டுவன் | ஊன்று கதை |
| 16 இளங்கோ அரசு துறந்த வரலாறு | அடிகள் தன்னைக் காப்பியப் பாத்திரமாக இணைத்துக் கொள்வதற்காக | வரந்தரு காதை | தேவந்தி வாயிலாகக் கண்ணகி | இளங்கோவடிகள் | ஊன்று கதை |

# 3

## 3. மணிமேகலையில் கிளைக்கதைகள்

3.1 சிலப்பதிகாரத்தை ஒட்டித் தமிழுக்குக் கிடைத்த மற்றொரு காப்பியம் 'மணிமேகலை'. மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனாரால் எழுதப்பட்ட இந்நூல் 'பௌத்தம்' பேச எழுந்தக் காப்பியமாகும். சிலப்பதிகாரத்தின் மையக்கதையும், மணிமேகலையின் மையக்கதையும் தம்முள் தொடர்புடையன. மணிமேகலை, மாதவியால் துறவு நெறிப்படுத்தப்பட்டு, அவ்வாழ்க்கையை மேற்கொண்டபின் அடையும் துன்பமும் அனுபவமுமாகிய வாழ்க்கையைப் பேசுவதும், இறுதியில் புறப்பகை அகப்பகைகடந்து பவத்திற மறுகெனப் பாவை நோற்று நின்றதும், ஆகிய மேகலை ஒருத்தியின் வாழ்வைப் பற்றி முழுக்க முழுக்கப் பேசுவதே மணிமேகலையின் மையக்கதையாகும். இம்மையக்கதை மணிமேகலையைத் தலைமைப் பாத்திரமாகவும், மாதவி, உதயகுமாரன், சுதமதி, மணிமேகலா தெய்வம், அறவண அடிகள் ஆகியோரைத் துணைப் பாத்திரங்களாகவும், சித்ராபதி, அரசமாதேவி, தீவதிலகை, ஆதிரை போன்றவர்களைச் சிறுபாத்திரங்களாகவும் கொண்டு திகழ்கிறது.[1]

3.2.1 மணிமேகலைக் காப்பியத்தில் 19 கிளைக் கதைகள் உடலின் உறுப்பாக அமைந்து நிற்கின்றன. இக்காப்பியத்தைக் கிளைக்கதைகளால் கட்டப்பட்ட காப்பியம் என்றே கூறலாம். அந்த அளவிற்குக் கிளைக்கதைகள் மையக்கதையை

அழுத்தி, தாம் மேலோங்கி நிற்கின்றன. மணிமேகலையில் அமைந்திருக்கும் கிளைக்கதைகள் காப்பிய வரலாற்றுக்கு, காப்பியப் போக்குக்குச் சிறப்பும் ஆக்கமும் தருவன என்பதை விட, காப்பியப் புலவரின் கொள்கையான 'பௌத்தம் பேசுதல்' என்ற கொள்கைக்கு சிறப்பும் ஆக்கமும் தந்து நிற்கின்றன. சாத்தனார் தன் பௌத்த மதக் கொள்கைகளை விளக்க பெரும்பான்மையான கிளைக்கதைகளை எடுத்தாண்டுள்ளார். இக்கிளைக் கதைகளைச் சாத்தனார் கற்பார் மனங்கொள்ளுமாறு படைத்துள்ளார் என்பதைவிட, தன் கருத்துக்கள் சிறக்குமாறு படைத்துள்ளார் என்பதே பொருந்தும்.

3.1 மணிமேகலைக் காப்பியத்திலும் மையக் கதை கிளைக்கதைகள் தவிர, துணைக்கதைகளும் பயின்று வருகின்றன. இத்துணைக்கதைகள் உவமையாகவும், விளக்கமாகவும், சிறு எடுத்துக்காட்டாகவும், வர்ணனையாகவும் நின்று காப்பிய மையக்கதைக்கு உறுதுணை புரிகின்றன சிலப்பதிகாரத்தில் அடிகள் எடுத்தாண்ட அளவிற்கு, சாத்தனார் மேகலையில் துணைக்கதைகளை அதிகம் எடுதாளவில்லை. கிளைக்கதைகளில் பௌத்தத்தைத் திணித்த அளவிற்கு துணைக்கதைகளில் சாத்தனார் பௌத்தக் கருத்துக்களைத் திணிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். ஆனால், பௌத்தம் பேசுவதற்காக மட்டுமே எடுத்தாளப்பட்ட துணைக் கதைகளும் உண்டு என்பதை மறுக்க முடியாது.

## 3.4 கிளைக்கதைகளும் அவை இடம்பெறும் காதைகளும்

| எண் | கிளைக்கதைகளின் பெயர் | இடம் பெறும் காதை | அடிகள் |
|---|---|---|---|
| 1. | சுதமதி கதை (முற்பகுதி) | மலர்வனம் புக்க காதை | 28-41 |
| 2. | சுதமதி கதை (பிற்பகுதி) | மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதை | 23-79 |
| 3. | சக்கரவாளக் கோட்டம் எழுந்த கதை | சக்கரவாளக் கோட்டம் உரைத்த காதை | 105-205 |
| 4. | மணிமேகலையின் முற் பிறப்புக் கதை-1 | பீடிகை கண்டு பிறப்புணர்ந்த காதை | 8-64 |
| 5. | மணிமேகலையின் முற்பிறப்புக் கதை-2 | மந்திரம் கொடுத்த காதை | 18-49 |
| 6. | சுதமதி மாதவி ஆகிய இருவரின் முற்பிறப்புக்கதை பகுதி 1 | மந்திரம் கொடுத்த காதை | 50-74 |

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|
| | பகுதி 2 | அறவணர்த்தொழுத காதை | 34-54 |
| 7. | விசுவாமித்திரன் கதை | பாத்திரம் பெற்ற காதை | 75-98 |
| 8. | ஆபுத்திரன் கதை | ஆபுத்திரன் திறம் அறிந்த காதை | 1-115 |
| | | பாத்திர மரபு கூறிய காதை | 1-105 |
| | | பாத்திரம் கொண்டு பிச்சை புக்க காதை | 1-45 |
| 9. | ஆதிரை கதை | ஆதிரை பிச்சையிட்ட காதை | 1-51 |
| 10. | சாதுவன் கதை | ஆதிரை பிச்சையிட்ட காதை | 52-127 |
| 11. | காயசண்டிகை வரலாறு | உலகறவி புக்க காதை | 20-83 |
| 12. | உதயகுமாரன் முற்பிறப்புக் கதை | கந்திற்பாவை வருவதுரைத்த காதை | 36-71 |
| 13. | கந்திற் பாவையின் வரலாறு | கந்திற் பாவை வருவதுரைத்த காதை | 115-142 |
| 14. | மருதியின் கதை | சிறை செய் காதை | 19-79 |

| | | | |
|---|---|---|---|
| 15. | விசாகை-தருமதத்தன் கதை | சிறை செய் காதை | 80-158 |
| 16. | பீலிவளை-நெடுமுடிக்கிள்ளி வரலாறு: | | |
| | முதற் பகுதி | ஆபுத்திரனோடு அடைந்த காதை | 25-61 |
| | இரண்டாவது பகுதி | ஆபுத்திரனோடு மணி பல்லவம் அடைந்த காதை | 175-199 |
| | மூன்றாவது பகுதி | தவத்திறம் பூண்டு தருமங்கேட்ட காதை | 3-21 |
| 17. | கண்ணகி கோவலன் முற்பிறப்புக் கதை | வஞ்சி மாநகர் புக்க காதை | 10-37 |
| 18. | முன்னோன் கோவலன் கதை | கச்சிமாநகர் புக்க காதை | 103-132 |
| 19. | மணிமேகலா தெய்வத்திற்கும் கோவலன் பரம்பரைக்கும் தொடர்பு ஏற்பட்ட வரலாறு | தவத்திறம் பூண்டு தருமங்கேட்ட காதை | 14-33 |

### 3.4.1 சுதமதி கதை முற்பகுதி

மணிமேகலையின் தோழியான சுதமதியின் வாழ்க்கையைப்பற்றிப் பேசுகிறது இக்கதை. சுதமதி தன் கதையைத் தானே காப்பியத் தலைவியான மணிமேகலைக்குக் கூறுகிறாள். தனித்து மலர் கொய்யச் சென்ற மேகலையிடம், தானும் உடன் வருகிறேன் என்று கூறிய சுதமதி, தனித்து மலர் கொய்யச் சென்றதால் தான் அடைந்த துன்பத்தை இக் கதையின் மூலம் எடுத்துச் சொல்லுகிறாள். இக்கதை, அக் காலச் சமுதாயச் சூழலைப் பிரதி பலிக்கின்றது. பெண் ஒருத்தி தனித்துச் செல்வதினால் ஏற்படும் துன்பத்தை ஆசிரியர் இக்கதையின் மூலம் காட்டுகிறார். காப்பியத் தலைவியின் மனபலத்தை இக்கதை மறைமுகமாகச் சுட்டிக்காட்டுகிறது. இப்படிப்பட்ட சமுதாயத்தில், துறவுபூண்ட மேகலை, சமுதாயத்தை எதிர்த்து நின்று, தொண்டு செய்கிறாள் என்கிறபோது, அவள் துறவின் சிறப்பு நமக்குத் தெள்ளிதின் புரிகிறது. துணைப் பாத்திரமான சுதமதியைப் புரிந்துகொள்ள, இக்கதை நமக்கு உதவுகிறது. சுதமதி, மேகலையிடம் கொண்டுள்ள அன்பின் ஆழத்தையும், மேம்பாட்டையும் இக்கதை கூறுவதன் மூலம் புரிந்துகொள்ள முடிகிறது. துணைப் பாத்திரத்தின் கதை என்ற நிலையில் இது இயல்பாகக் காப்பியத்துடன் இணைந்து நின்று, ஒட்டிய கிளைக் கதையாகத் திகழ்கிறது.

### 3.4.2 சுதமதி கதை-பிற்பகுதி

இதுவும், முற்கூறிய அதே சுதமதி பற்றிய கதை என்றாலும், முற்கூறிய கதையின் தொடர்ச்சி என்றாலும், இதைத் தனி ஒரு கிளைக் கதையாகக் கொள்ளலாம். சாத்தனார் சுதமதி வாழ்க்கையை இரு வேறு பகுதியாக்கி, இரு வேறு நோக்கில் காப்பியத்தில் எடுத்தாண்டுள்ளார். நோக்கமும், கதைப்பகுதியும் வேறுபடுவதால், இதைத் தனி ஒரு கிளைக் கதையாகக் கொள்ளமுடிகிறது.

காப்பியத் தலைவனான உதயகுமாரன், சுதமதியிடம்,

அஞ்செஞ் சாய லராந்தா ணத்துள்ளோர்
விஞ்சைய னிட்ட விளங்கிழை யென்றே
கல்லென் பேரூர்ப் பல்லோ ருரையினை
ஆங்கவ ருறைவிடம் நீங்கி யாயிழை
ஈங்கிவள் தன்னோ டெய்திய துரையென

வலியக் கேட்க, சுதமதி தன் பின்வாழ்க்கைக் கதையை எடுத்துரைக்கிறாள். இக்கதையை, சாத்தனார், புத்தமதத்தைப் போற்றுவதற்காக வலிய படைத்துக் காட்டியுள்ளார். சுதமதி சமண மதத்தில் இருந்தும், புனிற்றாப் பாய்ந்த வயிற்றுப் புண்ணினனாய்க் கையற்ற நிலையில் இருந்த சுதமதியின் தகப்பன் கௌசிகனைப் போற்ற மறுத்த சமண மதத்தின் தாழ்வைச் சுட்டி, பிற மதத்தில் இருப்பவராயினும், கையற்ற நிலையில் அதைப் போற்றாது உதவிய பௌத்த மதத்தின் மேன்மையையும் சுட்டுகிறார். இக்கதை மூலம் சாத்தனார்,

அருளறம் பூண்ட ஒருபெரும் பூட்கையின்
அறக்கதி ராழி திறப்பட உருட்டிக்
காமற் கடந்த வாமன்[3]

சிறப்பையும், அவ்வன் பாதம் வணங்கும் அடியவரின் அருள் திறத்தையும் எடுத்துக்காட்டுகிறார். இக்கதையும், துணை மாந்தரின் வாழ்க்கையைப் பேசுவதால் காப்பிய மையக்கதையுடன் இணைந்து நின்று, ஒட்டிய கிளைக்கதையாகத் திகழ்கிறது.

இவ்விரு கிளைக் கதைகளின் மூலம், சுதமதி, மேகலையுடன் சிறுபிராயம் முதல் பழகிய தோழி அல்ல என்பதையும், மேற்கொண்ட சமயத்தால் இணைந்த தோழி என்பதையும் அறிய முடிகிறது.

### 3.4.3 சக்கரவாளக் கோட்டம் எழுந்த கதை:

சுதமதி, மணிமேகலா தெய்வத்திடம்,

நெடுநகர் மருங்கின் உள்ளோ ரெல்லாஞ்
சுடுகாட்டுக் கோட்ட மென்றல துரையாஅ
சக்கர வாளக் கோட்ட மஃதென
மிக்கோய் கூறிய உரைப்பொரு ளறியேன்
சங்கிதன் காரண மென்னை

என வினவ, மணிமேகலா தெய்வம் மணிமேகலையும், சுதமதி-யும் கேட்க இக்கதையைச் சொல்லுகிறது. இறந்த உயிரை எத்தெய்வத்தாலும் உயிர்பெறச் செய்ய முடியாது, அவ உயிர் தன்வினைக்கேற்ப மறுபிறவிஎடுக்கும் என்ற பௌத்த தத்துவத்தை இக்கதை விளக்கி நிற்கிறது.

புத்த ஜாதகக்கதையில் உள்ள ஒரு கதையின் பொருளை ஒட்டி எழுந்தது இக்கதை. ஒரு பெண் இறந்த தன் மகனை உயிர் பெறச் செய்யுமாறு புத்தனிடம் வேண்டி அழுதது போல், இங்குக் கோதமை என்ற பெண் சம்பாதி என்ற தெய்-வத்திடம் தன் மகன் சாருங்கலனுக்கு உயிர் தரச் சொல்லி அழுகிறாள். சம்பாதி, ஊழி முதல்வன் உயிர்தரின் அல்லது திரியுந் தெய்வம் யாராலும் இறந்த உயிரை மீட்க முடியாது என்று கூறி, அனைத்துத் தெய்வங்களையும் தன் ஆற்றலால் ஒருங்கு கூட்டி அதை நிரூபித்துக் காட்டியது. இப்படி அனைத்துத் தெய்வங்களும் ஒரு காலத்தே இவ்விடத்தே கூடியதைப் பிற்காலத்தவர் அறிந்து கொள்ளற் பொருட்டு, மயன் என்னும் தெய்வ தச்சன் சக்கரவாளத்தை நிறுவினான் என்று மணிமேகலா தெய்வம் கோட்டம் தோன்றிய கதையை கூறி முடிக்கிறது இக்கதை, காப்பிய ஓட்டத்திற்-குச் சிறிதும் தேவையில்லாத கதையாகும். பௌத்தக் கருத்துக்களைப் பேசுவதற்காகவே சாத்தனார் இக்-கதையை எடுத்தாண்டுள்ளார்.

இக்கதை மூலம் கீழ்க்கண்ட பௌத்தக் கொள்கை-களைப் பேசுகிறார் சாத்தனார்.

1) முற்பிறப்பில் செய்த தீவினையானது மறுபிறப்பில் உறுத்து வந்து ஊட்டும். 'தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்ற கருத்தை இக்கதை உணர்த்துகிறது.

2) 'கொலை அறம் ஆம் எனும் கொடுந்தொழின் மாக்-கள் அவலப் படிற்றுறை ஆங்கது' என்ற கருத்தையும் இக்-கதை கூறுகிறது. அதாவது, மன்பதையின் துயர் தீர்க்கும் பொருட்டு, வேள்விக் களத்தில் ஓர் உயிருக்காக மற்றொரு உயிரிரைப் பலியிடுவது என்பது அறமாகாது அது தீவினையே ஆகும். அதனால் விளைவது துன்பமே - என்பதையும் இக்-கதை உணர்த்துகிறது. இக்கருத்து, பார்ப்பன மத அறியா-மையை இடித்துரைப்பதாகும்.

3. தெய்வத்திடம் வரம் கேட்டு நின்றால், அது வழி-பட்டோர் துயர் தீர்க்கும் வரத்தை வழங்கும் என்ற அந்த-ணரின் நம்பிக்கை உண்மையானது அல்ல எனச் சம்பாதி தெய்வத்தின் கூற்று மூலம் உணர வைக்கிறார் சாத்தனார்.

4. திடீர் என்று இறந்தவனைப் 'பேய் அடித்தது' என்று கூறுவது மூட நம்பிக்கையாகும்; அறியாமையாகும் எனச் சுட்டிக் காட்டுகிறார்.

> அணங்கும் பேயும் ஆருயி ருண்ணா
> பிணங்குநூன் மார்பன் பேதுகுற் றாக
> ஊழ்வினை வந்திவன் உயிருண்டு கழிந்தது[5]

என, ஊழ்வினைக் காலம் சமீபித்த போது திடீரென்று இறக்கிறான். பேய், பிசாசு இவைகள் உயிருண்ணாது என்ற கருத்தை இக்கதைமூலம் சாத்தனார் எடுத்துரைககிறார்.

5. இறந்துபட்ட உயிரைத் திரும்பவும் பிறப்பிக்க முடியாது, அது வினைக்கேற்ப மறுபிறப்பு எடுக்கும் என்பதை இக்கதை முடிவு கூறி நிற்கிறது.

சிறப்பாகச் சொல்லப் போனால், இக்கதை மூலம் சாத்தனார் பௌத்தமத உயர்வையும், பிராமணர்களின் மூடநம்பிக்கைகளையும் மிக அழகாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார். சாத்தனார், ஒரு தீவிர சமயவாதியாக இருந்தாலும், சிறந்த பகுத்தறிவாதியாகவும் திகழ்வதை இக்கதை எடுத்துக்காட்டுகிறது. காப்பிய மையக்கதை ஓட்டத்திற்கு, இக்கிளைக்கதை எந்தவிதத்திலும் உறுதுணைப் புரியவில்லை என்றாலும், அம்மையக் கதை பேசும் சமயத்தை இக்கதை பேசுவதாலும், காப்பியக்கதை மாந்தருள் ஒருத்தியான மணிமேகலா தெய்வம் இக்கதையைக் கூறுவதாலும், இது காப்பியத்துடன் இணைந்து நிற்கிறது. எனவே, இதை ஊன்று கிளைக்கதையாகவே கொள்ளமுடிகிறது.

3.4.4 மணிமேகலையின் முற்பிறப்புக் கதை : :-

மணிமேகலை, தன் காந்தளஞ் செங்கையைத் தலைமேல் குவித்து, புத்த பீடிகையை, இடமுறை, வலமுறை சுற்றி வணங்கி எழுந்து, முற்பிறப்பை வழுவின்றி உணர்ந்தபின், தனக்கு முற்பிறவியில், இப்பிறவி உணர்த்திய பிரமதருமன் என்ற முனிவனை அகக்கண்முன் முன்னிலைப்படுத்தி, தன் முற்பிறப்பு வரலாற்றைக் கூறுகிறாள். இப்படிக் காப்பியப் பாத்திரமல்லாத ஒரு பாத்திரம் கிளைக்கதையைக் கேட்பதாக, மற்ற எந்தக் கிளைக்கதையுமே அமையவில்லை என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இக்கதை, முற்பிறவியில் மணிமேகலை இலக்குமி என்ற பெயருடன், இரவிவர்மன் என்ற அரசனுக்கும், அமுதபதி என்னும் அரசிக்கும் மகளாக இருந்து வளர்ந்ததைக் கூறுகிறது. பின், இராகுலன் என்பவன் மனைவியாகி, அவன் 'திட்டிவிடம்' கடித்து இறக்க, அவனுடன் இவள் உயிர்துறந்ததாகக் காட்டப்படுகிறது. பிரமதருமன் என்ற முனிவன் அருளால் முற்பிறவியிலேயே, இப்பிறவியில் நடப்பதையும்

இலக்குமி அறிந்திருந்தாள் என்பதை இக்கதை சுட்டுகிறது.

இக்கதை, 'பிறவிகள் உண்டு' என்பதையும், அப்பிறவிகள் வினைப்பயனால் அமையும் என்பதையும், உணர்த்தி நிற்கிறது. இதுவும், பௌத்தக் கொள்கையைப் பேச வந்த கதையேயாகும். தவிர, 'ஒருவர் என்ன நினைவுடன் இறக்கின்றாரோ அதே நினைவின் பலனை அவர் மறுபிறவியிலும் பெறுவர்''[6] என்ற கருத்தையும் இக்கதை உணர்த்துகிறது. காப்பியத் தலைமை மாந்தரான மணிமேகலையின் முற்பிறப்பு வாழ்வைப் பற்றிய கதை என்பதாலும், மேகலை தன் பழம்பிறப்புணர்ந்து, இப்பிறப்பை நல்வழியில் நடத்த இக்கதை துணைநிற்பதாலும், இக்கிளைக்கதையை ஒட்டிய கதையாகக் கொள்ள முடிகிறது.

### 3.4.5 மணிமேகலையின் முற்பிறப்புக் கதை II :-

மணிமேகலை, மணிமேகலா தெய்வத்திடம்,

உன்திரு வருளால் என்பிறப் புணர்ந்தேன்
என்பெருங் கணவன் யாங்குள னென்றலும்[7]

அத்தெய்வம் இக்கதையைச் சொல்லுகிறது. ஆனால், இக்கதை முழுக்கமுழுக்க உதயகுமாரனைப் பற்றிப் பேசவில்லை. மேகலை உதயகுமாரன் ஆகிய இருவரும் முற்பிறப்பில் சேர்ந்து அனுபவித்த ஒரு நிகழ்ச்சியைக் கூறுகிறது. மேகலை முற்பிறப்பில் சாதுசக்கரனை உணவிட்டு உபசரித்தலால் இப்பிறவியின் அதன் பயனாகிய நல்வினையை அனுபவிக்கிறாள் எனக்கதை கூறுகிறது. 'பௌத்த துறவிகளை உபசரித்தல் என்பது சிறந்த நல்வினையாகும் என்று இக்கதை மூலம் சாத்தனார் எடுத்துரைக்கிறார்' 'முற்பிறப்பில் இராகுலனாக விளங்கியவன்தான் இப்பிறப்பில் உதய குமாரனாகப் பிறப்பெடுத்துள்ளான் என்று இக்கதை முடிவில் மணிமேகலா தெய்வம் கூறுகிறது.

முதலில் கூறிய முற்பிறப்புக் கதையின் தொடர்ச்சி இக்கதை என்றாலும், சொல்லும் நோக்கம் மாறுபடுவதால் இதைத் தனி ஒரு கிளைக் கதையாகக் கொள்ள முடிகிறது. மணிமேகலை உதயகுமாரனால் சலனம் எய்தி,

புதுவோன் பின்றைப் போனதென் நெஞ்சம்
இதுவோ அன்னாய் காமத் தியற்கை
இதுவே யாயிற் கெடுகதன் றிறமென [8]

முன்பு சுதமதியிடம் கூறினாள் என்றாலும், உதய குமாரன் மேல் அவள் வைத்த பற்றை முழுவதுமாக அகற்ற முடியவில்லை. அதற்குத் தக்கதொரு காரணத்தை இக்கதைமூலம், சாத்தனார் படைத்துக் காட்டுகிறார். தவிர, மேகலையை, உதயகுமாரன் யார் என்பதை அறிந்து செயல்பட வைக்கிறது இக்கதை. இவ்வாறு, இக்கிளைக்கதை, காப்பியத் தலைமைப் பாத்திரத்தின் முன்வரலாறாகவும், அவள் மனசலனத்திற்குரிய காரணத்தைத் தெளிவுபடுத்தும் கதையாகவும் விளங்குவதால் இதை ஒட்டிய கிளைக் கதையாகக் கொள்ள முடிகிறது.

### 3.4.6. மாதவி சுதமதி ஆகிய இருவரின் முற்பிறப்புக் கதை

இக்கதை இருபகுதியாக இருவேறு இடத்தில் பேசப்படுகிறது. முற்பிறப்பு வரலாற்றைக் கூறி, வினைப்பயனைஉணரவைக்கும் நோக்கத்திலேயே இவ்விரு பகுதிகளும் அமைந்திருப்பதால் இவற்றை ஒரே கிளைக்கதையாகக் கொள்ளலாம். முற்பகுதியை, மணிமேகலா தெய்வம் மணி மேகலை கேட்கச் சொல்லுகிறது. பிற்பகுதியை அறவண அடிகள், மணிமேகலை, மாதவி, சுதமதி கேட்கச் சொல்லுகிறார். காரணமில்லாமல், இப்படிக் கதைப் பகுதியைப் பிரித்து இருவேறு இடத்தில் இருவேறு கூற்றில் சொல்லியிருப்பதால் காப்பிய ஒருமையும், காப்பியக் கட்டுக்கோப்பும் சிதைகிறது,

சுதமதி, மாதவி இருவரும் முற்பிறப்பில் தாரை,வீரை என்று இலக்குமியின் சகோதரிகளாகப் பிறந்து, பின் துச்சய மன்னன் மனைவியாகி, அறவண அடிகள் நல்லுரையால் பாத பங்கய மலையை வலம் வந்து நல்வினைப் பயன் பெற்றதை முதற்பகுதி கூறுகிறது.

இரண்டாவது பகுதி, தாரை வீரை சகோதரிகள் இறந்து பட்ட விதத்தைக் கூறுகிறது.

முன் பிறவியில் தாரை வீரை சகோதரிகள் 'பாதபங்கய மலை'யைச் சுற்றிய நல்வினையால் இப்பிறவியில் வெவ்வேறு இடத்துப் பிறந்தும், மணிமேகலையுடன் அன்புத் தொடர்புடையவர்களாகப் பிறந்துள்ளனர் என்பதை இக்கதை மூலம் சாத்தனார் படைத்துக் காட்டுகிறார்.இக்கதை பௌத்த கருத்தான 'வினைப் பயன்' கூறும் நோக்கிலும், பௌத்த நம்பிக்கையான 'புத்தன் காலடிச் சுவடு படிந்த மலையை வணங்கி எழுவதால் வரும் நற்பேற்றைக்' கூறும் நோக்கிலும் எடுத்தாளப்பட்டிருக்கிறது. காப்பியத் துணைமாந்தர்களின் முற்பிறப்புக் கதையைப் பேசுவதால் இதை ஒட்டிய கதையாகக் கொள்ள முடிகிறது.

3.4 7 விசுவாமித்திரன் கதை:

பசிப்பிணி என்னும் கொடுமையைப் பேசவந்த கதை இது. பௌத்த மதக் கொள்கைகளில் ஒன்று 'பசிப்பிணி நீக்குதல்', பசியின் கொடுமை, ஏழையை மட்டும் அல்ல, உயர்ந்தோரையும், ஏன் முற்றும் துறந்த முனிவரையும் பாதிக்கிறது என்பதை இக்கதை மூலம் சாத்தனார் படைத்துக் காட்டுகிறார் இக்கதையைத் தீவதிலகை மணிமேகலைக்கு எடுத்துச் சொல்லுகிறது.

விசுவாமித்திர முனிவன் பசிப்பிணியின் கொடுமையால், உண்ணும் உணவு வகைகளில் யாதொன்றும் பெற முடியாமல், இறந்த நாயினைத் தின்னப் புகுந்த கொடுமையை

இக்கதை மூலம் கூறி, 'இப்படிப்பட்ட கொடிய பசிப்பிணி-யைத் தீர்க்க வேண்டும் நீ' எனத் தீவதிலகை மணிமேகலை-யிடம் கூறுகிறது. கதை முடிவில்,

ஆற்றுநர்க் களிப்போர் அறவிலை பகர்வோர்
ஆற்றா மாக்க ளரும்பசி களைவோர்
மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே[9]

என அத்தெய்வம் அறம் கூறுகிறது. இவ்வரிகள் பௌத்தக் கொள்கையான 'பசிப்பிணி நீக்குதல்' என்ற அரிய அறத்தை விளக்கி நிற்கிறது. இக்கிளைக்கதை, காப்பிய மையக்கதை பேசும் பௌத்தமதக் கொள்கையைப் பேசுவதால் காப்பியத்துடன் இணைந்து நிற்கிறது மையக்கதையுடன் சமயத்-தொடர்பால் மட்டும் இணைவதாலும், காப்பியத்தில் இதன் பயன்பாடு அவ்விடத்திலேயே முடிந்து விடுவதாலும் இதை ஊன்று கிளைக்கதையாகவே கொள்ள முடிகிறது.

### 3.4.8 ஆபுத்திரன் கதை (காப்பியத்துள் காப்பியம்)

'மாபெரும் பாத்திரம் மடக்கொடிக் கருளிய
ஆபுத் திரன்றிறம் அணியிழை கேளாய்[10]

என அறவண அடிகள் 'அமுதசுரபி' நல்கிய ஆபுத்திரன் வரலாற்றை மணிமேகலையிடம் கூறுகிறார். ஆபுத்திரனின் பிறப்பு, வளர்ப்பு, அவன் 'அமுதசுரபி' பெற்ற வரலாறு, அதன் மூலம் அற்றார் பசி தீர்த்த செய்கை, பின்பு 'அமுத-சுரபியைப் பயன்படுத்த முயலாமல் போனது, அதைக் கோமுகிப் பொய்கையில் விட்டு, இறந்தது என ஆபுத்திரன் பிறப்பு முதல் இறப்பு வரை நடந்தவற்றை இக்கதையின் மூலம் சாத்தனார் எடுத்துக்காட்டுகிறார். இதுதவிர, மறு-பிறவியில் ஆபுத்திரன் ஆ வயிற்றில் பிறந்தது, பின்பு மன்னன் ஆனது என்ற நிகழ்ச்சிகளையும் இணைத்துக் கூறுகிறார்.

ஆபுத்திரன் மறுபிறவியில் ஆ வயிற்றில் பிறந்தபோது, உலகில் புத்தன் பிறந்த போது நடந்த அதிசயங்கள் யாவும் நடந்ததாகச் சாத்தனார் படைத்துக் காட்டியுள்ளார். புத்தமதத்தினரிடம், 'புத்தர் மறுபடி மறுபடி பிறப்பெடுத்து அறம் கூறுவார்' என்ற நம்பிககை உண்டு. ஆபுத்திரனைச் சாத்தனார் ஒரு புத்த அவதாரமாகவே கண்டிருககிறார் என்பதற்கு அவர் படைத்திருக்கும் விதமே சான்றாகி நிற்கிறது.

ஆபுத்திரன் கதை, கிளைக்கதை அமைப்பில் இருந்து சற்று மாறுபட்ட நிலையில், காப்பிய மையக்கதை பகுதி என்று அய்யுறும் வண்ணம், மையக்கதைக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்துடன் படைத்துக் காட்டப்பட்டுள்ளது. 'ஆபுத்திரன் வரலாறு' காப்பியத்துள் ஒரு சிறு காப்பியமென, படைத்துக்காட்டப்பட்டுள்ளது. 'பசிப்பிணியின் கொடுமை போக்கப் பாடுபட்டது' என்பதே இக்கதையின் முதன்மையான நிகழ்ச்சி என்றாலும், அந்நிகழ்ச்சிக்கு அழுத்தம்தர, அவனது முன்பின் வரலாறுகள் தேவைப்பட்டிருக்கிறது என்பதை இககதையை ஒரு தனிமனிதனின் வாழ்க்கை வரலாறாகவே படைத்துக்காட்டி விட்டார் சாத்தனார். தவிர, அவர், 'ஆபுத்திரன் வாழ்க்கை வரலாற்றில்' கொண்டுள்ள ஈடுபாடும், இப்படி வரலாறு பாடக் காரணமாகிறது.

காப்பியப் புலவர் ஆபுத்திரன் வரலாற்றில் ஈடுபாடு கொண்டிருந்தார் என்று கூறுவதற்குத் தக்க சானறுகள் உண்டு. ஆபுத்திரன் பிறப்பு முதல் இறப்பு வரைக் கூறி முடித்தவர், காப்பியப் போக்கில் ஆங்காங்கே ஆபுத்திரன் இறந்தபின் அவனுக்காக வணிகர்கள் தங்கள் உயிரைத் துறந்தது, அவர்கள் எலும்புக்கூடுகள் புதையுண்ட இடம், ஆபுத்திரன் எலும்புக்கூட்டை அவனே மறுபிறவியில் பார்த்தது, அவன் மறுபிறவியில் புண்ணியராசனாய் அரசாண்

டத்து, மேகலை அவனை நெறிப்படுத்தியது போன்ற நிகழ்ச்சிகளைச் சொல்லுகிறார். இவையெல்லாம் காப்பிய ஓட்டத்திற்குச் சிறிதும் தேவையில்லாத நிகழ்ச்சிகள் தான். இருந்தும் இவற்றைச் சாத்தனார் படைத்திருப்பதற்கு, அவர், ஆபுத்திரன் வரலாற்றில் கொண்ட ஈடுபாடே காரணமாகும்.

ஆபுத்திரன் கதை மூலம் சாத்தனார் பௌத்த மதக் கொள்கைகளையும், பிறமத எதிர்ப்பையும் படைத்துக் காட்டியுள்ளார். அவையாவன:

பௌத்தக் கொள்கை:

1. நன்மைக்காகவும் பிற உயிரைக் கொல்லுதல் கூடாது.

2. பசிப்பிணி நீக்குதல் வேண்டும். தன்நிலை பேணாது அற்றாருக்குப் பசிப்பிணியை நீக்குதலே தலையாயக் கடமையாகக் கொள்ளுதல் வேண்டும்.

பிற மத எதிர்ப்பு:

இக்கதையின் மூலம் சாத்தனார் பிராமண சமுதாயத்தை அதிகம் தாக்கியுள்ளார். 'பிராமண சமுதாய எதிர்ப்பு என்ற முழக்கமே இவரிடம் இருந்துதான் தோன்றியதோ என நினைக்கத் தோன்றுகிறது. பிராமண குல முன் தோன்றல்களான வசிட்டனையும், அகத்தியனையும் கணிகைக்குப் பிறந்தவர்கள் எனச்சாடுகிறார். வேள்வியின்பால் உயிர்க்கொலை புரியும், அவர்களின் காட்டுமிராண்டித்தனத்தை இடித்துரைக்கிறார். சிறப்பாகச் சொல்லப்போனால், இக்கதை மூலம் சாத்தனார் வேதத்தை, வேள்வியை, வேதியரைச் சாடுகிறார் எனலாம்.

இக்கதை, இக்காப்பியத்தில் வரும் மற்றக்கிளைக் கதைகளைக் காட்டிலும் மிக நீண்ட கதையாகப் படைக்கப்பட்டுள்ளது. 'ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை' என்றும், ஆபுத்திரனோடு அடைந்த காதை' என்றும், 'ஆபுத்திர

ஞ்நாடு மணிபல்லவமடைந்த காதை' என்றும் இக்கிளைக் கதை நாயகன் பெயராலேயே மூன்று காதைகள் அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இக்கதையை இருவித நோக்கத்துடன் காப்பியப் புலவர் படைத்துள்ளார். ஆபுத்திரன் வரலாற்றைக் காட்டி, இத்தகைய சிறந்த ஒருவன் கைப்பாத்திரம் மேகலைக்குக் கிடைத்துள்ளது எனத் தலைமைப் பாத்திரத்தின் பண்பை உயர்த்திக் காட்டியுள்ளார். மேலும், ஆபுத்திரன் கதையை, மேகலை பற்றிய மையக்கதைக்கு இணையாகவும் (காப்பிய இணை) படைத்துக் காட்டியுள்ளார். மேகலை, ஆபுத்திரன் இருவரும் பிறப்பால் தாழ்வுடையவர்கள் என்றாலும், செயல் மேம்பாட்டால் போற்றத்தகுந்தவர்கள் என்பதையும், நோக்கத்தால் ஒன்றுபட்டவர்கள் என்பதையும் காட்டுவதுடன் மட்டுமல்லாமல், அடையும் பேற்றாலும் ஒன்று பட்டவர்கள் என இருவர் நிலைகளையும் சாத்தனார் இணையாகப் படைத்துக் காட்டியுள்ளார்.

ஆபுத்திரன் வாழ்க்கையை அறிந்தால்தான், மேகலை கையில் கிடைத்திருக்கும் அமுதசுரபியின் மேன்மையை நாம் உணரமுடியும். இப்படி, காப்பிய மையக்கதையினுடைய முக்கிய நிகழ்ச்சிக்கு இக்கதையே அடித்தளமாக அமைவதால், இதை ஒன்றியக் கிளைக்கதையாகக் கொள்ள முடிகிறது.

### 3.4.9 ஆதிரையின் கதை

'பத்தினிப் பெண்டிர் இடும்பிச்சை ஏற்றல் பெருந்தகைமையாகும்' என்று மணிமேகலை கூற, அதன் குறிப்பறிந்து மங்கல மனைப் பேணும் ஆதிரையின் கற்பின் திறம் கூறி, அவள் இடும் பிச்சை பெருந்தகைமை உடைத்து என காயசண்டிகை கூறுகிறாள். இக்கதையில், ஆதிரையின் கணவன் சாதுவனின் முறையற்ற செயல், பின் அவன் திருந்தி பொருள் தேடச் செல்லுதல், மரக்கலம் உடைந்து நாகர் நாட்டிற்குச்

செல்லல், அவன் இறந்ததாக ஆதிரை தீப்பாய்தல், தீ அவளை அணுகாமை, பின் அசரீரி ஒலித்தல், ஆதிரை மகிழ்ந்து இல்லம் செல்லுதல் என்ற செய்திகள் கதைப்படுத்திக் கூறப்படுகின்றன. ஆதிரையின் கற்பு, அக்கற்பின் மாண்பால் அவள் வாழ்க்கையில் அடைந்த மேன்மை, அதனால் காப்பியத்தில் அவள் பெற்ற ஏற்றம் என்றநிலைகளில் 'கற்பு' என்ற ஒன்றே இக்கதையில் தலைமை பெறுகிறது. இப்படிப்பட்ட கற்புடைய மாது இட்ட பிச்சை அமுதசுரபியை வளம் பெறச் செய்கிறது எனச் சாத்தனார் படைத்துக்காட்டுகிறார்.

இக்கதையின் மூலம் சாத்தனார், தக்கவர் மூலம் பெறப்படும் செல்வம் பெருகற்பாலது என்பதையும், பெண்மையின் மனத்திண்மையான கற்பு என்பது தெய்வீக ஆற்றலுடையது என்பதையும் எடுத்துக்காட்டுகிறார். இக்கதையின் பயன்பாடு, மையக்கதையைப் பொறுத்தவரை, ஆதிரைப் பிச்சையிட்டு அமுதசுரபி பெருகியதுடன் நிறைவு பெற்றுவிடுகிறது என்றாலும், காப்பிய முக்கிய நிகழ்ச்சியான அமுதசுரபியை வளம்பெற வைத்த நிகழ்ச்சிக்கு அடிப்படைக் காரணமாகவும் அமைவதால் இதை ஒட்டிய கிளைக்கதையாகக் கொள்ள முடிகிறது.

### 3.4.10 சாதுவன் வரலாறு

ஆதிரையின் கணவன் சாதுவனின் அனுபவத்தைப் பேசும் கதை இது. சாத்தனார் பௌத்த மதக்கொள்கைகளைப் பேச வேண்டும் என்பதற்காகவே இக்கதையைப் படைத்துள்ளார். இக்கதை மிக விரிவாகப் பௌத்தக் கொள்கைகளைப் பேசுகிறது. நாகர் இனத்தலைவனுக்கு சாதுவன் கூறும் அறிவுரைகள் யாவும் பௌத்தமதக் கொள்கையின்பாற் பட்டனவேயாகும்.

உயிரைக் கொல்லாமை, ஊன் உண்ணாமை, கள்ளுண்ணாமை, போகம் அனுபவிக்காமை, மறுபிறப்பில் நம்பிக்கை என்ற ஐந்து பௌத்தக் கொள்கைகளை இக்கதை வாயிலா-

த் சாத்தனார் எடுத்துக்காட்டுகிறார். இவ்வுலகில் வாழும் நன்மக்கள்,

பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்ற துண்மையின்
நல்லறஞ் செய்வோர் நல்லுல கடைதலும்
அல்லறஞ் செய்வோர் அருநர கடைதலும்
உண்டென உணர்தலின் [11]

கள்ளுண்பது தீவினை பயக்கும் என்று அறிந்து ஒதுக்கியதைச் சாத்தனார் இக்கதைவாயிலாக அழகாக எடுத்துக்காட்டு-கிறார். இவ்வுலகில் வாழ, மக்கள் செய்யவேண்டிய நல்ல-றங்களைச் சாதுவன் கூற்றாக எடுத்துரைக்கிறார்.

சாத்தனார், இக்கதையை ஒரு சிறந்த அறிவியல் நோக்-குடையதாகவும் படைத்துள்ளார். இவர், இக்கதையில் உயிருண்மை பற்றியும், மறுபிறப்புப் பற்றியும், கனவு பற்றியும் பேசும் கருத்துக்கள் இன்றைய திபெத்திய ஞானியான 'உயர் லாமா டாக்டர் டியூஸ்டே லாப்சாங் ராம்பா' கூறிய உயிருண்மைக் கருத்துக்களுடன் அப்படியே பொருந்தி வரு-கின்றன[12]. வியக்கத்தக்க வகையில், அன்றே உயிருண்மை பற்றிய தெளிவான சிந்தனையை இக்கிளைக் கதைமூலம் தந்து உயர்ந்துள்ளார் சாத்தனார்.

ஆனால் காப்பிய ஓட்டத்தைப் பொறுத்தவரை, இக்-கதை தேவையில்லாத ஒன்றாக விளங்குகிறது. சாத்த-னார் பௌத்தம் பேசுவதற்கென்றே இக்கதையைப் படைத்-துக் கொண்டதால், இதை ஊன்று கிளைக்கதையாகவே கொள்ள முடிகிறது.

3.4.11 காய சண்டிகை வரலாறு

காயசண்டிகை தன் வரலாற்றைத் தானே, மேகலை-யிடம் கூறுவதாக இக்கதைப் படைக்கப்பட்டுள்ளது. இது, ஒரு சாப வரலாற்றுக் கதை. யானைத்தீ நோயால் அவதிப்

படும் காயசண்டிகை என்ற விச்சாதரப் பெண்ணின் கதை இது விருச்சிகன் என்ற முனிவன் உண்ண வைத்திருந்த பழத்தை, காயசண்டிகை அறியாமல் சிதைத்ததால், யானைத் தீப்பசி என்ற கொடிய நோய்க்கு ஆளாகிறாள். 'பசி வந்திடப் பத்தும் பறந்து போகும்' என்பது பழமொழி. காயசண்டிகைக்குப் பசி வந்திட, விச்சாதர உலகம் செல்ல சொல்லும் மந்திரமே மறந்துபோய் அவதிப்படுகிறாள். வயிறுகாய் பெரும்பசியால் 12 ஆண்டுகள் அவதிப்பட்ட காயசண்டிகையின் துன்பத்தை மணிமேகலை அமுதசுரபி-யின் உதவியால் போக்கினாள். பசிதீர்ந்த காயசண்டிகை, மேகலையை நெறிப்படுத்துகிறாள்.

ஊரு ராங்கண் உறுபசி உழந்தோர்
ஆரும் இன்மையின் அரும்பிணி யுற்றோர்
இடுவோர்த் தேர்ந்தாங் கிருப்போர் பலர் [13]

உலகறவறவியின்பால் உள்ளனர். அவர்களிடம் சென்று, மேகலைப் பசிப்பிணி நீக்குதல் வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறாள்.

இக்கதையைச் சாத்தனார், பசிப்பிணி, மானிடர்களை மட்டுமன்றி, தெய்வத்தன்மை பெற்ற விச்சாதரர்களையும் பாதிக்கிறது என்பதைக் சுட்டிக்காட்டப் படைத்துள்ளார். மிக்கொடிய யானைத்தீ பசியையும் தீர்த்தவள் மேகலை எனப்படைத்துக்காட்டி, அவள் பாத்திரத்தையும், இக்கதை மூலம் உயர்த்துகிறார்.

காயசண்டிகை என்ற துணைமாந்தர் கதையாக இக்-கதை விளங்குகின்றது. காயசண்டிகை என்ற பாத்திரத்தை இக்கதை மூலமாகவே நாம் இனங்கண்டுகொள்ள முடிகிறது பின்னால், காயசண்டிகையின் கணவனால் உதயகுமாரன் கொலையுறப் போகிறான். திடீரென்று காயசண்டிகை கண-வனைக் கொண்டுவந்தால் காப்பிய ஓட்டத்தில் தெளிவு

இருக்காது. ஆதலால், அவனையும் முன்னதாக இக்கதை மூலம் படைத்துக் காட்டி, அக் கொலைக்குரிய காரணத்தையும் படிப்பவர் தெரிந்து கொள்ளுமாறு அமைத்துக் காட்டி விடுகிறார். இப்படி, துணைப்பாத்திரத்தின் கதையாகவும், மையக்கதை நிகழ்ச்சிக்கு விளக்கம் தரும் கதையாகவும் விளங்குவதால், இக்கிளைக் கதையை ஒட்டிய கிளைக்கதையாகக் கொள்ள முடிகிறது.

### 3.4.12 உதயகுமாரனின் முற்பிறப்புக் கதை

மணிமேகலை, உதயகுமாரன் காஞ்சனன் வாளால் வெட்டுண்டு இறந்ததும், கந்திற் பாவையிடம்,

> விட்ட பிறப்பின் வெய்துயர்த் தீங்கிவன்
> திட்டிவிட முணச் செல்லுயிர் போயதும்
> நெஞ்சு நடுங்கி நெடுந்துயர் கூரயான்
> விஞ்சையன் வாளி னிவன்விளிந் ததூஉம்
> அறிதலு மறிதியோ[14]

எனச் சொல்லி அழ, அத்தெய்வம் உதயகுமாரன் முற்பிறவியில் செய்த தீவினையை இக்கதைமூலம் சொல்லுகிறது. முற்பிறவியில் இராகுலன் என்ற பெயருடையவனாக இருந்த உதயகுமாரன் மடைத் தொழிலாளனைக் கோபத்தால் வெட்டிய வெவ்வினைதான், அப்பிறவியில் மட்டுமல்லாமல் இப்பிறவியிலும் தொடர்ந்து வந்து பயன் ஊட்டியது எனக் கந்திற்பாவைக் கூறுகிறது. இக்கதை, 'நன்மையின் பொருட்டும் தீவினை கூடாது' என்ற உண்மையை, பௌத்த கொள்கையை விளக்கிச் சிறக்கிறது.

இக்கதையும், பௌத்த கொள்கையான 'வினைக் கோட்பாடு' பற்றிப் பேச எழுந்த கதையே. உதயகுமாரன் வாளால் கொலையுறும் அளவிற்கு அவன் தன் வாழ்வில் செய்த தீங்கு யாது என மணிமேகலையுடன் சேர்ந்து வாசகர்களாகிய நாமும் புலம்பும் போது, அவன் முற்பிறப்பில்

செய்த தீவினையே,இப்பிறப்பில் உறுத்து வந்து ஊட்டியுள்ளது எனத் தெளிவு படுத்துகிறார். இப்படித் தலைமைப் பாத்திரத்தின் முற்பிறப்பு வரலாற்றை விளக்குவதாகவும், மையக்கதை நிகழ்ச்சிக்குத் தெளிவு தருவதாகவும் இக்கதை அமைக்கப்பட்டிருப்பதால்,இதை ஒட்டிய கிளைக் கதையாகக் கொள்ள முடிகிறது.

### 3.4.13 கந்திற் பாவையின் வரலாறு

சுவரில் உள்ள ப்ர்வையானது தான் பேசுவதைக் காப்பியத் தலைவியான மேகலை நம்ப வேண்டும் என்பதற்காக, தன் வரலாற்றைத் தானேக் கூறுகிறது. காப்பியத்தில் இக்கிளைக்கதையின் பயன்பாடு மிகக்குறைவு. மேகலை கந்திற்பாவையின் வரலாற்றைக் கேட்பதால்தான், தன் ஐயம் நீங்கி, அத்தெய்வத்தின் மொழியை நம்புகிறாள். இப்படி, இதன் பயன்பாடு தோன்றிய சூழலிலேயே முற்றுப்பெற்று விடுவதால் இதை ஊன்று கிளைக்கதையாகக் கொள்ள முடிகிறது.

### 3.4.14 மருதி பற்றிய கதை

இது, ஒரு எடுத்துக்காட்டுக் கதை. இக்கதையைச் சக்கர்வாளக்கோட்ட முனிவர்கள் சோழ மன்னனுக்கு எடுத்துரைக்கின்றனர். உதயகுமாரனின் திடீர் இறப்பைக் கேட்டு மன்னன் அதிர்ச்சியும், சினமும் எய்தாமல் இருக்கவும், அவனை அமைதி செய்தற்பொருட்டும், இக்கதையையும், அடுத்துவரும் கதையையும் கூறி, மன்னனை ஆற்றுவிக்கின்றனர் முனிவர்கள். இக்கதையில், மருதியினை விரும்பும் சுகந்தனது இளைய மகன் பற்றியும், மருதி 'பிறர் நெஞ்சு புகுந்தமையால் வருந்தியது' பற்றியும் செய்திகள் இடம் பெறுகின்றன. இக்கதை மூலம் சாத்தனார் கீழ்க்கண்ட நீதிகளை எடுத்துரைக்கின்றார்.

1. பெண்களுக்கு, 'மறந்தும் பிறர்நெஞ்சு புகா கற்பு' இருக்க வேண்டும்.

2. கணவனை அல்லது பிற தெய்வங்களை வணங்குவது கற்புடைய மகளிர்க்கு இழுக்காகும்.

3. அரசன், தன் மகனாயினும் பாராது, நீதி வழங்கி முறை செய்தல் வேண்டும்.

மணிமேகலைக்குத் துன்பம் செய்த உதயகுமாரன் செய்கைகளை அறிந்து, ஒறுக்காத சோழ மன்னனை மறைமுகமாகக் கண்டிப்பதாகவும் இக்கதை அமைந்துள்ளது. இக்கிளைக் கதையின் பயன்பாடும், இது தோன்றிய இடத்திலேயே நிறைவு பெறுவதால் இதனை ஊன்று கிளைக் கதையாகக் கொள்ளலாம்.

### 3.4.15 விசாகை-தருமதத்தன் கதை

மருதி கதையும், இக்கதையும் ஒரே நோக்கத்துடன் எடுத்தாளப்பட்ட இருவேறு கிளைக்கதைகளாகும். மன்னன் மனதைப் பக்குவப்படுத்த எடுத்தாளப்பட்ட இக்கதையை மற்றொரு விதமாகவும் சாத்தனார் பயன்படுத்திக் கொள்கிறார். இக்கதையின் மூலம் இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை பற்றிய பௌத்த கொள்கைகளைச் சாத்தனார் பேசுகிறார். இக்கதை கீழ்கண்ட பௌத்தக்கொள்கைகளைப் பேசுகிறது.

1. 'பத்தினி இல்லோர் பல அறம் செய்யினும் புத்தேள் உலகம் புகாஅர்' எனக் வைதீக மத நம்பிக்கையைச் சுட்டி, அதைத் தவறு எனக் கடிந்துரைக்கிறது. தவிர, 'புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்' எனச் சுட்டி, அறப்பயன் செய்வதின் மூலமாகவே, புத்தேள் உலகம் பெறமுடியும் என்ற பௌத்த நம்பிக்கையை இக்கதை எடுத்துரைக்கிறது.

2. இளமை, செல்வம், யாக்கை இவை நிலைபெற்றன அல்ல. நிலையாமையாகிய இவ்வுலகில் நிலைத்து நிற்கும் அறம் பேணல் வேண்டும் என்றும் இக்கதை சுட்டுகிறது.

இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா
புத்தே ளுலகம் புதல்வரும் தாரார்
மிக்க அறமே விழுதுணை யாவது
தானஞ் செய்யென[15]

என்ற பௌத்த மதத்தின் தாரக மந்திரத்தை விசாகையின் வாயிலாகச் சாத்தனார் இயம்புகிறார். இக்கதையின் பயன்-பாடும்!தோன்றிய இடத்திலேயே நிறைவு பெற்றுவிடுவதால், இதையும் ஊன்று கதையாகவே கொள்ள முடிகிறது.

### 3.4.16 பீலிவளை-நெடுமுடிக்கிள்ளி வரலாறு

இக்கதை மூன்று பகுதிகளாக மூன்று காதைகளில் பேசப் படுகிறது. ஆபுத்திரனாடு அடைந்த காதையில் முதற் பகுதியும், ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்த காதை-யில் 2வது பகுதியும் பேசப்படுகிறது. தவத்திறம் பூண்டு தருமங் கேட்ட காதையில் இவ்விரு பகுதிகளும் இணைத்துப் பேசப்படுகிறது.

இப்படிப் பகுதி பகுதியாகப் பிரித்துப் பேசுவதற்கு எவ்-வித நோக்கமும் இல்லை. முதற்பகுதி சித்திராபதி வாயி-லாக அரசமாதேவி கேட்பதாக அமைந்துள்ளது. பொருத்த-மில்லாத இடத்தில் பொருத்தமில்லாத கூற்றாக இக்கதைப்-பகுதி அமைந்துள்ளது. சோழமன்னர் கதையை, சோழ மாதாவிடமே, ஒரு கணிகை கூறுவதாகக் காட்டப்பட்டுள்-ளதில் என்ன சிறப்பு இருக்கிறது?

2வது பகுதியை, தீவதிலகை மணிமேகலைக்குக் கூறுகி-றது. இத்தெய்வம், புகாரைக் கடல் கொண்டதற்குக் காரணமாக இக்கதையை எடுத்துக்காட்டுகிறது. மன்னன், தொலைந்த தன் மகனைத் தேடி அலைந்து, விழாக்கோள் எடுக்க மறந்தான். தீபகச் சாந்தி செய்யாததால் மணி-மேகலா தெய்வம் கோபமடைந்து, புகாரைக் கடல் கொள்-

ளச் செய்தது என்ற செய்தியை இக்கதை வாயிலாக மேகலை அறிந்துகொள்கிறாள். இக்கதைப் பகுதி பொருத்தமான இடத்தில், பொருத்தமானக் கூற்றாக அமைந்துள்ளது. முதற்பகுதி கதை இல்லாவிடில் இப்பகுதிக்கதை தெளிவடையாது. இருந்தாலும், முதற்பகுதிக் கதையை, அங்கே கூறாமல், இப்பகுதியுடன் இணைத்தே கூறியிருந்தால் சிறப்பாக அமைந்திருக்கும்.

திரும்பவும் சாத்தனார் இதே பீலிவளைக் கதையை மணிமேகலையிடமே, அறவண அடிகள் கூறுவதாக அமைத்துக் காட்டியிருக்கிறார். கேட்கும் பாத்திரமும், நோக்கமும் ஒன்றாகவே அமைந்திருக்க, அதே கதையைத் திரும்பக் கூறுவது பொருத்தமாக இல்லை. இது, 'கூறியது கூறல்' என்ற குற்றத்தின் பாற்படும். இதனால் காப்பிய ஒருமையும் கட்டுக்கோப்பும் சிதைகிறது.

கதைக் கூறப்பட்டிருக்கும் விதத்தில் குறைபாடு இருந்தாலும், இப் பீலிவளைக்கதை அழகான காதல் கதையாக எடுத்தாளப்பட்டிருக்கிறது. இவ்வரலாற்றுக் கிளைக்கதை, யை ஒட்டித்தான், 'மயிலிறகு' என்ற நாவலைப் படைத்துள்ளார் திரு கோவி. மணிசேகரன். இப்படிப் படிப்பவர் மனதை அள்ளித் தன்பால் ஈர்ப்பது இப் பீலிவளைக் கதை. சாத்தனார் இதைப் பகுதி பகுதியாகக்கூறி, கதையின் ஒருமையையும், காப்பியக் கட்டுக் கோப்பையும் சிதைத்து விட்டார். இக்கதையும், ஒரு ஊன்று கிளைக்கதையாகவே கொள்ளப்படுகிறது. காப்பியஓட்டத்திற்கு இக்கதை துணைபுரியாவிட்டாலும், மையக்கதையில் பேசப்படும் நகரமான புகாரின் அழிவிற்குக் காரணத்தைக் கூறுவதால், இக்கதை மையக்கதையுடன் ஒன்றி நிற்கிறது. இதை ஊன்று கதையாகக் கொள்ளலாம்.

### 3.4.17 கண்ணகியின் முற்பிறப்புக்கதை

சிலப்பதிகாரத்தில் கிளைக்கதையாக வந்துள்ள இக்-

கதையைச் சாத்தனாரும் தன்காப்பியத்தில் கிளைக்கதை-யாக எடுத்தாண்டுள்ளார். மேகலை, கண்ணகியிடம், அவள் குணம் பல ஏத்திய பின்,

ஆற்புக்கட னில்லாது நற்றவம் படராது
கற்புக்கடன் பூண்டு நுங்கடன் முடிந்தது
அருளில் வேண்டுமென்று[16]

கேட்க, கண்ணகி, அதற்குக் காரணம் முன் செய்வினைக்-கடன் என்று இக்கதையைக் கூறுகிறாள். சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள கதைப் பொருளே இங்கும் கூறப்பட்டுள்ளது. புத்தபகவான் பிறப்பு பற்றியும், வினைப்பயன் பற்றியும், மேகலையின் வருங்கால நிலைபற்றியும் கண்ணகி பேசுவதாக சாத்தனார் படைத்துக் காட்டியிருக்கிறார். சாத்தனார், தன் இயல்பிற்கேற்ப, கண்ணகியையும் பௌத்தம் பேசவைத்துள்-ளார். முன்நூலில், கோவலனைச் சாவக நோன்பிகளாக அடி-கள் படைத்துக் காட்டியுள்ளார். ஆதலால், சாத்தனார் அப் பாத்திரத்தைத் தன் கொள்கைக்கேற்ப மாற்றம் செய்ய-வில்லை. அதனால்தான், கோவலனை விட்டுவிட்டுக் கண்ணகி வாயிலாகப் பௌத்தம் பேசுகிறார்.

கண்ணகி, தான் மதுரையை எரித்தது தீவினையாகும் என்று கூறுவதாகவும், அதன் பயனை இனிபிறவிகள் எடுத்து அனுபவிப்பேன்' எனக் கூறுவதாகவும் காட்டி, வினைப் பய-னுக்கு தப்பாதவர் ஒருவரும் இல்லை என்று சாத்தனார் எடுத்துக் காட்டுகிறார். மேலும், நல்வினை காரணமாக நற்-பேறு பெற்றாலும், செய்த தீவினையானது அழியாது; அது மறு பிறவி எடுக்கும் போது தொடர்ந்து வந்து தன் பயனை நல்கும்' என்ற பௌத்த கொள்கையைக் கண்ணகிவாழ்க்கை மூலமாகவும், சொல் மூலமாகவும் படைத்துக் காட்டுகிறார் சாத்தனார்.

சிலப்பதிகாரத்தில்-இது ஒட்டியக்கதையாக படைக்-கப்பட்டிருக்கிறது. ஆனால், இங்கு இக்கிளைக் கதையின்

பயன்பாடு கருதி இதை ஊன்று கதையாகவேக் கொள்ளமுடிகிறது. மேகலையின் வினாவிற்கு விடையாக அமைவதுடன் இக்கிளைக்கதையின் பயன் நிறைவு பெற்றுவிடுகிறது.

### 3.4.18 முன்னோன் கோவலன் கதை

கண்ணகியின் கணவனான கோவலனின் ஒன்பது தலைமுறைக்கு முந்திய கோவலனைப் பற்றிய கதை இது. இக்கதையை மாசாத்துவான் மணிமேகலைக்குச் சொல்லுகிறார் அக்கோவலன், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கு நண்பனாக இருந்ததும், அவ்வரசனுக்கு தருமசாரணர், புத்தர் அருளிய வாய்மைகளை அறிவுறுத்தும்போது,உடன் இருந்து கேட்டு,அவ்வுரைப்பயனாக அறம் பலச் செய்ததையும்,கச்சியில் புத்தனுக்குத் திருக் கோயில் எடுத்து சிறப்பித்ததையும், அதனால் சிறந்ததையும் இக்கதை பேசுகிறது. சாத்தனார் இந்தக் கோவலன் கதையை, மாசாத்துவான் கச்சி வந்த நோக்கத்தை விளக்கும் பொருட்டும், பௌத்த கொள்கைகளைப் பேசவும்,கோவலன் பரம்பரையே பௌத்த சமயத்தின்பால் பேரன்பு பூண்டது என்பதைக் காட்டுவதற்காகவும் எடுத்தாள்கிறார்.

இக்கதை, சாத்தனாரின் கற்பனைத் திறனுக்கும், புலமைத்திறனுக்கும் ஒருசிறந்த சான்றாகும். கோவலன்வாழ்க்கையையே முழுக்கமுழுக்கப் பேசும் சிலம்பில், அடிகள் காட்டாத நிகழ்ச்சிகளை,சாத்தனார் இங்குப்படைத்துக் காட்டுவதன் நோக்கம் அறிந்து இன்புறுதற்குரியது. மணிமேகலை பௌத்த சமயத்தைச் சார்ந்தது வியப்பான செயல் அன்று, அவள் தந்தைவழிமுன்னோர்கள் பௌத்தமதத்தைச்சார்ந்தவர்களே எனக் காட்டுகிறார் தவிர, ஒன்பது தலை முறைக்கு முன்னர் இருந்தே பௌத்தம் தமிழகத்தில் காலூன்றி நின்றிருக்கிறது எனக்காட்டி,மறைமுகமாகப் பௌத்ததின் அழிவில்லாப்பெருமையையும், பழமையையும் சுட்டாமல் சுட்டு-

கிறார். இக்கிளைக்கதை காப்பிய ஓட்டத்திற்கு தேவையில்லாத கதை ஆதலால், இதை ஊன்று கதையாகவே கொள்ள முடிகிறது.

### 3.4.19 மணிமேகலை தெய்வம் கோவலன் பரம்பரைக்கு உதவிய வரலாறு

அறவண அடிகள் மணிமேலைக்குக் கூறுவதாக இக்கதை அமைந்துள்ளது. சாத்தனார், மணிமேகலா தெய்வம் கோவலன் குடும்பத்திற்குச் செய்யும் உதவிக்குக் காரணமாக இக்கதையைப் படைத்துக் காட்டியுள்ளார். பல அறங்கள் செய்த கோவலனின் முன்னோன் ஒருவன், கடலுள் செல்லும் போது மரக்கலம் மூழ்கிய நிலையில் ஏழுநாள் சாவாது இருக்கிறான். அதுகண்டு, இந்திரக் கம்பளம் நடுங்க, அவன் வாய்மையை உணர்ந்த இந்திரன் மணிமேகலா தெய்வத்தை அனுப்பி அம்முன்னோனைக் காப்பாற்றுகிறான். அன்றுமுதல், அக்குலத்தினருக்கே அத்தெய்வம் உதவி செய்து வருவதாக இக்கதைச் சுட்டுகிறது.

இக்கதையை இளங்கோவடிகள் சிலம்பிலும் எடுத்தாண்டுள்ளார். அங்கு மாடல மறையோன் வாயிலாக கிளைக் கதைக்குள் ஒரு நிகழ்ச்சியாக கூறப்பட்டுள்ளது.

இடையிருள் யாமத் தெறிதிரைப் பெருங்கடல்
உடைக்கலப்பட்ட எங்கோன் முன்னாள்
புண்ணிய தானம் புரிந்தோ னாகலின்
நண்ணுவழி இன்றி நாள்சில நீந்த
இந்திரன் ஏவலின் ஈங்கு வாழ்வேன்
வந்தேன் அஞ்சல் மணிமே கலையான்
உன்பெருந் தானத் துறுதி யொழியாது
துன்ப நீங்கித் துயர்க்கட லொழிகென
விஞ்சையிற் பெயர்த்து விழுமந் தீர்த்த
எங்குல தெய்வம்[17]

எனக் கோவலன் கூறி, மேகலைக்கு அத்தெய்வப் பெயர் வைத்ததாக மாடலன் கூறுகிறான். அச்செய்தியை, இங்குக் காரணம் நோக்கிச் சாத்தனார் கிளைக்கதையாக்கிப்படைத்-துள்ளார். காப்பியத் தொடக்கம் முதல் மணிமேகலைக்கு உதவிய மணிமேகலா தெய்வம் யார்? அவளுக்கு அத்தெய்வம் ஏன் சிறப்பாக உதவுகிறது என்பது போன்ற வாசகர் மனதில் எழும் எண்ணங்களுக்கு, விடை சொல்வதாய், இப்படி ஒரு தொடர்புள்ளது எனக் காட்டி, அந்நிகழ்ச்சியை ஒரு கிளைக் கதையாக்கி இருக்கிறார். காப்பியத்தின் பல திருப்பங்களுக்கு காரணமான மணிமேகலா தெய்வத்தின் வரலாறு பேசுவால் இக்கதை இயல்பாக காப்பியத்துடன் ஒன்றி நின்று, ஒட்டிய-கிளைக்கதையாகத் திகழ்கிறது.

### 3.5 இக்காப்பியக் கிளைக்கதைகளைப் பற்றிய பொதுச் செய்திகள்

மணிமேகலைக் காப்பியத்தில், கிளைக்கதைகளின் ஆட்சியைப் பற்றிய பொதுவான கருத்தைக் கூறுதல், அவசியமான ஒன்றாகும். சிலப்பதிகாரத்தை விட முன்றே கிளைக்கதை-கள் தான் இக்காப்பியத்தில் அதிகம் இடம்பெறுகிறதுஎன்றா-லும், இதில் கிளைக்கதைகள் கூறப்படும் மொத்த அடிகள் கூடுதலானது ஆகும். மணிமேகலைக் காப்பியத்தின் மொத்-தம் 4768 அடிகளில், ஆயிரத்துக்கு மேற்பட்ட அடிகள் கிளைக்கதையின் பாற்பட்டது. மீதி உள்ள மையக்கதையில் சமயம் பேசும் பகுதியும் அதிகமாகக் காணப்படுகிறது. ஆக மையக்கதையின் பாதிப்பங்கை கிளைக்கதைகளும், சமயப்-பகுதிகளும் பிடித்துக் கொள்வதால் மையக்கதை அழுத்தப்-பட்டுவிடுகிறது. காப்பியத்தில் மையக்கதை முதல் நிலையும் கிளைக்கதை படி நிலையையும் பெற்றுத் திகழ வேண்டும்.[18] ஆனால், ஆபுத்திரன் கதையைப் பொறுத்தவரை கிளைக் கதை படிநிலை பெறாமல் முதல்நிலை பெறுகிறது. இதனால் மையக்கதைக்கே உரிய சிறப்பு, மணிமேகலைக் காப்பியத்-

ணதைப் பொறுத்தவரை பேணப்படாமல் போய்விடுகிறது.

தவிர மைக்கதையினூடே சாத்தனார் அடிக்கடி கிளைக்கதைகளை மிகவிரிவாக எடுத்தாள்வதினால், மையக்கதை இடையீடுபட்டு, தொடர்ச்சி அறுபட்டு சிதைந்து நிற்கிறது. அதனாலேதான் சிலப்பதிகாரம் போன்ற காப்பியங்கள் தரும் இலக்கியச்சுவையை இக்காப்பியத்தினால் தர முடியவில்லை

மேலும், கிளைக்கதைக்கும் காப்பியக் கட்டுகோப்பிற்கும் இடையே உள்ளத் தொடர்பை இக்காப்பியத்தின்மூலம் நன்கறியலாம். கிளைக்கதையை அளவோடு, சுருக்கமாக எடுத்தாளாவிடில், காப்பிய அமைதி கெடும் என்பதற்கு இக்காப்பியம் தக்கதொரு சான்றாகும்.

சாத்தனார் படைத்துள்ள சில கிளைக்கதைகள் காப்பிய அழகுடையன என்பதையும் சுட்டாமல் இருக்க முடியாது 'ஆபுத்திரன் கதை' படைக்கப்பட்டுள்ள விதமும், கதையழகும் படிப்பவர் மனதை விட்டு நீங்காத் திறனுடையது. 'சக்கரவாளக் கோட்டம் எழுந்த கதை' பௌத்த அறத்தை மட்டுமல்ல உலக நீதியையேப் புகட்டுகிறது. ஆதிரை, விசாகை, மருதி போன்றோரின் கதைகள் கற்பின் துதிபாடி, பெண்மையின் மேன்மையைச் சுட்டி நிற்கின்றன இப்படி தனிப்பட்ட நோக்கில், சாத்தனாரின் புலமைக்குச் சான்றாக விளங்கும் இக்கிளைக்கதைகள், ஒருமை நோக்கில் காணும் போது, காப்பியக் கட்டுக்கோப்பை சிதைக்கின்றன என்னும்போது, தொகுப்புத் திறன் காப்பியப் புலவனுக்கு எத்தனை அவசியமானது என்பதை புரிந்துகொள்ள முடிகிறது.

## 3.6 மணிமேகலைக் காப்பியக் கிளைக் கதைகளின் சில தனி இயல்புகள்

கிளைக்கதைகளின் அமைப்பும், அவைப் படைக்கப்பட்டிருக்கும் விதமும் காப்பியத்திற்குக் காப்பியம் வேறுபட

அமையும். மணிமேகலைக் காப்பியத்திற்கே உரிய சிலத்-தனிப்பண்புகளை இங்குக் காண்போம்.

3.6.1 சாத்தனார் மணிமேகலையில் முற்பிறப்புக் கதை-களை அதிகம் எத்தாள்கிறார். 19 கிளைக்கதைகளில் 5 கிளைக்கதைகள் முற்பிறப்பைப் பற்றி பேசுகின்றன. பௌத்தம் பேச எழுந்த காப்பியம் ஆதலால், அம்மதம் போற்றும் 'வினைக் கோட்பாட்டை' வலியுறுத்த இக்கிளைக் கதைகள் எடுத்தாளப்பட்டுள்ளன.

3.6.2 மணிமேகலைக் காப்பியத்தில் 19 கிளைக்கதைகளில் 13 கிளைக்கதைகள் பௌத்தக் கோட்பாடுகளைப் பேசுகின்றன. இவற்றில் 5 கதைகள்[19] பௌத்தம் பேசுவதற்கென்றே எடுத்தாளப்பட்டிருக்கின்றன. சில கதைகள், வேறுகாரணத்திற்காக எடுத்தாளப்பட்டிருந்தாலும், அதில் வலிய பௌத்தக் கருத்தை சாத்தனார் திணித்துப் பேசியுள்ளார்.[20]

3.6.3 மணிமேகலையில் இடம்பெற்றிருக்கின்ற அனைத்-துக் கிளைக்கதைகளுமே பாத்திரக் கூற்றாகவே அமைந்துள்-ளன. இவற்றில் ஏழு கதைகள் [21] தெய்வப் பாத்திரக் கூற்-றாக அமைந்துள்ளன.

3.6.4 காப்பியத்தில், கிளைக்கதைகளை அதிக அளவு கேட்பது மணிமேகலையே. 19 கிளைக்கதைகளில் 15 கிளைக்-கதைகளைக் கேட்பது மேகலையே, சாத்தானார் இப்படிப் படைத்துக் காட்டியிருப்பதற்குக் காரணம் உண்டு. பலகதை-கள் பௌத்த கருத்தையும், நீதிகளையும் பேசுவதால், துறவு பூண்ட மேகலை இவற்றைக் கேட்டு படிப்படியாக உள்ளம் பண்பட்டு, முடிவில் ஒரு சிறந்த துறவியாக் சாத்த-ணரால் உருவாக்கப்பட்டிருக்கிறாள்.

3.6.5 மணிமேகலையில் கிளைக் கதைகளின் அமைப்பு ஓர் அளவுப் பட்டன அல்ல. மிகப் பெரிய கிளைக் கதையான

ஆபுத்திரன் கதை '260' வரிகளிலும், மிகச்சிறிய கிளைக் கதையான விசுவாமித்திரன் கதை 13 வரிகளிலும் பேசப்படு கின்றன. மற்றக் கிளைக்கதைகள் சில நீண்டும், சில குறிகி யும் சில நடுத்தரமாகவும் அமைந்துள்ளன.

3.6.6 'ஆபுத்திரன் கதை' கிளைக்கதை அமைப்பிலிருந்து சற்று மாறுபட்டு அமைந்திருக்கும் கதையாகும். இதற்கு' காப்பியப் புலவர் ஆபுத்திரன் வரலாற்றின் மீது கொண்டி ருந்த பற்றே காரணமாகிறது.

3.6.7 சுதமதி என்ற துணைப்பாத்திரத்தின் கதையை, இரு வேறு நோக்கில், இருவேறு இடத்தில், இருவேறு கிளைக் கதையாகச் சாத்தனார் படைத்துள்ளார்.

3.6.8 விசாகை, மருதி என்ற இரு பெண்களின் கதைகளை ஒரே நோக்கத்திற்காக, ஒரே இடத்தில், இரு வேறு கிளைக்-கதைகளாகப் படைத்துள்ளார் சாத்தனார்.

3.6.9 கண்ணகி-கோவலன் முற்பிறப்புக்கதை, சிலப்பதிகா ரத்தில் கூறியிருப்பது போன்று, இக் காப்பியத்திலும் கிளைக் கதையாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால், சாத்தனார், இதில் கண்ணகிப் பாத்திரத்தை பௌத்தம் பேசுவளாகப் படைத் துக் காட்டியுள்ளார்.

3 6.10சிலம்பில் சில வரிகளில் சொல்லப்பட்ட கோவலனின் பரம்பரையைச் சேர்ந்த முன்னோன் ஒருவன் கதையைச் சாத்தனார் காப்பிய அமைதி கருதி கிளைக்கதையாகப் படைத்துள்ளார்.

3.6.11புத்த ஜாதக கதைகளுள் ஒன்றான, புத்தனிடம் தன் மகனுக்கு உயிர்ப்பிச்சை வேண்டி அழும்பெண்ணின் கதை யை, சில மாறுபாடுகளுடன் சாத்தனார் கிளைக் கதையாக எடுத்தாண்டுள்ளார்.[22]

12. சாத்தனார் கிளைக்கதைக்குக் கொடுத்த முக்கியத்துவத்தை, அவர், அக்கிளைக்கதை பாத்திரங்களின் பெயர்களினால் காதைப் பெயர்கள் அமைத்துள்ளமை கொண்டு அறியலாம். மணிமேகலையில் இப்படி அமைந்த காதைகள் மொத்தம் ஆறு ஆகும். ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை, ஆதிரை பிச்சையிட்ட காதை, கந்திற்பாவை வருவதுரைத்த காதை, ஆபுத்திரனாடு அடைந்த காதை, ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்த காதை என்ற ஐந்தும் கிளைப் பாத்திரப் பெயரைக் கொண்டு திகழ்கின்றன. சக்கரவாளக் கோட்டம் உரைத்த காதை கிளைக்கதைப் பொருளையே தலைப்பாகக் கொண்டு திகழ்கிறது.

13. சாத்தனார், மூன்று கிளைக்கதைகளை[23]ப் பகுதி பகுதியாகப் பிரித்துக் கூறிக் கதையின் ஒருமைப்பாட்டைச் சிதைத்துள்ளார்.

14. சாத்தனார், 'காப்பியக் கிளைக்கதைகளைக் கூறி, அதிலிருந்து நீதிக் கருத்துக்களை உய்த்துணர வைத்தல் வேண்டும்' என்ற கொள்கையில் நம்பிக்கையில்லாதவர். எனவே, கிளைக்கதைகளில், ஆங்காங்கே கதைப்போக்கை நிறுத்திவிட்டு அறம் பேசுகிறார். இப்போக்கை மற்றக் காப்பியங்களில் காண்பதரிது.

15. மணிமேகலைக் காப்பியத்தில் ஆபுத்திரன் கதை ஒன்றை மட்டுமே ஒன்றிய காதையாகக் கொள்ள முடிகிறது. தவிர, இக்காப்பியத்தில் உள்ள மற்றக் கிளைக்கதைகளை ஒட்டிய கதையாகவும், ஊன்று கதையாகவுமே கொள்ள முடிகிறது. ஒட்டிய கதை ஒன்பதாகவும், ஊன்று கதை ஒன்பதாகவும் சம அளவில் அமைந்துள்ளன.

16. முடிவாக, சாத்தனாரின் 'இலக்கியக் கொள்கையை அவர் படைத்துள்ள கிளைக்கதைகளின் மூலமே உய்த்துணரலாம். காப்பிய அமைதி கெடுவதையும் பொருட்படுத்தா-

மல், அறம் கூறுவதையே பிரதானமாகக் கொண்டிருப்ப-தால், இவர்,

'கலை கலைக் காகவல்ல
கலை வாழ்க்கைக் காகவே'

என்ற இலக்கியக் கொள்கையை உடையவர் என்பதை இனம் கண்டுகொள்ள முடிகிறது.

பட்டியல் 1 (பக். 85-90) கிளைக்கதைகளை வகைப்-படுத்திக் காட்டுகிறது. பட்டியல் -2(பக். 90-95) கிளைக்-கதைகளின் நோக்கங்களை வரிசைப்படுத்துகிறது. அதன் முடி-வினை பக். 96-ல் காணலாம்.

## அடிக்குறிப்புகள்

1. மணிமேகலை இல்லாவிடில் மணிமேகலைக் காப்பியம் இல்லை. முழுக்க முழுக்க அவள் ஒருத்தியே எல்லாக் கோணத்-திலும் உயர்த்தப்படுகிறாள். ஆதலால் அவள் ஒருத்தியே தலைமைப் பாத்திரமாகவும் சிறக்கிறாள். உதயகுமாரன், மாதவி, சுதமதி, மணிமேகலா தெய்வம் போன்றோர் காப்-பியக் கதை நிகழ்ச்சி தொடர்ந்து நடைபெறத் துணை நிற்-கின்றவர்கள் ஆதலால் அவர்கள் துணை மாந்தர்களாகக் கொள்ளப்படுகிறார்கள். சித்ராபதி, அரசமாதேவி போன்-றோர் காப்பிய மையக் கதையில் பெரும் விளைவை ஏற்-படுத்தாவிட்டாலும், அக்கதை நிகழ்ச்சிகளுக்கு ஊன்று கோலாக நின்று உதவுவதால் அவர்கள் சிறு பாத்திரங்களா-கக் கொள்ளப்படுகிறார்கள்.

2. மணிமேகலை, 5 : 23-27

3. மேலது., 5 : 75-77

4. மேலது., 6 : 29-33

5. மேலது., 6 : 150-152

6. மங்களவதி கேபிரியல், **மணிமேகலையில் காப்பி-யக் கூறுகள்**, பக்-57

7. மணிமேகலை, 10 : 18-19
8. மேலது., 5 : 89-91
9. மேலது., 11 : 93-97
10. மேலது., 13 : 1-2
11. மேலது., 16 : 86-90
12. உடம்பீண் டொழிய உயிர்பல காவதம்
கடந்துசேண் சேறல் கனவினுங் காண்குவை
[மணி: 16 : 102-103]

இதன் பொருள்: ''உடம்பு கிடக்க உயிரானது தான் மட்டும் அவ்விடத்தினின்றும் தனியே பல காவத தூரத்திற்கப்பாலும் சென்று பல்வேறு செயல்களைச் செய்து இன்ப துன்ப நிகழ்ச்சிகளை எய்தும் விந்தையைக் கனவிடத்தே பலமுறையும் அறிவாய்''.

திபெத்திய ஞானியின் கூற்று

உறங்குப்போது வான யாத்திரை செய்யும் ஆத்மா, விழிப்பு வரும் நேரத்தில் மெதுவாக உடம்பில் வந்து சேர்ந்து கொள்கிறது. சில சமயங்களில் திடீரென்று சப்தம் கேட்டுத் தூக்கம் கலையும்போது. அந்த வெள்ளி இழை ஆத்மாவை அவசரமாக உடம்புக்குள் இழுத்துக் கொள்கிறது''— பக் : 70

''நாம் உறங்கும்போது வான யாத்திரை செய்யும் ஆத்மா பல்வேறு அனுபவங்களைப் பெறுகிறது. நாம் விழித்து எழும்போது அவை நமக்குக் கனவு கண்ட அனுபவங்களாகத் தெரிகின்றன. தூக்கத்தில் நினைவற்ற நிலையில் இருப்பதால் அவற்றை உண்மை என்று நம்மால் ஒப்புக் கொள்ள முடிவதில்லை''-பக்: 70

—டியூஸ்டே லாப்சாங் ராம்பா, காரணம் காணா அதிசயங்கள், மஞ்சரி, இதழ் 1, 1979, மலர் 32- பக்:58-74

13. மணிமேகலை, 17: 79-81

14. மேலது., 21: 39-43

15. மேலது., 22: 135-139

16. மேலது., 26: 7- 9

17. சிலப்பதிகாரம்., 15:28-37

18. சுப்பிரமணியன்.ச.வே., சிலம்பும் சிந்தாமணியும், பக்: 227

19. சுதமதி கதை பிற்பகுதி, சக்கரவாளக் கோட்டம் எழுந்த கதை, விசுவாமித்திரன் கதை, சாதுவன் கதை, கண்ணகி கோவலன் முற்பிறப்புக்கதை - என்ற ஐந்து கதைகள்.

20. மருதிகதை, விசாகன் தருமதத்தன் கதை, ஆபுத்திரன் கதை, மறு பிறப்பு பற்றிய 5 கதைகள், முன்னோன் கோவலன்கதை என்ற ஒன்பது கதைகள்.

21. சக்கரவாளக் கோட்டம் எழுந்த கதை, மாதவி சுதமதி முற்பிறப்புக் கதை, மணிமேலை முற்பிறப்புக் கதை, விசுவாமித்திரன் கதை, உதயகுமாரன் முற்பிறப்புக் கதை, சுந்திற்பாவை வரலாறு, பீலிவளை-நெடுமுடிக்கிள்ளி வரலாறு [பகுதி II] என்ற ஏழு கதைகள்.

22. இப்பகுதி, சக்கரவாளக் கோட்டம் எழுந்த கதையில் வரும் கோதமை-சாருங்கலன் பற்றிய கதையைக் குறிக்கும்.

23. சுதமதி மாதவி முற்பிறப்புக் கதை, ஆபுத்திரன் கதை, பீலிவளை-நெடு முடிககிள்ளி வரலாறு ஆகிய மூன்று கதைகள்.

பட்டியல்-1

| எண் | கிளைக்கதைகள் | நோக்கம் | இடம்பெறும் காதை | கதை கூறு-பவர் | கேட்போர் | கதைவகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1. | சுதமதி கதை -முற்பகுதி | மேலே தனித்து மலர் கொய்யச் செல்வதை தடுக்க | மலர்வனம் புக்க காதை | சுதமதி | மேகலை | ஒட்டிய கதை |
| 2. | சுதமதி கதை -பிற்பகுதி | பௌத்த மதத்தை உயர்த்திப் பேச | மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதை | சுதமதி | உதய குமாரன் | ஒட்டிய கதை |
| 3. | சக்கரவாளக் கோட்டம் எழுந்த கதை | 1. பௌத்தகொள்கை பேச 2. பிறமதத்தைச் சாடல் | சக்கரவாள கோட்டம் உரைத்த காதை | மணிமேகலா தெய்வம் | மணிமேகலை சுதமதி | ஊன்று கதை |
| 4. | மணிமேகலை முற்பிறப்புக் கதை-1 | 1. வினைப்பயன் பற்றிப் பேச 2. மேகலை தன்பிறப்-புணர்ந்து செயல்பட | பீடிகை கண்டு பிறப் புணர்ந்த காதை | மணிமேகலை | பிரமதருமன் (அகக்கண் முன் நிறுத்திச் சொல்லுதல் | ஒட்டிய கதை |

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|
| 5. | மணிமேகலை முற்பிறப்புக் கதை-II | 1. வினைப் பயன் பற்றிப் பேச<br>2. உதயகுமாரன் யார் என்று மேகலை அறிதல் வேண்டி | மந்திரங் கொடுத்த காதை | மணிமே-கலா தெய்வம் | மணிமே-கலை | ஓட்டிய கதை |
| 6. | மாதவி சுதமதி முற்பிறப்புக் கதை | வினைப்பயன் பற்றிப் பேச | 1. மந்திரங் கொடுத்த காதை<br>2. அறவணர்த் தொழுத காதை | மணிமே-கலா தெய்வம்<br>அறவண அடிகள் | மணிமே-கலை<br>மணிமே-கலை மாதவி, சுதமதி | ஓட்டிய கதை |
| 7. | விசுவாமித்தி-ரன் கதை | பசிப்பிணியின் கொடுமையை விளக்க | பாத்திரம் பெற்ற காதை | தீவதிலகை | மணிமே-கலை | ஊன்று கதை |
| 8. | ஆபுத்திரன் வரலாறு | 1. பௌத்தம் பேச | 1. ஆபுத்திரன் திறம் அறிந்த காதை | அறவண அடிகள் | மணிமே-கலை | ஒன்றிய கதை |

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|
| | | 2. பிறமதத்தைச்சாட | 2. பாத்திர மரபுகூறிய காதை | | மாதவி, சுதமதி | |
| | | 3. அமுத சுரபியின் மேன்மையை மேகலை உணரவேண்டிக்கூறுதல் | 3. பாத்திரம் கொண்டு பிச்சை புக்க காதை | | | |
| 9. | ஆதிரை வரலாறு | கற்பின் மேம்பாட்டை விளக்க | ஆதிரை பிச்சையிட்ட காதை | காயசண்டிகை | மணிமேகலை | ஒட்டிய கதை |
| 10. | சாதுவன்கதை | பௌத்த கொள்கைகள் பேச | ஆதிரை பிச்சையிட்ட காதை | காயசண்டிகை | மணிமேகலை | ஊன்று கதை |
| 11. | காயசண்டிகை வரலாறு | பசிப்பிணியின் கொடுமையைக் காட்ட | உலகறவிப் புக்க காதை | காயசண்டிகை | மணிமேகலை | ஒட்டிய கதை |
| 12. | உதயகுமாரன் முற்பிறப்புக் கதை | வினைப் பயன் பேச | கந்திற்பாவை வருவதுரைத்த காதை | கந்திற்பாவை | மணிமேகலை | ஒட்டிய கதை |

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|
| 13. | கந்திற்பாவை வரலாறு | கந்திற்பாவை கூறுவதை மேகலை உண்மை என்று நம்புவதற்காக | கந்திற்பாவை வருவது துரைத்த காதை | கந்திற்பாவை | மணிமேகலை | ஊன்று கதை |
| 14. | மருதி கதை | மன்னன் மனத்தைப் பக்குவப் படுந்த | சிறை செய் காதை | சக்கரவாளக்கோட்ட முனிவர் கள் | சோழ மன்னன் | ஊன்று கதை |
| 15. | விசாகை-தருமதத்தன் கதை | 1. மன்னன் மனதைப் பக்குவப் படுத்த<br>2 பௌத்த கொள்கை பேச | சிறை செய் காதை | சக்கரவாளக் கோட்ட முனிவர்கள் | சோழ மன்னன் | ஊன்று கதை |
| 16. | பீலிவளை-நெடுமுடிக்கிள்ளி வரலாறு | காவிரிப்பூம் பட்டின அழிவிற்குக் காரணமாகக் கூறல் | 1. ஆபுத்திரனாடு அடைந்த காதை<br>2. ஆபுத்திரனோடு மணிபல்லவம் | சித்ராபதி<br>தீவதிலகை | அரச மாதேவி<br>மணிமேகலை | ஊன்று கதை |

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|
| | | | அடைந்தகாதை<br>3. தவத்திறம் பூண்டு தருமங் கேட்ட காதை | அறவண அடிகள் | மணிமே-கலை | |
| 17. | கண்ணகி கோவலன்முற் பிறப்புக் கதை | பௌத்த கொள்கை பேசுதல் | வஞ்சி மாநகர் புக்க காதை | கண்ணகி | மணிமே-கலை | ஊன்று கதை |
| 18. | முன்னோன் கோவலன் கதை | 1. மாசாத்துவான்கச்சி வந்த காரணத்தைகூற<br>2. கோவலன்பரம்பரை பௌத்த மதத்தைப் போற்றியவர்கள்என்று காட்ட | கச்சி மாநகர் புக்க காதை | மாசாத்து-வான் | மணிமே-கலை | ஊன்று கதை |
| 19. | மணிமேகலா தெய்வத்திற்-கும்கோவலன் | மணிமேகலா தெய்வம் மேகலைக்குஉதவியதற்-குக்காரணம்கற்பிக்கும் | தவத்திறம் பூண்டு தருமங் கேட்ட காதை | அறவண அடிகள் | மணிமே-கலை | ஒட்டிய கதை |

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|
| | பரம்பரைக்-கும் தொடர்பு ஏற்பட்ட வர-லாறு | பொருட்டு | | | | |

பட்டியல் 2

**பௌத்தக் கொள்கை பேசும் கதைகளும் பிற மத எதிர்ப்புப் பேசும் கதைகளும்***

| எண் | கிளைக்கதையின் பெயர் | பேசும் பௌத்தக் கருத்துக்களும் நம்பிக்கைகளும் | பிற மத எதிர்ப்புப் பற்றிய கருத்துக்கள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1. | சுதமதி கதை [பிற்பகுதி] | 1. எச்சமயத்தவராக இருந்தாலும் ஆற்றாத நிலையில் அவர்களுக்கு உதவிட வேண்டும்.<br>2. அருள்மொழி பேசுவது மொழி-யால் செய்யும் நல்வினையாகும்<br>3. புத்தரே தங்கள் கடவுள் எனப் போற்றுதல். | 1. சமணர்கள் தங்கள் மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் துன்பம் வந்த காலத்தில் அவர்களை வெறுத்து ஒதுக்-கும் தன்மையர்களாக விளங்கு வார்கள் |

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|
| 2. | சக்கரவாளக் கோட்டம் எழுந்த கதை | 1. யாக்கை நிலையாமை<br>2. வினை விளை காலத்தில், அதன் பயன் தவறாது உறுத்து வந்து ஊட்டும்.<br>3. மறுபிறப்பு நம்பிக்கை | 1. வேள்வியில் உயிர்ப்பலி இடும் அந்தண மதத்தைச் சாடல்<br>2. வினைவிளை காலத்தில் இறப்பவனைப் பேய் அணங்கு அடித்து இறந்தான் எனக்கூறும் பிற மதத்தினரைச் சாடல்<br>3. தெய்வம் வரம் தரும் என்ற அந்தணருடைய நம்பிக்கையைச் சாடல் |
| 3. | மணிமேகலை முற்பிறப்புக் கதை-I | 1. வினைப் பயனுக்கு ஏற்ப மறுபிறப்பு அமையும்.<br>2. தரும பீடிகை கண்டு வலம் வந்தால் முற்பிறப்பு உணரலாம்.<br>3. புத்தனை வழிபட்டால் பிறவிப்பிணி நீங்கும் என்ற நம்பிக்கை. | |

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|
| | | 4. புத்தன் அருள் பெற்றவர்கள் மறுபிறவியை அறியும் பேற்றைப்பெறுவர் | |
| 4. | மணிமேகலை முற்பிறப்புக் கதை-I | 1. பௌத்த துறவோர்க்கு உணவிட்டு உபசரித்தல் நல்வினை பயக்கும். 2. செய்த வினைக்கேற்ப மறுபிறப்பு அமையும். | |
| 5. | சுதமதி மாதவி முற்பிறப்புக் கதை | 1. புத்தன் எழுந்தருளிய பாதபங்கய மலையை வலம்வந்தால் நற்பயன் பெறுவர். 2. நல்வினை செய்தவர்கள் தான் முற்பிறப்பினை அறியும் வாய்ப்பைப் பெறுவர் | |
| 6. | விசுவாமித்திரன்கதை | 1. பசிப்பிணியை நீக்குதலே பௌத்தர்களின் தலையான பேரறம் | |
| 7. | ஆபுத்திரன் | 1. நன்மையின் பொருட்டும் பிற | 1. வேள்வியில் உயிர்க்கொலை புரி |

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|
| | கதை | உயிரைக் கொல்லுதல் கூடாது.<br>2. தன்நிலை பேணாது பசிப்பிணியை நீக்குதல் வேண்டும்<br>3. புத்தர் மீண்டும் மீண்டும் பிறந்து அருளுரைப்பார்.<br>4. ஒருவர் எந்த நினைவுடன் இறக்கின்றாரோ அந்த நினைவின் பலனை மறுபிறவியில் பெறுவர். | யும் வேதியரைச் சாடல்<br>2. வேதகுல முதல்வர்களின் பிறப்பினைச் சாடல் |
| 8. | சாதுவன் கதை | 1. மறுபிறவி உண்டு என்ற நம்பிக்கை<br>2. உயிர் கொல்லாமை, ஊன் உண்ணாமை, கள்ளுண்ணாமை, போகம் அனுபவிக்காமை-இவற்றைப் பேணுதல் வேண்டும்.<br>3. புலனடக்கம் அவசியம் பௌத்த துறவிகள் பேணுதல் வேண்டும்.<br>4. எவ்வுயிர்க்கும் செந்தண்மைப் | |

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|
| | | பூண்டு ஒழுகுதல் வேண்டும். | |
| 9. | காயசண்டிகை வரலாறு | 1. பசிப்பிணி நீக்குதலே தலையாய அறம்.<br>2. வினைப்பயன் மறுபிறவியிலும் உறுத்து வந்து ஊட்டும். | — |
| 10. | உதயகுமாரன் முற்பிறப்புக் கதை | 1. உலகத்தில் தீவினை அதிகரிக்கும் போது புத்தன் பிறந்து அறத்தை நிலை நிறுத்துவான் என்ற நம்பிக்கை.<br>2. வினைப்பயன் மறுபிறவியிலும் உறுத்து வந்து ஊட்டும்.<br>3. நன்மையின் பொருட்டும் தீவினை கூடாது. | — |
| 11. | விசாகை-தருமதத்தன் கதை | 1. இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை. | — |

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|
| | | 2. மறுபிறவி உண்டு என்ற நம்பிக்கை<br>3. 'புத்தேள் உலகம் புதல்வரும் தாரார். அறமே நன்மை தரும் என்ற கொள்கை உடையவர். | |
| 12. | கண்ணகி-கோவலன் முற்பிறப்புக் கதை | 1. வினைப்பயன் மறுபிறவியிலும் உறுத்து வந்து ஊட்டும்.<br>2. நன்மை செய்து அதற்குரிய பலனை அனுபவித்தாலும் செய்த தீவினையின் பலனையும் அனுபவிக்கத்தான் வேண்டும் | |
| 13. | முன்னோன் கோவலன் கதை | 1. பௌத்த அடியவர்களை உபசரிப்பது நற்பேற்றைத் தரும்.<br>2. புத்தன் உணர்த்திய அறத்தைக் கேட்டால் மெய்யுணர்வு பெறுவர்.<br>3. வினைப்பயன் மறுபிறவியிலும் உறுத்து வந்து ஊட்டும். | |

*காப்பியப் புலவரான சாத்தனார் நேரடியாக எடுத்துக் காட்டும் அடிகளில் இருந்தும், அவரது கதைகள் தரும் திரண்ட பொருள் தரும் கருத்துக்கள் மூலமும் பௌத்தக் கொள்கைகளும் பிறமத எதிர்ப்புப் பற்றிய கருத்துக்களும் அறியப்பட்டு இங்கு அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன.

1. கிளைக் கதைகள் மூலம் சாத்தனார் திரும்பத் திரும்ப அறிவுறுத்தும் பௌத்தக் கொள்கைகள் மூன்று. அவை,

1. செய்த வினையானது, பயனை ஊட்டாது கழியாது
2. மறுபிறவி பற்றிய நம்பிக்கை
3. பசிப்பிணி நீக்குதலே தலையாய அறம்

2. சாத்தனார், பிறமதங்களைக் காட்டிலும் அந்தண மதத்தையே அதிகம் சாடுகிறார்.

# 4

## இரட்டைக் காப்பியக் கிளைக்கதைகளின் ஒப்பீடு

4.0 தமிழின் முதல் இரு காப்பியங்களான சிலம்பும், மேகலையும் பின் எழுந்த காப்பியங்களைக் காட்டிலும் அளவில் மிகச்சிறியவை. ஆனால், அவ்விரு காப்பியங்களுமே, பின் எழுந்த காப்பியங்களைக் காட்டிலும் (சிந்தாமணி, பெருங்கதை) கிளைக்கதைகளை அதிக அளவு எடுத்தாண்டுள்ளன. சிலம்பும் மேகலையும் இரட்டைக் காப்பியங்கள், ஆதலால், கிளைக் கதைகளை எடுத்தாள்வதில் சில ஒற்றுமைகளை கொண்டிருந்தாலும், புலவர்களின் ஆற்றலுக்கேற்ப பலவேற்றுமைகளையும் தம்முள் கொண்டு திகழ்கின்றன.

4 1 இளங்கோவடிகள், சிலப்பதிகாரத்தில் 16 கிளைக்கதைகளையும், சாத்தனார் மேகலையில் 19 கிளைக்கதைகளையும் படைத்துள்ளனர். இவ்விரு காப்பியங்களிலுமே கிளைக்கதைகள் ஒரு நீர்மைப்பட்டதாக அமையவில்லை.

4.2 சிலப்பதிகாரத்தில், மணிமேகலையோடு ஒப்பிடும் போது, கிளைக்கதைப் பகுதி குறைவு எனலாம். மணிமேகலையில், சிலப்பதிகாரத்தோடு ஒப்பிடும் போது, மையக்கதைப் பகுதி குறைவு எனலாம்.

4.3 மணிமேகலை துறவு பேசும் காப்பியம். காப்பிய ஆரம்பத்தில் துறவுபூண்ட மேகலையைப்படிப்படியாக மனத்தளவில் செம்மைப்படுத்திக்கொண்டே வந்த சாத்தனார்,

காப்பிய முடிவில், சிறந்த துறவியாக உருவாக்குகிறார். இதற்கு, கிளைக்கதைகள்பெரும்துணை நிற்கின்றன. அதாவது,சாத்தனார் பெரும்பாலான கிளைக்கதைகளை மணிமேகலை கேட்பதாகவே படைத்துள்ளார்.அவை யாவும், நீதிக் கருத்துக்களையும்,பௌத்தக் கருத்துக்களையும் பேசுவதால் அவற்றைக் கேட்டு மேகலை படிப்படியாக மனத்தளவில் செம்மைப்பட்டு முடிவில், பௌத்தமதத்தின் சிறந்த துறவியாக உருவாகிறாள். இந்தச்சூழலும், அமைப்பும் சிலப்பதிகாரத்தில் இல்லை. காரணம், மணிமேகலையைப்போல் கண்ணகியை மனச்செம்மைப் படுத்தவேண்டிய சூழல் இளங்கோ அடிகளுக்கு இல்லை என்பதே.

4.4. சிலப்பதிகாரம், மணிமேகலை இரண்டுமே சமயத்தைப்பற்றிப் பேசும் காப்பியங்களே. சிலப்பதிகாரம் சமணம், சைவம், வைணவம் என்ற முச் சமயத்தைப் பேசுகிறது. ஆனால், மணிமேகலை பௌத்த சமயம் ஒன்றுக்கே சிறப்புக் கொடுத்துப் பேசுகிறது. அதனால், பெரும்பாலான கிளைக்கதைகள் பௌத்தக் கருத்துக்களையே பேசுகின்றன. சில கிளைக்கதைகள் பௌத்தம் பேசுவதற்கென்றே வலிந்து படைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு, சமயக் கருத்துக்களைப் பேசுவதற்காகவே கிளைக் கதைகள் அமைக்கும் போக்கும், கிளைக்கதைகளில் வலிந்து சமயம்பேசும் போக்கும் சிலப்பதிகாரத்தில் இல்லை.

4.5 சிலப்பதிகாரம்,மணிமேகலை இரண்டுமே முற்பிறப்புக் கதைகளை எடுத்தாள்கின்றன. சிலப்பதிகாரத்தில் ஒரே ஒரு கிளைக்கதைதான் (கோவலன் கண்ணகி முற்பிறப்புககதை) முற்பிறப்பைப் பற்றிப் பேசுகிறது. அக் கிளைக்கதையும் காப்பியஓட்டத் தெளிவிற்காகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. சாத்தனார், மணிமேகலையில் 5 முற்பிறப்புக் கதைகளை எடுத்தாண்டுள்ளார்.[2] இவர், இக்கதைகளைக் காப்பிய ஓட்டத் தெளிவிற்காகப் பயன்படுத்தியுள்ளார் என்று கூறுவதைக்

காட்டிலும், இக்கதைகள் மூலம் பௌத்தர்களின் மறுபிறப்புக் கொள்கையை எடுத்துக் காட்டியுள்ளார் என்பதே பொருந்தும்.

4.6 சிலப்பதிகாரத்தில் மொத்தக் கிளைக்கதைகளில் ஒரே ஒரு கிளைக்கதை மட்டும் காப்பியப்புலவரால் சொல்லப்பட்டுள்ளது. மணிமேகலையில் அனைத்துக் கிளைக்கதைகளுமே பாத்திரக் கூற்றாகவே அமைந்துள்ளன.

4.7 மணிமேகலையில் 'ஆபுத்திரன் கதை', காப்பியத்துள் ஒரு சிறு காப்பியம் போல் அழகுறப் பின்னப்பட்டுள்ளது. இககதை மட்டும் மூன்று காதைகளில் பேசப்பட்டுள்ளது. பௌத்த மதக்கொள்கைகளைப் பேசும் கதை என்றாலும், மனிதப்பண்புகளும், நடப்பியலும் இணைந்து பின்னப்பட்ட அழகிய கதை. இப்படி, காப்பியத்தில் ஒரு சிறு காப்பியமாகப் பின்னப்பட்ட கிளைக்கதையைச் சிலம்பில் காண முடியாது. அதாவது, இளங்கோ அடிகள் மையக்கதைப் படைப்பிற்கே முதலிடம் கொடுத்து, கிளைக்கதைப் படைப்பிற்குத் துணையிடம் நல்கியுள்ளார். ஆபுத்திரன் கதையைப் பொறுத்தவரை, மையக் கதைக்குக்கொடுத்த முக்கியத்துவத்தைக் கிளைக்கதைக்கும் கொடுத்துப் படைத்துள்ளார் சாத்தனார்.

4.8 சிலப்பதிகாரத்தில், கிளைக்கதைகள் மையக்கதையை அழுத்திவிடும் அளவிற்குச் செல்வாக்குப் பெறவில்லை. ஆனால், மணிமேகலையைப் பொறுத்தவரை மையக்கதையை அழுத்திவிடும் அளவிற்குக் கிளைக்கதைகள் செல்வாக்குப் பெற்றுள்ளன. மணிமேகலையின் பிற்பகுதியில் இப்படிக் கிளைக்கதையின் செல்வாக்கு அதிகரித்திருப்பதால், மையக்கதைப் பகுதியைச் சாத்தனாரால் சுவைபட அமைக்க முடியவில்லை என்று கூறலாம். இதிலிருந்து, ஒரு காப்பியம் சிறக்க வேண்டுமானால், மையக் கதை முத-

னிலை பெற்றும், கிளைக்கதை துணைநிலை பெற்றும் அமைய வேண்டும் என்பது தெளிவாகிறது.

4.9 மணிமேகலையில், கிளைக்கதை மாந்தர்களின் பெயரிலேயே, சில காதைத்தலைப்புக்கள் அமைந்துள்ளன.[4] இது, சாத்தனார் கிளைக்கதைக்குக் கொடுத்த முக்கியத்துவத்தை மேலும் தெளிவாக்குகிறது. ஆனால், சிலம்பில் இவ்வாறு கிளைக்கதை மாந்தர் பெயரில் காதைத் தலைப்புக்கள் அமைக்கப்படவில்லை.

4.10 கோவலன் முன்னோன் வரலாறு சிலம்பு, மேகலை இரண்டிலுமே கிளைக்கதையாக அமைந்துள்ளது. மேகலையில், இவ்வரலாறு தனி ஒரு கிளைக்கதையாக விரிவாகப் பேசப்பட்டுள்ளது. ஆனால், சிலப்பதிகாரத்தில் இவ்வரலாறு தனிக்கிளைக்கதையாக அல்லாமல், கிளைக்கதையின் ஒரு பகுதியாக மட்டும் சுருக்கமாகப் பேசப்பட்டுள்ளது.[5]

4.11 கிளைக்கதைகளை, ஒரே இடத்தில் அடுக்கிக் கூறும்முறை, இரண்டு காப்பியங்களிலுமே காணப்படுகிறது. ஒரே, கருப்பொருளை ஒட்டிய வேறுபட்ட கதைகளை, இப்படி ஒரே இடத்தில் தொகுத்துப் பேசுதல் காப்பியப் பொருண்மைக்கு நலம் பயக்கும் என்பதால், இரண்டு புலவரிடமுமே இத்தன்மையைக் காண முடிகிறது.

4.12 மணிமேகலையில், சில கிளைக்கதைகள் ஒன்றுக்கு மேற்பட்ட காதைகளில் பேசப்படுகின்றன. இத்தகைய அமைப்பு முறை சிலப்பதிகாரத்தில் இல்லை. அதாவது, சிலப்பதிகாரத்தில் கிளைக்கதைகள் ஒரே இடத்திலேயே சொல்லப்பட்டுவிடுகின்றன. மேகலையின் சில கிளைக்கதைகள்[6] பகுதி பகுதியாகப் பிரிக்கப்பட்டு, வெவ்வேறு இடத்தில் வெவ்வேறு கூற்றில் சொல்லப்பட்டிருக்கின்றன.

4.13 பௌத்த மதக் கொள்கைகளைப் பேச, கிளைக்கதைகளைச் சாத்தனார் பயன்படுத்திக் கொண்டது போல்,

பிறமத எதிர்ப்பைக் காட்டவும் கிளைக்கதைகளைப் பயன்படுத்திக் கொண்டுள்ளார்.[7] இளங்கோவடிகளிடம் இப்போக்கு சிறிதும் இல்லை.

4.14 பௌத்தம் பேச எழுந்த காப்பியமான மணிமேகலையில் புத்த ஜாதகக் கதைகளில் ஒன்று கிளைக்கதையாக எடுத்தாளப்பட்டுள்ளது.[8] சிலப்பதிகாரத்தில் பஞ்சதந்திரக் கதைகளில் ஒன்று கிளைக்கதையின் பகுதியாக எடுத்தாளப் பட்டுள்ளது.[9] ஆக, இவ்விரு காப்பிய ஆசிரியர்களும், தங்கள் தேவைக்கேற்ப, பிற நூற்கதைகளையும் தங்கள் காப்பியத்தில் எடுத்தாண்டுள்ளனர் என்பதும் தெரியவருகிறது.

4.15 சிலப்பதிகாரக் கிளைக்கதைகள் அனைத்தும் முழுக்க முழுக்கக் கதைப்பகுதி உடையதாகவே அமைந்திருக்கும், மிகச் சில கிளைக்கதைகளில், நீதிக் கருத்துக்கள் சில வரிகளில் மட்டும் சொல்லப்பட்டிருக்கும். இளங்கோவடிகள் கதையை மட்டும் பேசி நீதியை உய்த்துணர வைக்கிறார். ஆனால், மணிமேகலையில் சாத்தனார், தான் கூறவந்த பௌத்தக்கருத்துக்களையும் நீதிக்கருத்துக்களையும் கிளைக் கதைகளில் வெளிப்படையாகவே பேசுகிறார். இதனால், சில கிளைக்கதைகளில் கதைப்பகுதியைக்காட்டிலும், அறிவுறுத்தும் பகுதி அதிகமாகக் காணப்படுகிறது. குறிப்பாக, 'சாதுவன் கதையில் கதைப் பகுதி மிகக் குறைவு. பௌத்த மதக்கொள்கையை அறிவுறுத்தும் பகுதி மிக நீண்டு காணப்படுகிறது.

4.16 சிலப்பதிகாரத்தில் நாளங்காடிப் பூதக் கதையைக் காப்பியப் பாத்திரமல்லாத விஞ்சையன் கூறுவதாக, இளங்கோவடிகள் அமைத்துள்ளார். தவிர இக்கதையைக் காப்பியப் பாத்திரமல்லாத விஞ்சையன் காதலி கேட்பது போலவும் அமைத்துள்ளார். இப்படி, மணிமேகலையில் கதை கூறுபவரையும், கேட்பவரையும் காப்பியப் பாத்திர-

மல்லாதவராகச் சாத்தனார் அமைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

4.17 சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற இக்-காப்பியங்களில், பிற்காலக் காப்பியங்களைவிட மிகக் குறைந்த அளவிலேயே புராணக் கதைகள் இடம் பெற்றுள்ளன. சிலம்பு, மேகலை இரண்டிலுமே ஒரே ஒரு புராணக் கதையும், சிலம்பில் ஒரே ஒரு புராண வரலாற்றுக் கதையும் இடம் பெற்றுள்ளன.

4.18 சிலம்பு, மேகலை இரண்டிலுமே கோவலன்-கண்ணகியின் முற்பிறப்புக்கதை பேசப்படுகின்றது. ஆனால் சிலப்பதிகாரத்தில், இக்கதை ஒட்டிய கிளைக்கதையாகப் பயின்று வருகிறது. அதாவது, சிலம்பில் இக்கதையின் பயன்பாடு அதிகம். மணிமேகலையில் இக்கதை ஊன்று கிளைக் கதையாகவே படைக்கப்பட்டுள்ளது. சிலம்பின் கிளைக்-கதையை அப்படியே சாத்தனார் எடுத்தாண்டாலும், தன் போக்கிற்கேற்ப அக்கதையிலும் பௌத்தம் பேசியுள்ளார். சிலம்பில் சமயத்தைப் பற்றிப்பேசாத கண்ணகியை, சாத்த-னார் சமயம் பற்றிப் பேசும் பாத்திரமாக மாற்றிப் படைத்-துக் காட்டியுள்ளார்.

4.19 சிலப்பதிகாரத்தில் காப்பியப் பாத்திரப் பெருமை, ஊர்ப் பெருமை பேசும் கதைகள் எடுத்தாளப்படுகின்றன. ஆனால், மேகலையில் இப்படி ஊர்ப் பெருமை பேசும் கதையோ, பாத்திரங்களை நேரடியாக உயர்த்திப் பேசப்-பயன்படும் கதைகளோ காணப்படவில்லை.

4.20 சிலப்பதிகாரம், மேகலை இரண்டிலுமே வரலாற்-றுக் கதைகள் கிளைக் கதைகளாக எடுத்தாளப்பட்டுள்ளன. சிலம்பில் பாண்டியன் பற்றிய வரலாற்றுக் கதைகளும், மேகலையில் சோழன் பற்றிய கதையும் கிளைக்கதைகளாக அமைந்துள்ளன.

4.21 சிலம்பு, மேகலை இவ்விரு காப்பியங்களிலுமே ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு ஒன்றிய கிளைக்கதைதான் இடம்பெற்றுள்ளது.[10] காப்பியக் கதைப் போக்கை மாற்றும் ஒன்றிய கிளைக்கதை, காப்பியங்களில் மிகக் குறைவாகவே இடம் பெறும் என்பதை இவ்விரு காப்பியங்களின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

4.22 சிலப்பதிகாரத்தில், காப்பிய ஆசிரியரான அடிகள் தன் வாழ்க்கையையும் கதைப்படுத்தி இணைத்துக் கொண்டுள்ளார். இக்கிளைக் கதை, காப்பியப் போக்குக்குச் சிறிதும் தேவையில்லாதது என்றாலும், அடிகள், இக்கதையைக் காப்பியத்துடன் இணைத்துள்ள திறம் போற்றுதற்குரியது. சாத்தனார், தன்னைக் காப்பியத்தில் எங்குமே இனம் காட்டிக் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

4.23 சிலம்பில், அடிகள் ஒரே கிளைக்கதையை இரு வேறு நோக்கில் எடுத்தாண்டுள்ள போக்கை[11] மேகலையில் மட்டுமல்ல வேறு எந்தத் தமிழ்க்காப்பியங்களிலும் காண முடியாது.

4.24 அதேபோல், ஒருவருடைய வாழ்க்கைக் கதையை இருவேறு பகுதியாக்கி, இருவேறு நோக்கில், இருவேறு கிளைக்கதையாகப் படைத்துள்ள தன்மையை[12] மணிமேகலையில் அன்றி வேறு எந்தத் தமிழ்க் காப்பியங்களிலும் காண முடியாது.

4.25 சிலப்பதிகாரத்தில் அடிகள், மையக்கதையையே கிளைக்கதையாக்கிப் பேசியுள்ளார். இந்தப் போக்கும் மேகலையில் மட்டுமன்றிப் பிற காப்பியங்களிலும் காண முடியாத ஒன்றாகும்.

4.26 சிலப்பதிகாரத்தில், அடிகள், ஒரு கிளைக்கதையை மற்றொரு கிளைக்கதைக்கு அழுத்தம் தருவதாய்ப் படைத்-

துள்ளார்.[13] இந்தப் போக்கையும், புலமைத் திறனையும் சாத்தனாரிடம் காண முடியாது.

4.27 சிலம்பு, மேகலை என்ற இரண்டிலுமே, கம்ப இராமாயணத்தில் கிளைக்கதைகள் காப்பிய நிகழ்கால நிகழ்ச்சியுடன் இரண்டறக் கலப்பதுபோல் பின்னப்பட்டுள்ள கவித்துவ அழகைக் காண முடியாது.[14]

சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற இரு காப்பியக் கிளைக்கதைகளின் ஒப்பீட்டு நோக்கின் மூலம், இரு புலவர்களின் மாறுபட்ட இலக்கியப் போக்குகளைப் புரிந்து கொள்ள முடிகிறது. கலையை வாழ்க்கைக்காக மட்டுமல்ல, கலைக்காகவும் அனுபவித்தல் வேண்டும் என்ற கொள்கையை உடைய அடிகளிடம் இருந்து, 'கலை வாழ்க்கைக்காகவே' என்ற ஒருமுக நோக்குடைய சாத்தனார் மாறுபட்டுத் திகழ்கிறார். வாழ்க்கை நீதியை அடித்து உணர வைத்துள்ள சாத்தனாரின் போக்கைக் காட்டிலும், வாழ்வு நிலையைச் சுவையாக உய்த்துணரவைத்த அடிகளின் போக்கே இலக்கிய ரசிகர்களுக்கு விருந்தாக அமைகின்றது.

## அடிக்குறிப்புகள்

1. மணிமேகலையில் கிளைக்கதைகள் என்ற தலைப்பின்கீழ் 3.6.2ல் இக்கருத்து சான்றுகளுடன் பேசப்பட்டுள்ளது.

2. மணிமேகலை முற்பிறப்புக்கதை-I, மணிமேகலை முற்பிறப்புக் கதை-II, சுதமதி மாதவி முற்பிறப்புக் கதை, உதயகுமாரனின் முற்பிறப்புக் கதை, கோவலன்-கண்ணகியின் முற்பிறப்புக் கதை என்ற ஐந்து கதைகள்.

3. இதற்குரிய காரணத்தையும், விளக்கத்தையும்

'சிலப்பதிகாரத்தில் கிளைக்கதைகள்' என்ற தலைப்பின்கீழ் 2.4 3ல் காண்க.

4. ஆபுத்திரன், ஆதிரை, காஞ்சனன், சந்திற் பாவை என்ற இக்கிளைக்கதை மாந்தர்களின் பெயர்களால் மணி-மேகலையில் காதைத் தலைப்புக்கள் அமைந்துள்ளன.

5. மாடலன் கூறும் மூன்று கிளைக்கதைகளில், முதற்-கதையின் ஒரு பகுதியாக இக்கதை அமைந்துள்ளது. இச்-செய்தியைச் சிலப்பதிகாரம்; 15:28-37-ல் காண்க.

6. சுதமதி முற்பிறப்புக் கதை, பீலிவளை-நெடுமுடிக்-கிள்ளி வரலாறு என்ற கிளைக்கதைகள்.

7. சுதமதி கதை பிற்பகுதி, சக்கரவாளக் கோட்டம் எழுந்த கதை, ஆபுத்திரன் கதை, விசாகை-தருமதத்தன் கதை என்பன.

8. சக்கரவாளக் கோட்டம் எழுந்த கதையில் வரும் 'கோதமி வரலாறு', புத்தஜாதகக்கதையில் வரும் 'கௌதமி' வரலாறு போன்றதே.

9. மாடலன் கூறும் கோவலன் பற்றிய மூன்று கதை-களில், முதல் கதையின் பகுதியாக வரும் 'கீரிப்பிள்ளை கதை' பஞ்சதந்திரக் கதைகளில் ஒன்றாகும்.

10. சிலம்பில் பொற்கொல்லன் கூறும் 'அரண்மனைத் திருட்டு' பற்றிய கதையும், மேகலையில் 'ஆபுத்திரன் கதை'-யும் ஒன்றிய கிளைக்கதைகளாக வருகின்றன.

11. இப்போக்கிற்குரிய காரணத்தையும், விளக்கத்தை-யும் சிலப்பதிகாரத்தில் கிளைக்கதைகள்' என்ற தலைப்பின்-கீழ் 2.4.3ல காண்க.

12. இதற்குரிய விளக்கத்தை 'மணிமேகலையில் கிளைக்-கதைகள்' என்ற தலைப்பின்கீழ் 3.4.2ல் காண்க.

13. இது பற்றிய தெளிவைச் சிலப்பதிகாரத்தில் கிளைக் கதைகள் என்ற தலைப்பின்கீழ் 2.4.8ல் காண்க.

14. இராமாயணத்தில் கிளைக்கதைகள் காப்பிய நிகழ்-கால நிகழ்ச்சியுடன் ஒன்றி நிற்கின்றன. சான்றாக, அகலி-கைக் கதையை எடுத்துக் கொள்ளலாம். இக்கதையில், அகலிகை சாபம் பெற்றது கிளைக்கதை நிகழ்ச்சி. அவள் சாப நீக்கம் பெற்றது மையக்கதை நிகழ்ச்சி. அகலிகை, இராமன் கால் பட்டுக் கல்லுரு நீக்கி எழுவது, கிளைக்கதை நிகழ்ச்சி மையக் கதையுடன் இணைய வழிவகுப்பதுடன், காப்பிய நிகழ்கால ஓட்டத்துடனும் கிளைக்கதையைத் தொடர்பு படுத்துகிறது. இதைத்தான் 'நிகழ்ச்சித் தொடர்பு கிளைக் கதைகள்' என்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். இந்த வகைக் கிளைக்கதைகள் சிலம்பிலும் மேகலையிலும் எடுத்-தாளப்படவில்லை.

# 5

## காப்பியத்தில் துணைக்கதைகள்

5.0 காப்பியத்துள் பயின்றுவரும் மூன்று வகையான கதைகளுள் துணைக்கதையும் ஒன்று. காப்பிய மையக் கதையில் ஆங்காங்கே சிறு விளக்கமாகவும், வர்ணனையாகவும், எடுத்துக் காட்டாகவும், உவமையாகவும் இவ்வகைக் கதைகள் இடம் பெறுகின்றன. துணைக்கதைகள் காப்பியம் தொடர்ந்து நடைபெற உதவும் காப்பிய உறுப்புக்களாகத் திகழா என்றாலும், காப்பியச் சுவைக்காக, ஓர் உத்தியாகப் பயன்படுத்தப்படுகின்றன. இத்துணைக் கதைகள் காப்பியத்திற்குப் பெருமித நடை தந்து, காப்பிய நடையை, மற்ற இலக்கிய நடையிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றன.

5.1 ''பல்வேறு புராணக்கதைகள், நாடோடிக்கதைகள், கதைப்பாடல்கள் இவையெல்லாம் இணைந்த ஒரு தொகுப்பாகவே காப்பியம் விளங்குகின்றது'' என்ற ஹட்சனின் காப்பியக் கொள்கையை உறுதிப்படுத்துவன துணைக்கதைகள். இத்துணைக் கதைகள், பல்வேறுபட்ட கதைகளின் சங்கமத் துறையாகக் காப்பியத்தை ஆக்கி, அதை உலகந் தழுவியதாக மிளிரச் செய்கின்றன. தவிர, இத்தகைய கதைகள் காப்பியப் புலவனின் பரந்துபட்ட அறிவிற்கும், சான்றாகத் திகழ்கின்றன.

**5.2 துணைக் கதைகள்—விளக்கம்:**

துணைக்கதைகளில், கதை மிகச் சுருக்கமாகச் சொல்லப்படும். அதாவது கதையின் கரு அல்லது கதையின் ஏதாவது

ஓரு நிகழ்ச்சி மட்டும் குறிப்பிடப்பட்டு, பின்னணி, பாத்திங்கள், காரண காரியத் தொடர்புகள் போன்றவைகள் வாசகர்களின் ஊகத்திற்கு விடப்படும்.

சான்று:

5.2.1 கயு:

எள்ளறு சிறப்பி னிமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் டீர்த்தோன்[2]

இத்துணைக் கதையுள் சிபி மன்னன் வரலாறு கூறப்படுகிறது. சிபி மன்னன் போற்றப் படுவதற்குக் காரணம், அவன் புறாவினுடைய துன்பத்தை நீக்கியதுதான். இதுவே, அவன் வரலாற்றின் தலையான செய்தி. அதை, இங்குச் சுட்டி, புறா சிபி மன்னனிடம் வருவதற்கான காரண காரியங்களுடன் கூடிய பின்னணியை வாசகர்களின் ஊகத்திற்கு விட்டு விடுகிறார் காப்பியப் புலவர்.

5.2.2 நிகழ்ச்சி:

அறுபொரு ளிவனென்றே யமரர்கணந் தொழுதேத்த
உறுபசியொன் றின்றியே யுலகடைய உண்டனையே[3]

இங்கு, கண்ணன் உலகினை உண்ட நிகழ்ச்சி குறிப்பிடப்படுகிறது. திருமால் கண்ணன் அவதாரத்தில் நிகழ்த்திய அற்புத நிகழ்ச்சிகள் பல. அவற்றில் ஒன்று யசோதை வியப்ப, வாயினுள் உலகினைக் காட்டியது. அந்நிகழ்ச்சியை மட்டும் எடுத்துக் காட்டி, கண்ணன் உலகினை உண்ட காரண காரியத் தொடர்பினையும், தத்துவார்த்தங்களையும் வாசகர்களின் ஊகத்திற்கே விட்டுவிடுகிறார் புலவர்.

5.2.3 மேற்கூறிய இரண்டு முறைகளில் இருந்து சற்று மாறியும் துணைக் கதைகள் அமைந்திருக்கலாம். சில துணைக்கதைகளில், கதைமாந்தர் பெயர்கள் மட்டும் சுட்டப்

டட்டு, அவர்கள் வரலாற்றின் அனைத்துப் பகுதியும் வாச-கர்களின் ஊகத்திற்கு விடப்படும்.

சான்று:

ஆன்மகன் அசலன் மான்மகன் சிருங்கி
புலிமகன் விரிஞ்சி புரையோர் போற்றும்
நரிமகன் அல்லனோ கேச கம்பளன்[4]

இங்கு அசலன், சிருங்கி, விரிஞ்சி, கேச கம்பளன் என்ற நால்-வர் சுட்டப்படுகின்றனர். பெயரளவில் சுட்டப்படும் இவர்-களது வரலாற்றை வாசகர்களின் ஊகத்திற்கே விட்டு விடுகி-றார் காப்பியப் புலவர்.

அதாவது, துணைக்கதையைப் பொறுத்தவரை, காப்-பியப்புலவரால் கதை விரித்துக் கூறப்படமாட்டாது. ஆனால், இன்ன கதையைச் சுட்டுகிறோம் என்பதைத் தெளிவாக வாசகர்களுக்குப் புரிய வைத்துவிடுவார்கள். இதனால், நாடறிந்த கதைகளையே, மக்கள் போற்றும் கதைகளையே, காப்பியப் புலவர்கள் துணைக் கதைகளாக எடுத்தாண்டுள்ளனர் என்பது பெறப்படுகிறது.

துணைக் கதைகளில், மையக்கதை, கிளைக்கதை போன்று கதைமாந்தர் பெயர்கள் கட்டாயம் சுட்டப்படுதல் வேண்டும் என்ற வரையறை கிடையாது. துணைக் கதை-களில் கதை மாந்தர் பெயர்கள் சுட்டப்பட்டும் வரலாம், சுட்டப் படாமலும் வரலாம். வரலாற்றுக் கதைகள் துணைக் கதைகளாக வரும்போது, பெயர் சுட்டப்பட்டு வருகின்றன. நாட்டுப்புறக் கதைகள் துணைக் கதைகளாக வரும்போது பெரும்பாலும் பெயர் சுட்டப்படுவதில்லை. இவ்வகைக் கதைகளில் நிகழ்ச்சி ஒன்றே முக்கியத்துவம் கொடுத்துச் சுட்டப்படுகிறது.

## 5.3 துணைக்கதைகளின் அமைப்பு:

காப்பியத்தில் துணுக்குகளாக வரும் துணைக் கதைகள்

பெரும்பாலும் ஓரிரண்டு வரிகளிலேயேச் சொல்லப்படும். மிகச் சிறுபான்மை சற்று அதிகமான வரிகளில் சொல்லப்படும். பெரும்பாலும், இச்சிறுபான்மை கதைகள் கூட, பன்னிரண்டு வரிகளுக்கு மேல் மிகாது, இவைகள்தான், கிளைக்கதைகள் போன்ற தோற்றத்தைத் தந்து நிற்பன. ஆனால், அவைகளின் அமைப்பு கிளைக்கதைகளிலிருந்து அவற்றை வேறுபடுத்திக் காட்டும்.

சான்றாக, சிலப்பதிகாரத்தில் பத்தினிப்பெண்டிர் எழுவர் கதையை எடுத்துக் கொள்ளலாம்.[5] இவற்றைக் கிளைக் கதைகளாகக் கொள்வதற்குரிய சூழல் உண்டு. காரணம், அக்கதைகள் கூற்று முறையில் அமைந்துள்ளன. அவ்வேழு கதைகளும், கூற்று முறையில் அமைந்திருந்தாலும், அவற்றில் முதல் ஆறு கதைகள் கதைப்படுத்தப்படவில்லை என்ற காரணத்தால் துணைக்கதைகளாகக் கொள்ளப்படுகின்றன. ஏழாவது கதை, மற்றக் கதைகளைவிடச் சற்று விரிவாகக் கூறப்பட்டாலும், அது, கதை மாந்தர் பெயர் குறிப்பிடப்படவில்லை என்ற நிலையிலே கிளைக்கதையாகும் தகுதியை இழந்துவிடுகிறது. அக்கதையை அடிகள் சற்று விரித்துக் கூறுதற்குரிய காரணத்தையும் ஆராயலாம். அத் துணைக் கதை மட்டும் வட்டார வழக்குக் கதையாக இருந்திருக்க வேண்டும். இலக்கியம் நாடு தழுவியது ஆதலால், அதை மற்றப் பகுதியினரும் புரிந்துகொள்ளச் சற்று விரிவாகக்கூறியிருக்கலாம். இநத ஒரு துணைக்கதையின் அமைப்பு மட்டும், மற்றத்துணைக்கதைகளின் அமைப்பில் இருந்து மாறுபட்டுத் திகழ்கிறது.

### 5.4 துணைக் கதைகளின் வகைகள் :

துணைக் கதைகளை மூன்று வகைகளாகப் பாகுபடுத்தலாம். கிளைக்கதை போன்று துணைக் கதைகளும் பலவாறான கதைகளாக வந்தாலும், அவற்றை

1. புராணக் கதை
2. வரலாற்றுக் கதை
3. நாட்டுப்புறக் கதை

என்ற மூன்று வகைகளில் அடக்கிவிடலாம். புராணக கதை-கள் என்பது மும்மூர்த்திகள், தேவர்கள், அரக்கர்கள், முனி-வர்கள் பற்றிய கதைகளாக அமைந்திருக்கும். இவைகள் சாபவரலாற்றுக் கதைகளாகவோ, அவதாரக் கதைகளா-கவோ, இரு பிரிவினருக்கு ஏற்படும் போட்டிகள், அதன் விளைவுகள் பற்றிய கதைகளாகவோ அமைந்திருக்கலாம்.

வரலாற்றுக் கதை என்பது மன்னர்கள் பற்றியோ, அவர்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் பற்றியோ கூறுவ தாக அமைந்திருக்கும். புராண வரலாற்றுக் கதைகளையும் இப்பிரிவிலேயே அடக்கிவிடலாம். இவ்வகைக் கதைகளில், வரலாற்றுக் கதை, மாந்தருடனோ, நிகழ்ச்சியுடனோ, புராணச் செய்திகளை ஏற்றிக் கூறப்பட்டிருக்கும்.

நாட்டுபுறக் கதை என்பது, காப்பியம் எழுந்த நாடு தழுவியக் கதையாகும். நாட்டில், எப்பகுதியிலாவது நிகழும் தனித்த, சற்று மாறுபட்ட நிகழ்ச்சிகளாக இவ் வகைக் கதைகள் அமைந்திருக்கும்.

இம்மூன்றையும் தவிர, மற்றொரு வகையான துணை கதைகளும் உண்டு. இவை மிக அரிதாகவே காப்பியத்தில் இடம்பெறும். தனிப்பட்ட ஒருவர் வாழ்வில் நடந்த நிகழ்ச்சி யாக இருக்கும். ஆனால் வரலாற்று முக்கியத்துவம் பெற்ற தாக அமைந்திருக்காது. இவ்வகைக் கதைகள் உரை யாடலின் போது கூற்றளவிலே வெளிப்படும். சான்றாக ஒருவர் ஒரு கொலையைப் பற்றிக் கூற, உடனிருப்பவர் தான் கண்ட, கேட்ட (நடந்த) பிற கொலை நிகழ்ச்சிகளை உடன் கூறுவது. இது போன்று அமைந்த துணைக்கதை

களும் மற்றத் துணைக்கதைகளுக்குரிய அமைப்பையே பெற்றுத் திகழும்.

### 5.5 துணைக்கதைகள் பயின்று வரும் விதம் :

துணைக்கதைகள் வர்ணனையாக, எடுத்துக்காட்டாக, பின்னணி விளக்கமாக, உவமையாக, இறைவனைப் பரவு-முகமாக என்று பலவிதமாகக் காப்பியத்தில் பயின்று வருகின்றன. இன்னவிதமாகத்தான் வர வேண்டும் என்ற தனிப்பட்ட வரையறையைத் துணைக்கதைகளுக்குத்தர முடியாது. உவமையாக வரும் துணைக்கதைகள் காப்பிய உவமைகள (allusions) என்று அழைக்கப்படும்.

### 5.5.1 வர்ணனையாக வரும் துணைக்கதைகள் :

கதை மாந்தர்களையோ, தெய்வங்களையோ, இடங்களையோ கூறும்போது, அவற்றை வர்ணித்துக்கூறும் வழக்கம் காப்பியத்திற்குரியது. சில இடங்களில் அவை கதை நிகழ்ச்சிகளோடு வர்ணிக்கும்போது துணைக்கதையாகி விடுகின்றன.

**சான்று :**

மாயவனைப் பற்றிப் பாடும் மகளிர், அவனை வர்ணித்துப் பாடுகின்றனர். அவன் நிறத்தையோ, தோற்றப் பொலிவையோ, வர்ணித்துப்பாடாது, அவன் அவதாரச் செயலைக் கூறி வர்ணித்துப்பாடுகின்றனர்.

''பாம்பு கயிறாகக் கடல் கடைந்த மாயவன்''[6] என்று கூறும்போது, கண்ணனின் லீலைகளில் ஒன்றான திருபாற்கடல் கடைந்த நிகழ்ச்சி அவனை வர்ணிக்கும்முகமாக வந்து, துணைக் கதையாகச் சிறககிறது.

### 5.5.2 எடுத்துக்காட்டாக வரும் துணைக்கதைகள் :

காப்பிய மாந்தர்கள், தங்கள் உரையாடலின் போது, சிறு எடுத்துக்காட்டுகளாகக் கதைகளைக குறிப்பிடுவதும்

உண்டு. அவர்கள், இக்கதைகளைத் தேவை கருதியே குறிப்பிட்டுப் பேசுகின்றனர்.

சான்று

தாதை யேவலின் மாதுடன் போகிக்
காதலி நீங்கக் கடுந்துய ருழந்தோன்
வேத முதல்வற் பயந்தோன்[7]

என்று கவுந்தியடிகள் கோவலனுக்கு இராமன் கதையை எடுத்துக்காட்டுகிறார். சிலப்பதிகாரத்தில், கோவலன் துயர் நீக்க, இந்தக் கதையைக் கவுந்தியடிகள் எடுத்துக்காட்டுகிறார்.

**பின்னணி விளக்கமாக வரும் துணைக்கதை**

கதை மாந்தர்களையோ, நிகழ்ச்சிகளையோ புரிந்து கொள்ளப் பின்னணிவிளக்கம் தேவை. அப்பின்னணி விளக்கம் கதையாகவோ, இயற்கைச் சூழலாகவோ, நிகழ்ச்சியாகவோ, உரையாடலாகவோ அமையலாம். கதைப் பின்னணியாக அமையும் போது, அவை துணைக்கதையாகும் தகுதியைப் பெறுகிறது.

சான்று

சிலம்பில் மாதவியை அறிமுகப்படுத்தும் போது, அடிகள் அவள் குலப்பிறப்பை, ஒரு கதைப் பின்னணியுடன் விளக்கி அறிமுகப்படுத்துகிறார்.

தெய்வ மால்வரைத் திருமுனி யருள
எய்திய சாபத் திந்திர சிறுவனொடு
தலைக் கோல் தானத்துச் சாப நீங்கிய
மலைப்பெருஞ் சிறப்பின் வானவர் மகளிர்
சிறப்பிற் குன்றாச் செய்கையொடு பொருந்திய
பிறப்பிற் குன்றாப் பெருந்தோள் மடந்தை
தாதவிழ் புரிகுழல் மாதவி[8]

என மாதவி, 'அகத்தியர் சாபத்தால் நிலவுலகில் பிறந்த தெய்வ மங்கை வழிவந்தவள்' என்ற புராணக் கதைப் பின்னணியைத் தந்து. அவள் பாத்திரத்தை உயர்த்திக் காட்டுகிறார்.

**உவமையாக வரும் துணைக்கதை :**

புலவர்கள், ஒரு பொருளையோ, ஒரு நிகழ்ச்சியையோ, ஒரு இடத்தையோ விளக்க, தெரிந்த ஒன்றை உவமித்துக் காட்டி விளக்குவது வழக்கம். காப்பியப் புலவர்கள், இயற்கையை உவமித்துக் கூறுவது போல், கதை நிகழ்ச்சி களையும் உவமித்துக் கூறுவது வழக்கம்.

சான்று :

பெருமக னேவ லல்ல தியாங்கணும்
அரசே தஞ்சமென் றருங்கா னடைந்த
அருந்திறல் பிரிந்த அயோத்தி போலப்
பெரும் பெயர் மூதூர் பெரும்பே துற்றதும்[9]

இவ்வடிகளில், கோவலன் புகாரைப் பிரிந்து வந்தது, இராமன் அயோத்தியைப் பிரிந்து வந்தது போல் இருக்கிறது என்றும், புகார் மக்கள், அயோத்தி மக்கள் போல் தங்கள் பெருமகனைப் பிரிந்து பேதுற்றனர் என்றும் காட்டப்படுகிறது. இங்கு, இராமன் கதை நிகழ்ச்சி உவமையாக எடுத்தாளப்பட்டுள்ளது. இப்படி, உவமை மொழியாகவும் துணைக்கதைகள் பயின்று வரும்.

**பரவுமொழியாக வரும் துணைக் கதைகள்:**

இறைவனையோ, மன்னனையோ வாழ்த்தி போற்றும் போது, அவர்கள் செயல்களைக் கூறிப் பரவுதல் வழக்கம். அந்தச் செயல்கள் முறையே புராணக்கதை நிகழ்ச்சியாகவும், வரலாற்று நிகழ்ச்சியாகவும் அமைந்து நிற்கும். பரவு மொழிகளாக வரும் துணைக்கதைகள் பெரும்பாலும் அடுக்கி வரும்.

சான்று:

மூவுலகும் ஈரடியான் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்முடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே[10]

இங்கு, மாயவனை வணங்கும் இடைக்குல மகளிர், அவன் ஈரடியால் மூவுலகம் அளந்த செயலையும், இராவணனை வென்றதையும் கூறி, அவனைப் போற்றிப் பரவுகின்றனர். இப்படி பரவுமொழிகளாகவும் துணைக் கதைகள் அமைந்து விடுகின்றன.

துணைக்கதைகள் போன்று உவமையாகவும், வர்ணனையாகவும், பரவு மொழிகளாகவும் கிளைக்கதைகள் அமைவதில்லை. இப்படி, இயல்பிலும், அமைப்பிலும் கிளைக்கதைகளினின்று, துணைக் கதைகள் மாறி அமைந்துள்ளதால், இவற்றை இணைத்துப் பார்க்காமல், தனித்துக் காணுதல் அவசியமாகிறது. தவிர, கிளைக்கதைகள் போன்று துணைக் கதைகள் காப்பிய உறுப்பாகத் திகழாமல், காப்பிய உத்தியாகத் திகழ்வதாலும், அதனின்று இதனைத் தனித்து வகைப்படுத்திக் காணுதல் இன்றியமையாத தேவையாகிறது. மற்ற இலக்கிய வகைகளில் போற்றப்படாத இவ்வுத்தி, காப்பியத்திற்கு தரும் பெருமித நடை கருதியும், இவற்றைப் பேணுதல் அவசியமாகிறது.

காப்பியக் கதைகள் (அட்டவணை விளக்கம்)

| மையக்கதை (1) | கிளைக்கதை (2) | துணைக்கதை (3) |
|---|---|---|
| 1. விளக்க முறையில் (descriptive form) அமைந்திருக்கும். | கதைப்படுத்திக் கூறப்பட்டிருக்கும். அதாவது எடுத்துரைக்கும் முறையில் (narrative form) அமைந்திருக்கும். | மிகச் சுருக்கமான செய்தியாகக் கூறப்பட்டிருக்கும். |
| 2. பல நிகழ்ச்சிகள் உள்ளடங்கிய ஒரு தலைவன் தலைவியின் வாழ்க்கைக் கதை. | பெரும்பாலும் ஒரு நிகழ்ச்சியே விரித்துக் கூறப்பட்டிருக்கும். | ஒரு நிகழ்ச்சி சுருக்கமாகக் கூறப்பட்டிருக்கும். |
| 3. கதை நிகழ்கால ஓட்டத்தில் சொல்லப்படும் | இறந்த காலத்திலேயே கதை சொல்லப்பட்டிருக்கும். | இங்குக் கதை சுருக்கமாகப் பேசப்படுவதால் கால ஓட்டம் ஒரு பிரச்சனையன்று. சற்று நீண்ட கிளைக் கதைகள் இறந்த காலத்திலேயே சொல்லப்படும். |

| 1 | 2 | 3 |
|---|---|---|
| 4. பல பாத்திரங்கள் இடம் பெறுவர். | பெரும்பாலும் ஒரு பாத்திரமும், மிகச் சிறுபான்மை இரண்டுக்கு மேற்பட்ட பாத்திரங்களும் இடம் பெறுவர். | காப்பியப் பாத்திரங்கள் துணைக்கதைகளில் இடம் பெறார். |
| 5. தொடக்கம், வளர்ச்சி, உச்சகட்டம், வீழ்ச்சி, முடிவு என்ற நாடக அமைப்பு கொண்டிருக்கும். | இவ்வமைப்பில் வராது. | இவ்வமைப்பில் வராது. |
| 6. இக்கதையிலிருந்து ஒரு பகுதியை நீக்கினாலும் காப்பியம் தொடராது. | கிளைக் கதைகளினால் காப்பிய ஓட்டம் தடைபெறாது என்றாலும், இவை இல்லாது காப்பியம் தெளிவு பெறாது. | இவ்வகைக் கதைகள் காப்பிய ஓட்டத்தையோ, தெளிவையோ பாதிக்கா. |
| 7. காப்பிய பாவிகத்தின் விளக்கமாக இவ்வகைக் | காப்பிய பாவிகத்திற்குச் சில கிளைக் கதைகள் அழுத்தம் | இவ்வகைக் கதைக்கும் காப்பிய பாவிகத்திற்கும் |

| 1 | 2 | 3 |
|---|---|---|
| கதை அமையும். | தரும். | எவ்வித தொடர்பும் இல்லை. |
| 8. காப்பிய இயக்கமே மையக் கதைதான். | இவ்வகைக் கதை காப்பிய உறுப்பாகத் திகழும். | காப்பிய உத்தியாகத் திகழும். |
| 9. காப்பியத்துள் இக்கதை முதல்நிலை பெறும். | இவ்வகை, துணைநிலை பெறும் | இவ்வகை, கடைநிலை பெறும். |
| 10. ஒரே ஒரு கதைதான் மையக்கதையாக அமைய முடியும். | பல கதைகள் கிளைக் கதைகளாக அமைய முடியும். | மிகப் பல கதைகள் துணைக்கதைகளாக அமைய முடியும். |

## அடிக்குறிப்புக்கள்

1. செண்பகம். மா., தமிழ்க் காப்பியங்கள், பக்: 140.
2. சிலப்பதிகாரம்; 20 : 51-52.
3. மேலது., 17 : முன்னிலைப் பரவல்:33வது பாடல்
4. மணிமேகலை, 13 : 63-65
5. சிலப்பதிகாரத்தில் வஞ்சின மாலையில் கண்ணகி கூற்றாகப் பயின்று வந்துள்ளன. இவ்வேழு கதைகளும் ஐந்து முதல் முப்பத்திநான்கு அடிகளில் பயின்று வந்துள்ளன.
6. சிலப்பதிகாரம்., 17 : பாட்டு 2.
7. மேலது., 14 : 46-49.
8. மேலது., 3 : 1-7.
9. மேலது., 13 : 63-65.
10. மேலது., 17 : படர்க்கைப் பரவல்-பாடல் 1.

# 6

## சிலப்பதிகாரத்தில் துணைக் கதைகள்

6.0 பல்வேறு கதைகளின் ஒட்டுமொத்த வடிவமே காப்பியம். சிலப்பதிகாரம் இதற்கு விதிவிலக்கன்று. கோவலன் கண்ணகி வாழ்க்கைக் கதையுடன், நாட்டில் வழங்கும் பல கதைகளையும் இணைத்து, ஒருமித்த வடிவமாக்கி சிலப்பதிகாரம் என்ற காப்பியத்தை யாத்துத் தந்துள்ளார் அடிகள். காப்பியத்தில் மூவகைக் கதைகள் பயின்று வந்தாலும், ஓரே கதையாக வரும் மையக்கதையே காப்பியத்தின் உயிர் மூச்சிழையும் உடலாகத் திகழ்கிறது. அவ்வுடலின் உறுப்பாகக் கிளைக்கதைகளும், அவ்வுடலினை அழகூட்டும் அணிகளாகத் துணைக்கதைகளும் அமைந்து சிறக்கின்றன. இளங்கோவடிகள், சிலப்பதிகார மையக் கதையைச் சுவையூட்டி அழகூட்ட, 61 துணைக்கதைகளை எடுத்தாண்டுள்ளார். அவர், ஒவ்வொரு துணைக்கதையையும் தனக்கே உரிய இயல்புடன், காப்பியத்துடன் ஒருங்கிணைந்து நிற்குமாறு இடைமிடைந்து பின்னியுள்ளார்.

6.1 சிலப்பதிகாரத்தில், புராணக்கதை, வரலாற்றுக் கதை, நாட்டுப்புறக் கதை என்ற மூவகைக் கதைகளுமே பயின்று வருகின்றன என்றாலும், புராணக் கதைகளுக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்து எடுத்தாண்டுள்ளார். மொத்தத் துணைக் கதைகளில், 71·/. புராணக் கதைகளும், 17·/. வரலாற்றுக் கதைகளும், 12·/. நாட்டுப்புறக் கதை-

களும் இடம் பெறுகின்றன. கிளைக்கதைகளில் மிகக்குறை-வான புராணக்கதைகளை எடுத்தாண்ட அடிகள், துணைக்-கதைகளில் பெரும்பாலானவற்றைப் புராணக் கதைகளாகப் படைத்ததற்குக் காரணம் உண்டு. சிலம்பின் மையக்கதை செழிப்புமிக்க வணிகக் குடி மகனைப்பற்றியது புராணம் சம்-பந்தப்படாத அம் மையக் கதையை வளர்க்க வரும் கிளைக்-கதைகளையும் புராணக் கதைகளாகப் படைகக முடியாது. ஒரே ஒரு இடத்தில் காப்பியத் தலைமைப் பாத்திரமான மாதவியின் குலப்பெருமையைப் பேசும் நோக்கில் புராணக்-கதையைக் கிளைக் கதையாக்கியுள்ளார் அடிகள். இக்கதை-கூட எலியப் பேசப்பட்ட புராணக்கதையே ஆனால், அதை மிக அழகாகக் காப்பியப் பாத்திரத்துடன் தொடர்பு படுத்-திப் பேசியுள்ளது அடிகளின் புலமைக்குச் சான்றாகும். இப்-படி, கிளைக் கதைகளாகப் புராணக் கதைகளைப் படைக்க முடியாத நிலையில், நாட்டு மக்கள் போற்றும் அவ்வகைக் கதைகளைத் தன் காப்பியத்தில் உவமையாகவும், வர்ண-னையாகவும், பின்னணி விளக்கமாகவும். பரவல் மொழியாக-வும்படைத்துக் காட்டியிருக்க வேண்டும். சிலம்பை நன்கு ஆராய்ந்தால், மக்கள் அதிகம் போற்றும் கதைகள், காப்பி-யத்துள் இடம் பெற வேண்டும் என்ற ஒரே நோக்குட-னேயே, அடிகள் புராணக்கதைகளை அதிகமாகத் துணைக்-க்கதைகளாக எடுத்தாண்டுள்ளார் என்பது புலப்படும்.

## 6.2 புராணம் பற்றிய துணைக்கதைகள்

சிலப்பதிகாரத்தில் மொத்த துணைக் கதைகளில் 43 கதைகள் புராணம் பற்றியவையே. இவற்றில் திருமாலின் அவதாரம்பற்றிய கதைகளே அதிகமாக இடம்பெற்றுள்ளன. அவை தவிர, பாற்கடல் கடைந்த வரலாறு, கொற்றவை, முருகன் பற்றிய புராணக் கதைகளும் துணைக்கதைகளாகப் பயின்று வந்துள்ளன.

### 6.2.1 திருமாலைப் பற்றிய துணைக்கதைகள்

மும்மூர்த்திகளில் ஒருவரான திருமாலின் அவதாரச் சிறப்பு பற்றிய புராண கதைகள், இன்றளவும் மக்கள் போற்றிப் பரவும் கதைகளாகும். திருமாலின் அவதாரங்களைப் பற்றி இலக்கியங்கள் பலவாறு சிறப்பித்துப் பேசுகின்றன. அடிகள் திருமாலின் தசாவதாரங்களில் மூன்று அவதாரங்களைப் பற்றிப் பேசியுள்ளார். இராமாவதாரம், கண்ணன் அவதாரம், வாமன அவதாரம் என்ற மூன்று அவதாரங்களில், கண்ணன் அவதாரம் பற்றியே மிக அதிகமாகப் பேசியுள்ளார். பொதுவாகவே, திருமால் அவதாரங்களில், கண்ணன் அவதாரமே யாவராலும் விரும்பிக் கேட்கவும், சொல்லவும் படும். இளம் பாலகனான கண்ணன் செய்த குறும்புகளைக் கேட்டு மகிழாதவரே இல்லை எனலாம். அப்படிப்பட்ட கண்ணன் அவதாரம் பற்றிய துணைக்கதைகளே சிலம்பில் அதிகம் பயின்று வந்துள்ளன.

#### 6.2.1.1 கண்ணன் அவதாரம் பற்றிய துணைக்கதைகள்

கண்ணன் அவதாரத்தில் திருமால் நிகழ்த்திய ஒவ்வொரு நிகழ்ச்சியையுமே ஒரு கதையாக விரித்துக் கூறலாம் அந்த அளவிற்கு அந்நிகழ்ச்சிகள் சிறப்புடையன. சிலப்பதிகாரத்தில் கண்ணனைப்பற்றிய 13 நிகழ்ச்சிகள் துணைக்கதைகளாகப் பயின்று வந்துள்ளன. கண்ணன் ஆயர்பாடியில் யசோதை வயிற்றில் பிறந்தது, சிறு குழந்தையாய் ஆயர்பாடியில் வெண்ணெய் திருடியுண்டது, யசோதை வியப்பத் தன் சிறுவாயில் உலகத்தைக்காட்டியது, அவள் கட்டிய கடைக்கயிற்றால் கட்டுண்டு கிடந்தது, நப்பின்னையின் ஆடையை ஒளித்து விளையாடியது, நப்பின்னையை மணந்தது, வாணாசுரன், அநிருத்தன் இவர்களை வென்றது, கம்சனின் வஞ்சம் தீர்த்தது, குருந்த மர வடிவமாய் இருந்த அசுரனை வெட்டி வீழ்த்தியது, திகிரியால் உலகை மறைத்துப் பஞ்சபாண்டவருக்காகத் தூது சென்றது போன்ற கண்ணனின்

கல்யாண குணங்கள் துணைக்கதைகளாகச் சிலம்பில் இடம் பெற்றுள்ளன. கம்சனின் வஞ்சம் தீர்த்தது, குருந்த மரத்தை வெட்டியது, பஞ்ச பாண்டவருக்குத் தூது சென்றது போன்ற கதை நிகழ்ச்சிகள் திரும்பத் திரும்ப எடுத்தாளப்பட்டுள்ளன.

கண்ணனைப்பற்றிய துணைக்கதைகள் பரவலாகக்காப்பியம் முழுவதும் எடுத்தாளப்பட்டிருந்தாலும், ஆய்ச்சியர் குரவையிலேயே மிகுதியாக எடுத்தாளப்பட்டுள்ளன கண்ணனைக் குலதெய்வமாகக் கொண்டுள்ள இடையர் குலப்பெண்டிர் அவனைப் பரவுமுகமாக அமைந்த இக்காதையில், அவனைப் பற்றிய துணைக்கதைகள் அதிகம் அமைந்துள்ளது பொருத்தமாக உள்ளது.

> கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
> இன்றுநம் ஆனுள் வருமேல் அவன்வாயில்
> கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ,[1]

என்றும்,

> கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்
> எல்லைநம் ஆனுள் வருமேல் அவனவாயில்
> முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ,[2]

என்றும், ஆயர் மகளிர் தோழிகளை விளித்து, கண்ணனைப் பாடிப் பரவும முறை இலக்கிய நயம் மிக்கது. அடிகள், இவ்வாறு கண்ணன் அவதார நிகழ்ச்சிகளைத் தகுந்த இடத்தில் துணைககதைகளாகப் படைத்துக் காப்பியச் சுவையை மிகுவித்துள்ளார்.

### 6.2.1.2 இராமாவதாரக் கதைகள்

திருமால், மனித உருவேற்று வந்த அவதாரம் இராமாவதாரம். மனிதன அனுபவிககும இன்பதுன்பங்களைத் தானும் அனுபவித்து, மனிதருள் மனிதராக வாழ்ந்து சிறந்த அவதாரம் இது. சாதாரண மனிதன் படும் துனபங்களான மனைவியை இழப்பது, வீடு துறந்து வாழ்வது போன்ற

நிகழ்ச்சிகள் இவ்வவதாரத்தில் இடம் பெறுகின்றன. கோவலன் வாழ்க்கையில் நிகழும் சில நிகழ்ச்சிகள் இராம அவதார நிகழ்ச்சிகளுடன் ஒத்துச் செல்கின்றன. இராமனைப் போலவே, கோவலனும் மனைவியுடன் தன் நாட்டைத் துறந்து செல்வது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இதனால், இக்கதை நிகழ்ச்சியை அடிகள் உவமையாக எடுத்தாண்டுள்ளார்.

பெருமகன் ஏவ லல்ல தியாங்கணும்
அரசே தஞ்சமென் றருங்கான் அடைந்த
அருந்திறல் பிரிந்த அயோத்தி போல[3]

கோவலனைப் பிரிந்த புகாரும் துன்புறுகிறது என இராமன் கதையைக் கோவலன் கதையுடன் அடிகள் அழகாக ஒப்பிட்டுக் காட்டியுள்ளார். கவுந்தியடிகள், கோவலன் பெற்றோரையும் உற்றாரையும் பிரிந்து நாடுவிட்டு நாடு வந்த தன் வாழ்வை எண்ணி வருந்தும்போது, 'உனைவிடத் துன்பம் அடைந்தவன் அல்லவா இராமன். அவன் மனைவியையும் இழந்து அல்லவா அவதிப் பட்டான்' என எடுத்துக்காட்டி ஒப்பிட்டுத் தேற்றும் பகுதியும் கவிநயம் வாய்ந்த இடமாக அமைந்துள்ளது. இராவணனை இராமன் வென்ற அவதாரச் சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சி ஆய்ச்சியரின் பரவு மொழியாக நின்று திருமாலைச் சிறப்பிக்கின்றது. இவ்வாறு இராமனைப் பற்றிய கதை நிகழ்ச்சிகள் துணைக்கதைகளாக சிலம்பில் இடம் பெற்றுள்ளன.

### 6 2.1.3 வாமன அவதாரக் கதை

திருமால் மாவலியின் வலிமையை அடக்க, வாமன உருவெடுத்து, தன் சீரடியால் மூவுலகும் அளந்த அவதார மகிமையை, இரண்டு இடங்களில் அடிகள் துணைக்கதைகளாக எடுத்தாண்டுள்ளார்.

திரண்டமார் தொழுதேத்தும் திருமால்நின் செங்கமல
இரண்டடியான் மூவுலகும் இருள்தீர நடந்தனையே[4]

என்று ஆய்ச்சியர் திருமாலை அவன் அவதாரச் சிறப்புப்பேசி, பரவித் துதிக்கின்றனர். இப்படிப் பரவல் மொழியாகவே, மற்றொரு தடவையும் இத்துணைக்கதைப் பயின்று வந்-துள்ளது.

மேற்கூறியவாறு, திருமாலின் அவதாரக் கதைகள் காப்-பியத்தில் ஆங்காங்கு இடம் பெற்று காப்பியத்தைச் சிறப்-பிக்கின்றன.

6.2.2 திருப்பாற்கடல் கடைந்த வரலாறு

புராணக் கதைகளில் சில கதைகள் திருமால் மீதும், சில கதைகள் சிவன் மீதும் ஏற்றிச் சொல்லப் படுகின்றன. சில சமயம், ஒரே கதையை இருவர் மீதும் ஏற்றிப் பேசுவதும் உண்டு. திருப்பாற்கடல் கடைந்த வரலாற்றைச் சைவர்கள் சிவன் மீதும், வைணவர்கள் திருமால் மீதும் ஏற்றிப்பேசுவர். அடிகள், இக்கதையை மூன்று இடங்களில் துணைக் கதை-களாக எடுத்தாண்டுள்ளதால், இருமதக் கருத்துப் படியும், இவ்வரலாற்றைப் படைத்துக் காட்டியுள்ளார்.

திருமாலைப் பரவும் ஆய்ச்சியர்,

வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக்
கடல் வண்ணன் பண்டொரு நாள் கடல்வயிறு கலக்கினையே[5]

என்றும்,

பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்[6]

என்றும், அவனை ஏத்திப் பரவுகின்றனர். இவர்கள் கருத்துப்-படி, திருமாலே பாற்கடல் கடைவித்தவன் என்பதும், அவனே இக்கதை-நிகழ்ச்சிக்கு நாயகன் என்பதும் பெறப்படுகின்றன. இக்கதையில் சிவன்பெறும் பங்கை இவர்கள் கூறவில்லை.

வேட்டுவ வரியில் கொற்றவையைப் போற்றும் மகளிர், சிவனின் இடப்பாகத்தவள் கொற்றவை ஆதலால், சிவனு-

னுடைய செயல்களை எல்லாம், அவள்மேல் ஏற்றிக் கூறுகின்றனர். அச்சூழலில் அவர்கள்,

விண்ணோர் அமுதுண்டுஞ் சாவ ஒருவரும்
உண்ணாத நஞ்சுண் டிருந்தருள் செய்குவாய்'

என்று ஏத்திப் பாடுகின்றனர். இச் சூழலில் திருப்பாற்கடல் கடைந்த வரலாற்றில் சிவனுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பேசப்படுகிறது. இவர்கள் இக்கதையில் திருமால் பெற்ற பங்கைக் கூறவில்லை.

இவ்வாறு,சிவன் திருமால் இருவர் பேரிலும், பாற்கடல் கடைந்த நிகழ்ச்சியைப் படைத்துக்காட்டுவதுடன், அவ்வவ் சமய மகளிரின் வாயிலாகப் படைத்துக் காட்டி பொருத்தமுறச் செய்கிறார் அடிகள். இவ்வாறு,சிலம்பில் பலகதைகள் பரவுமொழியாக வரும் துணைக் கதைகளாகவே படைத்துக் காட்டப்பட்டுள்ளன.

6.2.3 கொற்றவை பற்றிய துணைக்கதைகள்

சிலப்பதிகாரத்தில் கொற்றவை பறறி ஐந்திற்கும் மேற்பட்ட கதைகள் பயின்று வந்துள்ளன. வேட்டுவரியில்,கொற்றவை பரவும் பாடல்கள் தவிர,பிறஇடங்களிலும் அவளைப் பற்றிய கதை நிகழ்ச்சிகள் எடுத்தாளப்பட்டுள்ளன. மாதவியின் ஆடலைப் பற்றிக்கூறும் போது, கொற்றவை மரக்கால் கொண்டு ஆடிய ஆடலை அவள் ஆடுவதாகக் காட்டுகிறார். இங்கு, 'அவுணர் போருக் காற்றாமல் வஞ்சக்தால் வெல்லக் கருதிப் பாம்பும் தேளும் பிறவிமாய்ப் போர்க்களத்தேபுகுந்து மொய்த்தலின் கொற்றவை அவற்றை அழிக்க மரக்கால் கொண்ட நிலை' கதையாக இடம் பெறுகிறது.

வழக்குரைக் காதையில் காளியின் தோற்றத்தில் காட்சியளிக்கும் கண்ணகியை வர்ணிக்குமுகமாக மூன்று கதைகள் எடுத்தாளப்படுகின்றன. இங்கு, கொற்றவை மயிடாசுரனைக் கொன்ற வரலாறும், இறைவனை ஆடலகண்டருளிய நிலை-

ம், தாருகனைக் கொன்ற நிகழ்ச்சியும் துணைக் கதைகளாக இடம் பெற்றுள்ளன. இப்படிக்கண்ணகியை, கொற்றவையுடன் ஒப்பிட்டுப் பேசும் போது, அவளைப் பற்றிய புராண நிகழ்ச்சிகளை இடைமிடைந்து பேசும் அடிகளின் புலமைப் போக்கு எண்ணிச் சுவைக்கற்பாலது.

6.2.4 முருகனைப் பற்றிய துணைக்கதைகள்:

முருகனைப் பற்றி ஐந்து துணைக் கதைகள் சிலம்பில் இடம் பெறுகின்றன. சூரனை முருகன் வென்றது, அவுணர்களை அழித்தது. கிரவுஞ்ச மலையைப் பிளந்தது, கார்த்திகைப் பெண்களிடம் வளர்ந்தது என்ற செய்திகள் துணைக்கதைகளாக இடம் பெறுகின்றன. சூரனை வென்ற நிகழ்ச்சி முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுத் திரும்பத் திரும்ப பேசப்படுகிறது. முருகனைப் பற்றிய கதைகள் குன்றக் குரவையிலேயே அதிகம் பேசப்படுகிறது.

சரவணப்பூம் பள்ளியறைத் தாய்மா ரறுவர்
திருமுலைப்பா லுண்டான் திருக்கைவே லன்றே[8]

என்றும்,

வருதிகிரி கோலவுணன் மார்பம் பிளந்து
குருகுபெயர்க் குன்றம் கொன்ற நெடுவேலே[9]

என்றும், குறமகளிர் முருகனைப் பற்றிப் புகழ்ந்து பாடுகின்றனர். இப்படி, மலைவாழ் குரவர்களின் குறிஞ்சித் தெய்வமாகிய முருகனைப் பற்றிய செய்திகளை, அவர்கள் பாடும் குரவைகளின் மூலமாகவே அடிகள் படைத்துக்காட்டியுள்ளது அவர் புலமைக்கு மற்றொருச் சான்றாகத் திகழ்கின்றது.

6.2.5 பிற புராணத் துணைக் கதைகள்:

மேற்கூறிய புராணக்கதைகளைத் தவிர, சிவன் நான்முகன் காண பாண்டுரங்க கூத்து ஆடியது, திருமகள் கொல்லிப்பாவை உருவெடுத்தது, காமவேள் பேடி உருவம் எடுத்தது,

அயிராணி கடைசியர் உருவம் எடுத்தது போன்ற புராண நிகழ்ச்சிகளும், அகத்தியர் பற்றிய கதைகளும், நள சக்கர-வர்த்தி காட்டில் மனைவியை விட்டுப்பிரிந்த புராணக்கதை-யும் சிலம்பில் துணைக்கதைகளாகப் பயின்று வந்துள்ளன. இவற்றில் முதலில் கூறிய கதைகள் மாதவியின் ஆடலைச்-சுட்டுமுகமாகப் பயின்று வந்துள்ளன. நளன் கதை கவுந்தி-யடிகளின் வாய்மூலமாகக்கோவலனிடம் எடுத்துரைக்கப்படு-கிறது. அகத்தியர் சாபத்தால் ஊர்வசி மண்ணில் பிறந்த கதை பின்னணி விளக்கமாகவும், அகத்தியர் பொதிகை வந்த வரலாறு வர்ணனையாகவும் இடம் பெற்றுள்ளன.

இவ்வாறு, புராணக் கதைகள் துணைக்கதைகளாகச் சிலம்பில் பெருமளவு இடம்பெற்றுள்ளன. இக்காப்பியத்துள் புராணக் கதைகளில் சரிபாதி பரவல் மொழியாகவும், மிகச் சிறுபான்மை உவமைகளாகவும் பயின்று வந்துள்ளன.

### 6.3 வரலாற்றுத் துணைக்கதைகள்

காப்பியம், பரந்துபட்ட சமுதாயம் தழுவிய ஒன்று என்-பதால் அரசன் முதல் சாதாரண குடிமக்கள் வரை உள்ள செய்திகளைத் தழுவியதாக அமைந்திருக்க வேண்டும் வர-லாற்றுக் கதைகள், மன்னரைப் பற்றிய செய்திகளைஅடிப்-படையாகக் கொண்டுத் திகழும். நாட்டுப் புறக்கதைகள் சாதாரண மக்களைத் தழுவியதாக அமைந்திருக்கும். சிலப்-பதிகாரத்தில், வரலாற்றுக் கதைகள் கிளைக்கதைகளாக வந்துள்ளதுபோல் துணைக்கதைகளாகவும் வந்துள்ளன. ஐந்து வரலாற்றுக் கதைகளும், மூன்று புராண வரலாற்றுக் கதைகளும், சிலம்பில் துணைக் கதைகளாக வந்துள்ளன. சோழமுன்னோர்களான மனுபற்றியும், சிபி பற்றியும் உள்ள கதைகள் திரும்பத் திரும்பப் பயின்று வந்துள்ளன மனு, தன் மகன் என்று பாராது பசுவிற்கு முறை செய்த நீதிமுறையும், சிபி, புறாவென்றுபாராதுஅதனைக்காப்பாற்றத் தன் தசை-

லையக் கொடுத்து உதவிய பெருந்தன்மையும் அடிகளைக் கவர்ந்திருக்க வேண்டும் ஆகவே, இக்கதைகள் ஒவ்வொன்றையும் மூனறு தடவைகள் எடுத்தாண்டுள்ளார்.

அடுத்ததாக, சோழ மன்னர்களில் போற்றத் தகுந்த மன்னன் கரிகாலன். அவனைப் பற்றிய நிகழ்ச்சியும் துணைக்கதையாகப் பயினறு வந்துள்ளது. கரிகால் வளவன் வடதிசைப் போருக்குச் சென்று, இமயத்தில் புலி பொறித்த நிகழ்ச்சி சுட்டப்படுகிறது. அவனுடைய வடதிசைப்போர் பின்னணி விளக்கக் கதையாகப் பயின்று வந்துள்ளது. கரிகாலன் மண்டபங்களைப் பெறக் காரணமாக, இவ்வடதிசைப் போர்ச் செலவு பேசப்படுகிறது.

கண்ணகி, பத்தினிப் பெண்டிர் எழுவர் பற்றிப் பேசும் போது, கரிகாலனின் மகள் ஆதிமந்தி பற்றியும் பேசுகிறாள். ஆதிமந்தி, தன் கணவனான ஆட்டனத்தியைக் காவிரி வெள்ளம் அடித்துச் செல்ல, அவனைத் தேடிக் கரைவழியாகவே சென்று, எங்கும் காணாது காவிரி கடலோடு கலக்கும் இடத்தில் நின்று 'கல்நவில் தோளாயோ' என்று தாளாது அரற்றி அழ, கடல், அவள் கற்பின் மாண்பு கண்டு ஆட்டனத்தியை அவள் கண்முன் நிறுத்தியது. இவ்வரலாறு குறுந்தொகையிலும், அகநானூற்றிலும் கூறப்பட்டுள்ளது.[10] இதனால், ஆதிமந்தியின் கற்பின் மாண்பு நாடெங்கும் போற்றப்பட்டு, இலக்கியங்களிலும் பரக்கப் போற்றப்பட்டது என்பதை அறியலாம். நாடு போற்றும் இவ்வரலாற்றுக் கதையை அடிகளும் தக்க இடத்தில் எடுத்தாண்டு காப்பியத்தைச் சுவைபடுத்தியுள்ளார்.

சேரமன்னன் நெடுஞ்சேரலாதன் பாண்டவர் கௌரவர் போரில், இருதரப்பினருக்கும் சோறிட்ட வரலாற்று நிகழ்ச்சியும் துணைக்கதையாகப் பேசப்பட்டுள்ளது. இவ்வரலாற்று நிகழ்ச்சியினைச் சங்க நூல்களும் குறிப்பிடுகின்றன. அடிகள், இக்கதையைச் சேர குலத்தைப் போற்றும்முகமாக எடுத்-

ரண்டுள்ளார்.

சிலப்பதிகாரத்தில் மூன்று புராண வரலாற்றுத் துணைக் கதைகள் இடம் பெற்றுள்ளன. தொடிதோட் செம்பியன் என்ற சோழ மன்னன், இந்திரனுக்கு உதவியாகச் சென்று அவன் அரண காத்து நின்ற நிகழ்ச்சி,

வீங்குநீர் வேலி யுலகாண்டு விண்ணவர்கோன்
ஓங்கரணங் காத்த வுரவோன்யா ரம்மானை[11]

என்று துணைக்கதையாகக் கூறப்பட்டுள்ளது. தவிர, அம் மன்னன் அசுரர்களுடைய மதில்கள் மூன்றினைத் தகர்த்-தெறிந்த புராண வரலாற்றுக் கதையும் சிலம்பில் கூறப்பட்-டுள்ளது. பாண்டிய மன்னன் ஒருவன், கடல் சுவற்றிப் போகும்படி தனது வேலை எறிந்த கதையும் துணைக் கதை-யாகப் பேசப்பட்டுள்ளது. அம்மன்னனைச் சிலம்பு 'வடிவ்-வலம்ப நின்ற பாண்டியன்' என்று குறிப்பிடுகிறது. இவ-னையே திருவிளையாடல் புராணம் 'உக்கிரகுமாரபாண்டி-யன்' என்று குறிப்பிடும். அடிகள் இக்கதைகளையும் குலப்-பெருமை பேசும் முகமாகவே எடுத்தாண்டுள்ளார்.

## 6 4 நாட்டுப்புறத் துணைக்கதைகள்

சிலப்பதிகாரத்தில் மொத்தம் ஏழு நாட்டுப்புறக் கதை-கள் எடுத்தாளப்படுகின்றன, இவற்றில் ஆறு கண்ணகி கூற்றாகவும், ஒன்று புலவர் கூற்றாகவும் எடுத்தாளப்பட்-டுள்ளன. இப்படிப் புலவர் கூற்றாகத் துணைக்கதைகள் வருவதும் மிக அபூர்வமானதேயாகும். உறையூரைப் பற்றிப் பேசும் காப்பியப் புலவர், அந்த நகர் பற்றிய நாட்டுப்புறக் கதை வழக்கையும் உடன் எடுத்தாண்டுள்ளார். உறையூர் அமைந்துள்ள இடம் மிகச் சாதாரண இடமன்று. இயற்கை அல்லாத நிகழ்ச்சி ஒன்று அங்கு நடந்துள்ளது. முற்காலத்தே ஒரு கோழி யானையை எதிர்த்துப் போரிற் புறங்கொடுத்-தோடச் செய்தது அந்நிலத்தில. அது கண்ட சோழ மன்னனே

இந்நிலத்திற்குச் சிறப்புண்டு எனக்கருதி, அவ்விடத்தே தன் தலைநகரை அமைத்து, அதற்குக் 'கோழி' என்று பெயர் சூட்டினான் என்பது நாட்டுப்புற வழக்கு. இது போன்ற, நாட்டுப்புறக் கதைகள் நாட்டில் வழங்கப்பட்டு வந்தது என்பதற்கு விக்கிரமாதித்தன் கதையும் ஒரு சான்றாகும். விக்கிரமாதித்தனின் சிம்மாசனம் புதையுண்டிருந்த இடத்தில், இப்படி ஒரு இயற்கை அல்லாத நிகழ்ச்சி நடந்ததாகவும், அதனால் அவ்விடத்தே தோண்டிப்பார்த்த பொழுது விக்கிரமாதித்தனின் சிம்மாசனம் கிடைத்ததாகவும், 'பட்டி விக்கிரமாதித்தன்' பற்றிய நாட்டுப்புறக் கதை கூறும். இப்படி, நாட்டில் வழங்கும் கதைகளைச் சுவைபட தன் காப்பியத்துள் இணைத்துக் கொண்டுள்ளார் அடிகள்.

வஞ்சின மாலையில் கண்ணகி கூற்றில் ஏழு பத்தினிப் பெண்டிர் கதைகள் கூறப்படுகின்றன. இதில் மூன்றாவது சொல்லப்பட்டிருக்கும் ஆட்டனத்தி ஆதிமந்திக் கதை தவிர மற்ற ஆறு கதைகளும் நாட்டுப்புறக் கதைகளாக அமைந்துள்ளன இக்கதைகள் எல்லாம் புகார் பதியில் நடந்தத அடிகள் காட்டியுள்ளதை,

நீடிய

மட்டார் குழலார் பிறந்த பதிப்பிறந்தேன்[12]

என்று கூறும் கண்ணகி கூற்றின் மூலம் அறிய முடிகிறது. இக்கதைகள் ஆறும் சோழ நாட்டில் வாழ்ந்த கற்புடைய மகளிரைப் பற்றிப் பேசுகின்றன. கற்பும், கற்புடைய பெண்டிரும் அக்காலத்தில் உயர்வாகப் போற்றப்பட்டதற்கு இந்த ஊர், பெயர் சொல்லப்படாத நாட்டுப்புறக் கதைகளே சான்றாகும். வன்னி மரமும் மடைப்பள்ளியுஞ் சான்றாக முன்னிருத்தியவளையும், பொன்னி நதிக் கரையில் மணற்பாவையைக் காத்து நின்று தன் கணவனாகக் கொண்ட மகளையும், மணல்மலி பூங்கானலில் கணவன் வரும் வரைக்கும் கல்லுரு கொண்டு நின்றவளையும், வேற்றொருவன் நீள்

நோக்கம் கண்டு தன் முகத்தைக் குரங்கு முகமாக்கிக் கொண்டவளையும், மாற்றாள் குழவி கிணற்றில் விழ, தன் குழவியையும் கிணற்றில் வீழ்த்தவளையும், தன் தாய் மொழி காக்கச் சிறு குழவியைக் கணவனாகக் கொண்ட ஆடகப்பூம் பாவையையும், அவர்களின் இச்செயல்களைக் கற்பின் காரணமாகக் கண்டு கண்ணகி போற்றுவதாக அமைத்துக்காட்டி உயர்த்தியுள்ளார். இக்கதைகள் பற்றிய முழுவிளக்கத்தையும் அடிகள் எடுத்துக்காட்டாதலால், நம்மால் இக்கதைகளின் பின்னணியை முழுவதுமாகத் தெரிந்துகொள்ள முடியவில்லை. இக்குறையைப் போக்கி, கதைகளை முழுவதுமாகப் புரிந்துகொள்ள உதவுபவர்கள் உரையாசிரியர்களே. பின்னால் இக்கதைகளைப் பட்டினத்துப் பிள்ளையார் புராணத்தில் பூம்புகார்ச் சருக்கத்தில் காணலாம்.[3] இவ்வாறு, நாட்டுப்புறக் கதைகளையும் தன் காப்பியத்தில் துணைக் கதைகளாக எடுத்தாண்டு காப்பியத்திற்கு அழகூட்டியுள்ளார் அடிகள்.

6.5 மேலே எடுத்துக்காட்டப்பட்ட மூவகையான துணைக்கதைகள் தவிர, மற்றொரு வகையான துணைக் கதையும் சிலம்பில் பயின்று வந்துள்ளது. இக்கதை கொலைக்களக் காதையில் எடுத்தாளப்பட்டுள்ளது. பொற்கொல்லன் கோவலன் திருடனே என வற்புறுத்தப் பல்வேறு வகையான கருத்துக்களையும், முன்பு நடந்த அரண்மனைத் திருட்டு பற்றிய கதை நிகழ்ச்சியையும் எடுத்துக்காட்ட, அதைக் கேட்டுக்கொண்டிருந்த காவலன் ஒருவன், தன் அனுபவத்தில் கண்ட திருடனைப் பற்றி அங்கு எடுத்துக் கூறுகிறான்.

> நிலனகழ் உளியன் நீலத் தானையன்
> கலன்நசை வேட்கையிற் கடும்புலி போன்று
> மாரி நடுநாள் வல்லிருள் மயக்கத்து
> ஊர்மடி கங்குல் ஒருவன் தோன்றக்

கைவாள் உருவஎன் கைவாள் வாங்க
எவ்வாய் மருங்கினும் யானவற் கண்டிலேன் [14]

என்று தான் ஊர்க்காவல் புரியும்போது நடந்த நிகழ்ச்சியைச் சுருக்கமாக எடுத்துரைக்கிறான். இப்படி வரலாற்றில் இடம் பெறா நிகழ்ச்சிகளை முன்கூறிய நாட்டுப்புறக் கதைகளில் அடக்கலாம் என்றாலும், இக்கதை பயின்றுவரும் சூழல் கருதி இதைத் தனித்துக் காட்ட வேண்டியுள்ளது.

6.6 இவ்வாறு, சிலப்பதிகாரத்தில் பல்வேறு துணைக்கதைகளை, காப்பியத்திற்குச் சுவையூட்டும் வண்ணம் அடிகள் எடுத்தாண்டுள்ளார். இத்துணைக் கதைகளில் பெரும்பாலானவை இன்று வரை மக்களால் வழங்கிப் போற்றப்பட்டு வருகின்றன. அகத்தியரின் சாபம் பற்றிய கதை ஒன்றே துணைக்கதையாகவும் கிளைக்கதையாகவும் இருநோக்கில் இக்காப்பியத்துள் பயின்று வந்துள்ளது வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை போன்ற நாட்டுப்புறப் பாடல்களைக் காப்பியத்துள் இடம்பெற வைத்ததால், அடிகளால், இத்துணைக் கதைகளையும் காப்பியத்தில் இடம்பெறச் செய்ய முடிகிறது. காப்பியத்துள் இத்துணைக்கதைகள் மையக்கதையுடன் ஒன்றி நிற்க இவ்வகைப் பாடல்கள் கருவியாக அமைந்து சிறக்கின்றன.

## அடிக்குறிப்புக்கள்

1. சிலப்பதிகாரம், 17 : பாட்டு 1
2. மேலது, 17 : பாட்டு 3
3. மேலது, 13 : 43-45
4. மேலது, 17 : முன்னிலைப் பரவல் 3
5. மேலது, 17 : முன்னிலைப் பரவல் 1

6. மேலது, 17 : பாட்டு 2

7. மேலது, 12 : பாட்டு 21

8. மேலது, 24 : பாட்டுமடை 9

9. மேலது, 24 : பாட்டுமடை 9

10. குறுந்தொகை 31வது பாட்டிலும், அகநானூற்றில் 45,76,222,236,376,396-வது பாடல்களிலும் ஆட்டனத்தி ஆதிமந்தி பற்றிய செய்திகளைக் காணலாம்.

11. சிலப்பதிகாரம், 29 : அம்மானை வரி 1

12. மேலது, 21 : 34-35

13. சிலப்பதிகாரம் சோமசுந்தரனார் அவர்கள் உரையில் பக். 281-282-ல் அகச்சான்றுடன் இக்கருத்து சுட்டப்பட்டுள்ளது.

14. சிலப்பதிகாரம், 16 : 204-209.

அட்டவணையின் மூலம் அறியவரும் செய்திகள்

1. அதிகத் துணைக்கதைகளைக் கொண்ட காதைகள்

சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவையில்தான் அதிகத் துணைக்கதைகள் பயின்று வந்துள்ளன. ஆய்ச்சியர் குரவையில் 17 துணைக்கதைகளும், கடலாடு காதையில் 10 துணைக்கதைகளும், வஞ்சின மாலையில் 7 துணைக்கதைகளும் பயின்று வந்துள்ளன. இப்படி ஒரே காதையில் பல துணைக்கதைகள் பயின்றுவரும் சூழலையும் நாம் அறிந்துகொள்ள முடிகிறது. ஆய்ச்சியர் குரவையில் ஆய்ச்சியர், கண்ணனுடைய லீலைகளைச் சொல்லிப் பரவுகின்றனர். அதனால் அக்காதையில் துணைக்கதைகள் அதிகம் பயின்று வருகின்றன. கடலாடு காதையில், மாதவியின் ஆடல் வர்ணிக்கப்படுகிறது. அப்பொழுது அவள் ஆடும் பதினொரு வகை ஆடல்கள் தெய்வங்கள் ஆடிய ஆடல்களை ஒத்திருந்தன என அடிகள் படைத்துக் காட்டுகிறார். அதனால், அத்தெய்வங்கள் ஆடிய சூழல் பற்றிய கதைகள் அக்காதைகளில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. வஞ்சின மாலையில் கண்ணகி, தான் கற்புடைய மகளிர் பதியில் பிறந்தவள் என்பதைச் சுட்ட பல எடுத்துக்காட்டுக் கதைகளை அடுக்கடுக்காக எடுத்துக்காட்டுவதால், அக்காதையில் பல துணைக்கதைகள் இடம்பெற்றுள்ளன. இதனால் இளங்கோவடிகள் தேவை கருதியே ஒரே காதையில் பல துணைக்கதைகளை எடுத்தாண்டுள்ளார் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

2. சிலப்பதிகாரத்தில் மொத்தத் துணைக்கதைகளில் 26 கதைகள் எடுத்துக்காட்டுக்களாகவும், 17 துணைக்கதைகள் பரவு மொழியாகவும் பயின்று வந்துள்ளன. காப்பியங்களில் பொதுவாக, எடுத்துக்காட்டுக் கதைகள் அதிகம் இடம்பெறுவதில் வியப்பொன்றுமில்லை. சிலம்பில், வழிபாட்டுப் பாடல்கள் அடங்கிய காதைகள் மூன்று இருப்பதால், பரவு மொழியாகத் துணைக்கதைகள் சற்று அதிகமாகப் பயின்று வந்துள்ளன.

# 7

## மணிமேகலையில் துணைக் கதைகள்

7.0 சிலப்பதிகாரத்தைத் தொடர்ந்து தமிழுக்குக் கிடைத்த காப்பியமான மணிமேகலை, முந்திய காப்பியத்தைப் பலநிலைகளிலும் அடியொற்றியே எழுந்தது. இதன் ஆசிரியர் சாத்தனார் துணைக்கதைகளை எடுத்தாள்வதிலும் சிலம்பையே பின்பற்றியுள்ளார். அவர், துணைக்கதைகள் காப்பியத்திற்குத் தரும் பெருமித நடை கருதியும், காப்பியத்தைச் சமுதாயம் தழுவியதாக ஆக்கவும் நினைத்து, தன் காப்பியத்தில் துணைக்கதைகளை எடுத்தாண்டுள்ளார். இத்துணைக்கதைகள் மணிமேகலைக் காப்பியத்தைப் பல்வகையிலும் சுவையூட்டிச் செழிப்பிக்கின்றன.

7.1 மணிமேகலையில், புராணக்கதை, வரலாற்றுக் கதை, நாட்டுப்புறக்கதை என்ற மூவகைக் கதைகளுமே பயின்று வருகின்றன என்றாலும், சிலம்பைப் போல் புராணக்கதைகளே அதிகம் எடுத்தாளப்பட்டுள்ளன. மொத்தத் துணைக்கதைகளில், 72% புராணக்கதைகளும், 22% வரலாற்றுக்கதைகளும், 6% நாட்டுப்புறக்கதைகளும் இடம்பெற்றுள்ளன. இவ்வாறு, சாத்தனார் புராணக்கதைகளையே அதிகம் எடுத்தாண்டாலும், சிலம்பில் அவ்வகைக் கதைகளுக்கு அடிகள் கொடுத்தமுக்கியத்துவத்தைஇவர் கொடுக்கவில்லை அதாவது. அடிகளைப் போல் புராணக் கதைகளைப் பரவு-

மொழிகளாக எடுத்தாளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மணிமேகலை பௌத்தம் பேச எழுந்த காப்பியம் ஆதலால்; அதில் பிற சமயத்தினரின் பரவுமொழிப் பாடல்கள் இடம் பெறாததில் ஆச்சரியமில்லை. ஆனால் அடிகளைப் போல் வர்ணனை, எடுத்துக்காட்டு, பின்னணி விளக்கம், உவமை போன்ற உத்திகளில் துணைக்கதைகளைச் சாத்தனார் எடுத்தாண்டுள்ளார்.

### 7.2 புராணம் பற்றிய துணைக்கதைகள்

மணிமேகலையில் 23 கதைகள் புராணக்கதைகளாகப் பயின்று வந்துள்ளன. இக்கதைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு புராண வரலாற்றைப் பேசுவன. சிலம்பைப் போல் திரும்பத் திரும்ப ஒரே கதை பல இடங்களில் பயின்று வருவதை மேகலையில் ஒரு இடத்தைத் தவிர மற்ற இடங்களில் காண முடியாது.

#### 7.2.1 இந்திரவிழா எடுக்கப்பட்ட வரலாறு

இக்கதை மற்றத் துணைக்கதைகளைக் காட்டிலும் முக்கியத்துவம் வாய்ந்தது. 'இந்திரவிழா' எடுப்பதிலிருந்து மணிமேகலை காப்பியம் தொடங்குகிறது பின்பு இவ்விழாக்கோள் மறக்கப்படுவதால் காப்பியக் கதை நடக்கும் இடமான புகார் அழிவுறுகிறது. இப்படிக் காப்பிய முக்கிய நிகழ்ச்சிகளுடன் சம்பந்தப்பட்ட கதையாக இக்கதை திகழ்கிறது. நாவலந் தீவின் காவல் தெய்வமான சம்பாதி, அத்தீவிலுள்ளோரைக் காத்தல் வேண்டி அவர்களுக்கு வரும் தீங்கை நீக்குதல் பொருட்டு இந்திரனைக் குறித்து முதன்முதலாக விழாக்கோள் எடுத்தது என்பதே இக்கதைப் பொருள்.

#### 7.2.2 சம்பாதி சிறகிழந்த கதை

வெங்கதிர் வெம்மையின் விரிசிறை யிழந்த
சம்பாதி[1] ...... .....................

என்று சம்பாதியின் கதையைச் சாத்தனார் எடுத்துரைக்

கிறார். சம்பாதி என்ற கழுகரசன் சடாயுவின் உடன்பிறந்தவன் இவன் வானுலகம் புகப் பறந்து சென்றபொழுது கதிரவன் சினத்திற்கு ஆளாகிச் சிறகு தீயப்பெற்றான். இக்கதையைக் கம்பராமாயணம்,

ஆயுயர் உம்பர் நாடு காண்டும் எனறறிவு தள்ளி
மீயுயர் விசும்பி னூடு மேக்குறச் செல்லும் வேளை
காய்கதிர்க் கடவுட் டேரைக் கண்ணுற்றும் கணாறாமுன்
தீயையுந் தீக்குந் தெய்வச் செங்கதிர்ச் செல்வன சீறி

..............................................................

வெந்துமெய் யிறகுதீந்து விழுந்தனென் விளிகிலாதான்

என்று சுருக்கமாகக் கூறுகிறது.

### 7.2.3 கவேரன் தவம் இருந்த வரலாறு

காவிரி என்னும் திருநதியைத் தன்பெண்ணாகப் பெறத் தவம் இருந்தான் கவேரன் என்னும் மன்னன் என்று பௌராணிக மதம் கூறும்.[3] இவ்வாறு, அவன் தவம் இருந்த இடம், பின்பு அவன் பெயராலேயே கவேரவனம் என்று பெயர்பெற்றதாகச் சாத்தனார் காட்டுகிறார். இக்கதையை மட்டும்தான் இவர் இரு இடங்களில் எடுத்தாண்டுள்ளார். கவேரன் பெற்றதால் அந்நதி காவிரி என்றும், காவிரி ஓடும் இடம் ஆதலால் சோழர் தலைநகரம் காவிரிப்பூம்பட்டினம் என்றும் பெயர்பெற்றதாகக் காப்பியப் புலவர் சுட்டுகிறார்.

### 7.2.4 பிரத்தியும்நன் பேடிவடிவம் கொண்ட கதை

இக்கதை சிலப்பதிகாரத்திலும் துணைக்கதையாகப் பயின்று வந்துள்ளது.[4] வாணாசுரனுடைய நகரமாகிய சோ என்னும் நகரத்தின் வீதியில், கண்ணனுடைய மகனும், காமனுடைய அவதாரமுமாகிய பிரத்தியும்நன் என்பவன், தன் மகனாகிய அநிருத்தனைச் சிறைவீடு செய்தல் பொருட்டு, பேடி வடிவம் கொண்டு திரிந்தனன்.

வாணன் பேரூர் மறுகிடைக் தோன்றி
நீணில மளந்தோன் மகன்முன் னாடிய
பேடிக் கோலத்துப் பேடு காணுநரும்[5]

என்று இக்கதையைச் சாத்தனார் எடுத்துக் காட்டுகிறார்.

### 7.2.5 அர்ச்சுனன் பேடிவடிவம் கொண்ட கதை

இக்கதை உவமையாகப் பயின்று வந்துள்ளது மகாபாரதக் கதை இது. பாண்டவர்கள் கௌரவர்களுடன் சூதாடித் தோற்றபின், அவர்களுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி விராட நகரத்தில் உள்வரிக்கோலம் பூண்டுறைந்தனர் என்று காட்டுகிறது மகாபாரதம் அப்பொழுது அர்ச்சுனன், பேடிவடிவம் பூண்டு அந்நகரத்தில் உலாவ, நகர மாந்தர்கள் அவனை அர்ச்சுனன் என்று அறியாது, புறம் சூழ்ந்து ஆரவாரித்தனர். இக்கதை நிகழ்ச்சியைச் சாத்தனார் மணிமேகலை தவ வேடம் பூண்டு புகார் வீதியில் செல்ல, அவளைக் காணியச் சூழ்ந்த கம்பலை மாக்களுடன் ஒப்பிட்டுப் பேசுகிறார்.

### 7.2.6. திருமகள் கொல்லிப்பாவை வேடம் பூண்ட கதை

இக்கதையும் சிலப்பதிகாரத்தில் துணைக்கதையாகப் பயின்று வந்துள்ளது.[6] தேவர் அசுரர் போரின்போது, திருமகள், அசுரர்கள் மோகித்து மெலிந்து விழும்படி அழகிய கொல்லிப் பாவையின் வடிவம் புனைந்துகொண்டாள், இக்கொல்லிப் பாவையின் உருவம் கொல்லிமலையின் மேற்புறத்திலே வரையப்பட்டுள்ளது என்றும், அது கண்டவர்க்கு மயக்கத்தைத் தரும் அழகுடையது என்றும் கூறுவர்[7].

### 7.2.7. முருகன் கிரவுஞ்ச மலையைப் பிளந்தது

தேவர் அசுரர் போரில் தேவர்களுக்குத் துணையாக நின்று அசுரரை எதிர்த்துப் போரிட்டான் முருகன். கிரவுஞ்சம் என்ற மலையின் உருக் கொண்ட அசுரனைத் தன் கை வேலால் தகர்த்தெறிந்தான். இக்கதையைச் சாத்தனார்

குருகுபெயர்க் குன்றங் கொன்றோ னன்னநின்
முருகச் செவ்வி முகந்து[8]

என்று உவமையாக எடுத்தாண்டுள்ளார். சிலப்பதிகாரத்திலும் இக்கதை துணைக்கதையாகப் பயின்று வந்துள்ளது.[9] ஆனால், அங்குப் பரவுமொழியாக எடுத்தாளப்பட்டுள்ளது.

### 7.2.8 சூரியன் உலகில் தோன்றிய வரலாறு

சக்சர வாளத்துக் தேவ ரெல்லாம்
தொக்கொருங் கீண்டிக் துடிதலோ கத்து
மிக்கோன் பாதம் வீழ்ந்தனர் இரப்ப
இருள் பரந்து கிடந்த மலர்தலை யுலகத்து
விரிகதிர்ச் செல்வன் தோன்றினன்[10]

என்று சாத்தனார் இக்கதை பற்றிக் கூறுகிறார். அதாவது, சக்கரவாளத்தில் வாழ்கின்ற தேவர்கள் யாவரும் ஒன்றுகூடி, துடிதலோகத்துறைகின்ற 'பிரபாபாலன்' என்ற தேவனிடம் அடி வீழ்ந்து வணங்கி வேண்ட, அவனும் இருள் பரவிக்கிடக்கின்ற இவ்வுலகில் விரிந்த ஒளியாய கதிரவனைத் தோற்றுவித்தான் என்று பௌத்த நூல்கள் கூறும். சூரியனுடைய தோற்றம் சைவ புராணங்களில் வேறுவிதமாகப் பேசப்படும்.

### 7.2 9 அசலன், சிருங்கி, விரிஞ்சி, கேசகம்பளன் வரலாறு

இம்முனிவர்கள் யாவரும் இயற்கையான பிறப்புடையவர்கள் அல்லர் இவாகள் மிருகங்களின் வயிற்றில் பிறந்தவர்கள். இவர்களில் அசலன் ஆவினுடைய வயிற்றிலும், சிருங்கி மான் வயிற்றிலும், கேசகம்பளன் நரி வயிற்றிலும் பிறந்தனர். இவர்கள் இப்பிறப்பு பெறக் காரணம் என்ன என்பது தெரியவில்லை மணிமேகலைக் காப்பியம் இயற்றப்பட்டுப் பல நூற்றாண்டுகள் ஆகிவிட்டதால் வழக்கிழந்த இக்கதைகளின் வரலாற்றை நம்மால் முழுவதுமாக அறிய முடியவில்லை.

### 7.2.10 அகத்தியர் வசிட்டர் பிறப்பு பற்றிய கதை

அகத்தியர், வசிட்டர் இருவரும் பார்ப்பன குல முதல்-வராகப் போற்றப்படுபவர்கள். இவர்கள் தானும, பிரமனுக்-கும், திலோத்தமைக்கும் பிறநதவர்கள். திலோத்தமை தேவ குல கணிகையாவாள். அவள் வயிற்றில் இவர்சள் பிறந்ததாக வேதவழிப்பட்ட நுல்கள் கூறுகினறன. இதை ஆபுத்திரன் பார்ப்பன குலத்தினருககாக எடுத்துககாட்டுகிறான்.

### 7.2.11 தேவர்கள் அமுதுண்டு ஒளித்த கதை

தேவர் அசுரர் போரில், ஒரு நிலையில், தேவர்கள் சாகா வரம் பெறத் திருபாற்கடலை, பேரு மலையை மத்தாகவும், வாசுகியைப் பாம்பாகவும் கொண்டு கடைய, அதில் அமுதம் திரண்டெழுந்தது. அவ்வமுதத்தைத் தேவர்கள் பெற்று, தாங்களே பகுத்துண்கின்றனர். அவற்றில் மிஞ்சியதை, பிறர் உண்ணா வண்ணம் ஒளித்து வைத்தனர் என்று சாத்தனார் இத்துணைக்கதையை எடுத்துக்காட்டுகிறார்.

வெண்திரை தந்த வமுதை வானோர்
உண்டொழி மிச்சிலை யொழித்து வைத்த[11]

இப்புராண நிகழ்ச்சி சைவ வைணவ நூல்களில் சுட்டப்பட-வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### 7.2.12 சேதுபந்தனம்

இராமன் வரலாற்றில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி இது. பின்-னால் ஆழ்வார்கள் புகழ்ந்து பாடிய இச்சேதுபந்தனத்தைச் சாத்தனாரும் எடுத்துக்காட்டுகிறார்.

அடலரு முந்நீர் அடைந்த ஞான்று
குரங்குகொணர்ந் தெறிந்த நெடுமலை யெல்லாம்
அணங்குடை யளக்கர் வயிறுபுக்க[12]

என்று இப்புராண நிகழ்ச்சியைச் சாத்தனார் எடுத்துரைக்-

கின்றார். திருமால் இராமவதாரம் எடுத்தபொழுது அவதார நோக்கம் நிறைவேற, இராவணனைப் போரிட்டு அழிக்க இலங்கை செல்கிறான். அப்பொழுது இடைப்பட்ட கடலைக் கடக்க, குரக்கினம் பாலத்தை உருவாக்குகின்றது. அப்பாலத்திற்காக அருகில் உள்ள மலைக்கற்களை எல்லாம் கடல் வாயுள் கொணர்ந்து போட, அக்கடல தெய்வத்தின் வயிற்றில் கற்கள் எல்லாம் சென்று மறைந்தனவாம். இச் சேதுபந்தன நிகழ்ச்சி உவமையாகக் காப்பியத்தில பயின்று வந்துள்ளது. மற்றொரு இடத்தில் இராமன் இராவணனுடன் போரிட்டு வென்ற நிகழ்ச்சி சுட்டப்பட்டுள்ளது. இராமன் வென்றான் என்று கூறினால், இயல்பாக இராவணன் தோற்றான என்று மக்கள் உடனே கூறுவார்கள் என்று பாடலடிகள் சுட்டுகின்றன. இதன் மூலம், கம்பராமாயணம் எழும முன்னரே, இராமன் கதை நாட்டில் யாவரும அறிந்ததாக இருந்தது என்பது தெளிவு,

### 7. 2 13 அகலிகை கதை

இந்திரன், மீதூர்ந்த காமத்தால், கௌதம முனிவருடைய பத்தினியான அகலிகைக்கு தீரா அபவாதம் விளைவிப்பதுடன், தானும் அம்முனிவருடைய சாபத்தால் ஆயிரம் கண்ணுற்றான் என்று புராணங்கள் கூறும் இக்கதை இராமாயணத்திலும் சுட்டப்படுகிறது. கம்பராமாயணத்தில் இக்கதை அகலிகை படலத்தில் பேசப்படுகிறது.

### 7. 2. 14. சுவாகை கதை

இக்கதையும் காமவயப்பட்ட தேவர்களில் ஒருவரான அங்கியங் கடவுளைப் பற்றிப் பேசுகிறது. அவன், சரவணப் பொய்கைக் கரையிடத்துத் தவம் செய்துகொண்டிருந்த ஏழு முனிவர்களின் பத்தினிப்பெண்டிரின்பால் காமுற்றுத் தவிககு, அத்தவிப்பு நீக்கும் பொருட்டு, அவன் மனைவியாகிய சுவாகை என்பாள், அம்மனைவிமாரின் ஒவ்வொருவர் வடி-

வத்தையும் தானே எடுத்து வந்து, அவனை உய்வித்தான் என்று புராணம் கூறும்.

மேருக் குன்றத் தூறுநீர்ச் சரவணத்து
அருந்திறன் முனிவர்க் காரணங் காகிய
பெரும்பெயர் பெண்டிர் பின்புளம் போக்கிய
அங்கி மனையாள் அவரவர் வடிவாய்த்
தங்கா வேட்கை தனையவள் தணித்ததூஉம்[13]

என்று சாத்தனர் இக்கதையை எடுத்துக்கூறி, தேவர் முதல் மனிதர் வரை காம வசப்பட்டுத் துன்புறுகின்றனர் எனக் காட்டுகிறார். இக்கதை, வியாசபாரதத்தில் ஆரண்யப் பருவத்தில் சுட்டப்படுகிறது.

### 7.2.15 வாமன அவதாரம்

மாவலி மன்னன் தேவர்களுக்கு இடுக்கண் செய்ய, அது பொறாத தேவர்கள் திருமாலிடத்தே சென்று தஞ்சம் புகுந்தனர். திருமாலும், மாவலி மன்னனின் வலிமையை அடக்க, வாமன அவதாரம் எடுத்துச் சென்று, மூன்றடி நிலம் கேட்டான். திருமாலின் சூழ்ச்சியை அறிந்த வெள்ளி என்ற குரு கொடாதே என்று தடுத்தான். மாவலி அவனை இகழ்ந்து நீர்வார்த்து நிலமீந்தான். இக்கதை மாவலியின் வள்ளன்மையைக் குறிக்கச் சாத்தனாரால் எடுத்தாளப்படுகிறது. இக்கதை ஆழ்வார்களின் பாடல்களிலும், கம்பராமாயணத்தில் வேள்விப்படலத்திலும் எடுத்துரைக்கப்படுகிறது.

### 7.2.16 கண்ணன் குரவையாடியது

திருமால், கண்ணன் அவதாரத்தில் தன் முன்னோனான பலராமனுடனும், தன் காதலி நப்பின்னையுடனும் ஒருங்குகூடிக் குரவையாடிய நிகழ்ச்சி சாத்தனாரால் துணைக்கதையாகச் சுட்டப்படுகிறது.

மாமணி வண்ணனுந் தம்முனும் பிஞ்ஞையும்
ஆடிய குரவை [14]

என்று வரும் அடிகள் உவமையாக எடுத்தாளப்பட்டுள்ளன. அன்னச் சேவலும், ஆண் மயிலும், பெடையும் தங்கள் சிறகை விரித்துச் சுற்றி வரும் இயற்கைக் காட்சியுடன் இப் புராணககதை நிகழ்ச்சி உவமிக்கப்படுகிறது.

### 7.2.17 பரசுராமன் கதை

மண்மருங் கறுத்த மழுவாள் நெடியோன் [15]

என்ற அடியில் பரசுராமனைப் பற்றிச் சாத்தனார் எடுத்துரைக்கிறார். பரசு என்ற படைக்கலத்தை உடைய பரசுராமன் மன்னர்கள் குலத்தை வேரறுக்கக் கருதி, அவர்களை வெட்டிவீழ்த்திய நிகழ்ச்சி இங்குக் கூறப்படுகிறது. பரசுராமன் கார்த்தவீரியார்சுனன் என்ற மன்னனைக் கொல்ல, அம்மன்னனின் புதல்வர்கள் கோபம் கொண்டு, பரசுராமன் இல்லாத பொழுது அவன் தந்தை சமதக்கனியைக் கொன்றுவிட்டார்கள். அதனால் மிகுந்த கோபம் கொண்ட பரசுராமன் 'நிருபர் குலத்தை நாசம் செய்வேன்' என்று சூளுரைத்து 21 முறை அவர்களைக் கொன்று, அவர்கள் இரத்தத்தைத் தேக்கி, தன் தந்தைக்கு நீர்க்கடன் செய்தான் என்பது புராண வரலாறு. கம்பரும் இதைச் சுருக்கமாக இராமாயணத்தில்,

நிருபர்க்கொரு பழிபற்றிட நிலமன்னர் குலமும்
கருவற்றிட மழுவாள்கொடு களைகட்டுயிர் கவரா
இருபத்தொரு படிகாலிமிழ் கடலொத்தலை யெறியும்
குருதிப்புன லதனிற்புக முழுகித்தனி குடைவான் [16]

என்ற பாடல் மூலம் கூறியுள்ளார்.

### 7.2.18 அகத்தியர் சாபம் பற்றிய கதை

இக்கதை சிலம்பில் கிளைககதையாகவும், துணைக்கதையாகவும் பயின்று வந்துள்ளது.[17] சாத்தனார் மணிமேக-

லையிலும் இக்கதையை எடுத்தாள்கிறார். சித்ராபதி இராச-மாதேவிக்கு இக்கதையைக் கூறுகிறாள். ஊர்வசி முதலான பதினொரு தேவ கணிகையர் தேவேந்திரன்முன் நடனமாட, சயந்தனின் பார்வையால் ஊர்வசி நடனம் பிழைபட, அது கண்ட அகத்தியர் இட்ட சாபத்தால், அத்தேவ மகளிர் நில வுலகில் பிறந்தனர் என இக்கதை கூறுகிறது.

இவ்வாறு, பலவகைப்பட்ட புராணக் கதைகளை இடை-யிடையே எடுத்தாண்டு, காப்பியத்திற்குச் சுவையூட்டியுள்-ளார் சாத்தனார்.

## 7.3 வரலாற்றுத் துணைக்கதைகள்

சாத்தனார் தன் காப்பியத்தில் புராணக்கதையளவு வரலாற்றுத் துணைக் கதைகளைப் பயன்படுத்தவில்லை. அவர், ஐந்து வரலாற்றுக் கதைகளையும், இரண்டு புராண வரலாற்றுக் கதைகளையும் எடுத்தாண்டுள்ளார்.

### 7.3.1 கரிகாலன் கதை

இக்கதை சிலப்பதிகாரத்திலும் துணைக்கதையாகப் பயின்று வந்துள்ளது.[18] கரிகால் பெருவளத்தான், வட திசைப் போர் மேற்கொண்டு சென்றான் என்ற வரலாற்று நிகழ்ச்சியே இங்குத் துணைக்கதையாக எடுத்தாளப்பட்டுள்-ளது. சிலம்பில் பின்னணி விளக்கக் கதையாக வந்த இக்-கதை, மேகலையில் உவமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

### 7.3.2 கரிகாலன் நீதியுரைத்த கதை

கரிகாலன் இளம் பருவத்திலேயே மன்னன் ஆனவன். அவன் ஆட்சிக்காலத்தில் முறை வேண்டி வந்த வாதி இருவர், மன்னன் இளையவனாய் இருப்பது கண்டு, நம்வழக்கிற்குத் தீர்வு காணமாட்டானோ எனத்தயங்கினர். இதனைக் குறிப்-பினால் அறிந்துகொண்ட கரிகாலன், அவர்கள் அறியாது முதுமை வேடம் பூண்டு வந்து அறங்கூறினான். அம்முடிவு

அவர்கள் இருவரும் ஏற்றுக் கொள்வதாய் இருந்ததாம். இக்கதையைச் சாத்தனார் துணைக் கதையாக எடுத்தாண்டுள்ளார். இக்கதையை,

உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப—நரை முடித்துச்
சொல்லான் முறை செய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமல் பாகம் படும்[19]

என்று பழமொழி நானூறு கூறுகிறது.

### 7.3.3 மனு கதை

இக்கதை மும்முறை சிலம்பில் துணைக்கதையாக வந்துள்ளது.[20] மனு என்ற சோழர்குல முன்னோன் ஒருவன், பசுவிற்கு நீதி வழங்கும்பொருட்டுத் தன் மகனைத் தேர்க்காலில் இட்டுக்கொன்ற வரலாற்றை இக்கதை உரைக்கும். மனுவின் கதை இன்றளவும் சிறந்த நீதிக்கு எடுத்துக்காட்டாக உரைக்கப்பட்டு வருகிறது.

### 7.3.4 யூகி அந்தணனாக வந்தது

இக்கதையை வரலாற்றுக்கதை என்று கூறச் சரியான வரலாற்று மூலங்கள் கிடைக்காவிடினும், இதை ஒரு இலக்கிய வரலாற்றுக் கதையாகக் கொள்ளத் தடையில்லை வத்தவ நாட்டு மன்னனாகிய உதயணனைப் பிரச்சோதன மன்னன் யானைப்பொறியால் வஞ்சித்துச் சிறை பிடித்தான். அவன் சிறையுண்ட செய்தி அறிந்து, உதயணனின் நண்பனும், மதி அமைச்சனுமான யூகி என்பான், அவனை விடுவிக்கும் பொருட்டு, பிரச்சோதனனின் தலைநகரமாகிய வஞ்சை நகரத்தின் தெருவிலே பித்தன் போல் நடித்துச் சென்றான். அப்பொழுது, அவன் நோயுற்று இருக்கிறான் என்று நினைத்த மக்கள் அவனைச் சூழ்ந்து சென்றனராம். இதை, சாத்தனார்,

சொடிக்கோ சம்பிக் கோமகன் ஆகிய
வடித்தேர்த் தானை வத்தவன் தன்னை
வஞ்சஞ் செய்துழி வாள்தளை விடீஇய
வஞ்சையில் தோன்றிய யூகி அந்தணன்
உருவுக் கொவ்வா உறுநோய் கண்டு
பரிவுறு மாக்கள்[21]

என்ற அடிகளின் மூலம் துணைக் கதையாக்கி யுள்ளார். மேகலைக்குப்பின் எழுந்த காப்பியமான பெருங்கதையின் மையக்கதையின் ஒரு பகுதியாக இக்கதை அமைந்துள்ளது. பெருங்கதை உஞ்சைக் காண்டத்தில் இவ்வரலாற்றை விரிவாகக் காணலாம்.

### 7 3.5 புத்த பீடிகைக்காகப் போரிட்ட வரலாறு

பௌத்த சமயத்தைப் பற்றிப் பேசும் வரலாற்றுக் கதை இது. நாகநாட்டை ஆண்ட இருமன்னர்கள் மணிபல்லவத்தீவு தமக்கே உரியது; ஆதலால் அதன் கண்ணே அமைந்திருக்கும் புத்தபீடிகையும் தமக்கேயுரியது என்று தம்முள் போரிட்டுக் கொண்டனராம். அப்புத்த பீடிகையை எடுக்க முயன்று தோல்வியுற்றனர் என்று சாத்தனார் இக்கதையை எடுத்துக் காட்டியுள்ளார்.

### 7.3.6 தொடிதோட் செம்பியன் கதை

இது ஒரு புராண வரலாறுக் கதையாகும். இக்கதையும் சிலம்பில் பயின்று வந்துள்ளது[22] வானத்தே இயங்கும் மதிலினுள் இருந்து, அரக்கர் வானவர், ஊரெல்லாம் புகுந்து கேடு விளைவித்தனர் அம்மதிலைச் சோழ மன்னன் ஒருவன் அழித்துத் தேவர்களைப் பாதுகாத்தான். அதுமுதல் அவன் தூங்கெயில் எறிந்த தொடிதோட் செம்பியன் எனப் போற்றப்பட்டான். இப்புராண வரலாற்றுக் கதையை புறநானூற்றில் நப்பசலையாரின் பாடல் மூலமும் அறியலாம்.[23]

### 7.3.7 நாளங்காடிப் பூதக்கதை

முசுகுந்தன் என்னும் சோழ மன்னன், இந்திரனுக்கு உற்றுழி உதவச் சென்று, அமராபதியைக் காத்து நின்ற பொழுது, அசுரர்களின் இருட்கணை அவன் கண்ணை மறைத்த பொழுது, அவ்விடுக்கணை ஒரு பூதம் நீக்கியது பின்பு, அசுரர்களை வென்று, முசுகுந்தன் அமராவதியைக் காத்ததற்குப் பரிசாக அப்பூதத்தையே இந்திரன் அவனுக்கு நல்கினான். அதை அம்மன்னன் தன் தலைநகரான புகாரில் நாளங்காடியில் நிறுத்தி, அந்நகரின் காவல் தெய்வமாக்கி-னான். இக்கதை அடிகளால் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்-டுள்ளது.[24] ஆனால், அங்கு இக்கதை புகாரின் சிறப்பு பேசும் கிளைக் கதையாகப் பயின்று வந்துள்ளது.

இவ்வாறு சாத்தனார் வரலாற்றுக் கதைகளையும், புராண வரலாற்றுக் கதைகளையும் துணைக் கதைகளாகப் பயன்படுத்தியுள்ளார்.

## 7.4 நாட்டுப்புறத் துணைக்கதைகள்

சாத்தனார், மேகலையில் இரண்டே நாட்டுப்புறக் கதைகளை எடுத்தாண்டுள்ளார். அவ்விரு கதைகளும் பௌத்தக் கோட்பாடான 'காமமும் உயிர்க்கொலையும் கேடு விளைவிக்கும்' என்பதை விளக்க எழுந்தவைகளாகும்.

### 7.4.1 காருக மடந்தையின் கதை

ஆள்பவர் கலக்குற மயங்கிய ஒரு நாட்டில், பெண் ஒருத்தி, தன் கணவனாலும் கைவிடப்பட்டு, தான் ஈன்ற குழவியையும் கைவிட்டுத் தமியளாய் ஒரு ஊரில் சென்று வரைவின் மகளாய் வாழ்ந்தாள். அவளால் கைவிடப்பட்ட மகன், பார்ப்பனன் ஒருவனால், அவன் குழந்தை போல வளர்க்கப்பட்டான். அம் மைந்தன் ஒரு நாள் அவன் தாயி-

ருந்த ஊருக்கு வந்தவன், தன் தாய் என அறியாது, பொது மகள் என்று கருதி அவளுடன் கூடினான். பின்பு அவளைத் தன் தாய் என அறிந்து உயிர் நீத்தான். இக்கதை மற்றக் கதைகளைப்போல் அல்லாமல் ஒரு அறிவுரை ஊட்ட எடுத்தாளப்பட்டுள்ளது. காமத்தினால் விளையும் பெருங்கேட்டை இத்துணைக் கதை உணர்த்துகின்றது.

7 4.2 வேடன் கதை

மடமான் ஒன்று நீர் வேட்கையால் நீர் தேடி அலையும் போது, வேடன் ஒருவன் அதன்மேல் அம்புவிட, அம்மான் தன் இனத்தை விளித்து அழைக்கும் பெருங்குரல் கேட்டு வேடன் அதன் அருகே ஓடிச்சென்று காண, அம்மான் துடித்துக் கண்ணில் நீர் மல்க உயிர்விடுவதைப் பார்க்கிறான். அவ்வாயிலா ஜீவனின் மரணம், அவ்வேடனை வருத்த, அவன் தன் மீதே அம்பைப் பாய்ச்சிக் கொண்டு இறந்து விடுகிறான். இக்கதையை,

நீர்நசை வேட்கையி னெடுங்கட முழலும்
சூன்முதிர் மடமான் வயிறுகிழித் தோடக்
கானவேட்டுவன் கடுங்கணை துரப்ப
மான்மறி விழுந்தது கண்டு மனமயங்கிப்
பயிர்க்குரல் கேட்டதன் பான்மைய ளாகி
உயிர்ப்பொடு செங்க ணுகுத்த நீர்கண்டு
ஓட்டி யெத்தோ னோருயிர் துறந்ததும்[25]

என்று சாத்தனார் படைத்துக்காட்டியுள்ளார். இக்கதை உயிர்க் கொலையால் வரும் துன்பத்தை எடுத்துரைக்கின்றது.

இவ்விரு நாட்டுப்புறக் கதைகளையும் சற்று விரிவாகச் சாத்தனார் படைத்துள்ளார். பௌத்தக் கொள்கையை விளக்குவதற்காக எடுத்தாளப்பட்ட இவ்விரு துணைக்கதைகளையும் வாசகர்கள் தெளிவுற அறிதல் வேண்டும் என்ற

நோக்குடன் சற்று விரிவாகக் கூறியிருக்கலாம். அல்லது, இக்கதைகள் வட்டார வழக்குக் கதைகளாக இருந்திருக்கவேண்டும். ஆதலால், யாவரும் அறியும் வண்ணம் சற்றுத் தெளிவாக எடுத்துரைக்கப் பட்டிருக்கலாம்.

7.5 இவ்வாறு, சாத்தனார் மூவகைக் கதைகளையும் தன் காப்பியத்துள் துணைக்கதைகளாக எடுத்தாண்டுள்ளார். இவற்றில் ஒன்பது துணைக்கதைகள் சிலம்பிலும் துணைக்கதைகளாக எடுத்தாளப்பட்டவைகளே. ஒரு துணைக்கதை சிலம்பில் கிளைக்கதையாகவும், மற்றொரு துணைக்கதை பெருங்கதையின் மையக்கதை நிகழ்ச்சியாகவும் அமைந்துள்ளன. அகலிகை கதை கம்பராமாயணத்தில் கிளைக் கதையாகவும், பரசுராமன் பற்றிய துணைக்கதை (கம்பராமயணத்தில்) துணைக்கதையாகவும் அமைந்துள்ளன. மணிமேகலையில் இரண்டு நாட்டுப்புறக்கதைகளும் ஒரு வரலாற்றுத் துணைக்கதையும் பௌத்தம் பேசுவதற்கென்றே சாத்தனாரால் எடுத்தாளப்பட்டிருக்கின்றன. மேகலையில், எடுத்துக் காட்டாகவும், உவமைகளாகவும் வரும் துணைக்கதைகளே அதிகம் எனலாம். சாத்தனார் மகாபாரதம் கதைநிகழ்ச்சிகளையும் துணைக்கதைகளாக அமைத்துள்ளார். சிலப்பதிகாரத்தைக் காட்டிலும் பிற இலக்கியக் கதைகள் மேகலையில் அதிகம் துணைக்கதைகளாக இடம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

## அடிக்குறிப்புக்கள்

1. மணிமேகலை., 3:30—34
2. கம்பராமாயணம்., சம்பா—54-5
3. மணிமேகலை சோமசுந்தரனார் உரையில் இக்கருத்து கூறப்பட்டுள்ளது. பக்-203

4. சிலப்பதிகாரம்., 6:56-57
5. மணிமேகலை, 3:122 125
6. சிலப்பதிகாரம்., 6:60 61
7. மணிமேகலை சோமசுந்தரனார் உரையில் இக்கருத்தைக் காண்க. பக்-203
8. மணிமேகலை, 5:13 14
9. சிலப்பதிகாரம், 24:பாட்டுமடை 9
10. மணிமேகலை., 12:72-76
11. மேலது., 15:51-52
12. மேலது., 17:9-12
13 மேலது, 18:92-97
14. மேலது., 19 65-66
15. மேலது., 22:24வது வரி
16. கம்பராமாயணம், பரசுராம-22-13
17. சிலப்பதிகாரம்., 3:1-4
18. மேலது., 5 89-98
19. பழமொழி நானூறு, பாடல் 21
20. சிலப்பதிகாரம்., 20:33-36
23:38வது வரி
29:அம்மானை வரி 17
21. மணிமேகலை:15:61-66
22. சிலப்பதிகாரம்., 29: அம்மானை வரி 16
23. புறநானூறு., பாடல் 39
24. சிலப்பதிகாரம், 5:8-13
25. மணிமேகலை, 9, 23:112-119

அட்டவணையின் மூலம் அறிய வரும் செய்திகள்

1. மணிமேகலையில், சிலப்பதிகாரத்தைப் போல் ஒரு கதைக்குள் பல துணைக்கதைகள் பயின்று வருவதில்லை. சாத்தனார், துணைக்கதைகளைப் பரவலாகவே காப்பியம் முழுவதும் எடுத்தாண்டுள்ளார்.

2. மணிமேகலையிலும் சிலப்பதிகாரத்தைப் போல் எடுத்துக்காட்டுக் கதைகளே அதிகம் பயின்று வந்துள்ளன. 32 துணைக்கதைகளில் 13 கதைகள் எடுத்துக் காட்டுக்களாகவும், 9 கதைகள் உவமைகளாகவும் அமைந்துள்ளன. இதன்மூலம் அடிகளை விட, சாத்தனாருக்குத் துணைக்கதைகளை உவமைகளாகப் படைப்பதில் மிகுந்த விருப்பம் இருந்திருக்க வேண்டும் என்பது தெரிகிறது. இதை, அவர் தகுந்த இடத்தில், தகுந்தசான்றாக உவமைகளை எடுத்துக்காட்டியிருப்பதிலிருந்தும் அறிந்துகொள்ள முடிகிறது.

3. சாத்தனார், ஒரு துணைக்கதையைக்கூடப் பரவு மொழிக் கதையாகப் படைக்கவில்லை என்பதையும் இவ்வட்டவணை மூலம் அறியலாம்.

# 8

# இரட்டைக் காப்பியத் துணைக்கதைகள் ஒப்பீடு

8.0 துணைக்கதைகளைக் காப்பிய உத்தியாக எல்லாக் காப்பியப் புலவர்களும் பயன்படுத்தியுள்ளார். இளங்கோவடிகளும், சாத்தனாரும் இதற்கு விதிவிலக்கல்லர். இரட்டைக் காப்பியப் புலவர்களான இவ்விருவரும் இவ்வுத்தியை எடுத்தாள்வதில் சில இடங்களில் ஒன்றுபட்டும், பல இடங்களில் வேறுபட்டும் திகழ்கின்றனர். புலவர்களின் தனித்துவமும், புலமை நுட்பமும், காப்பியப் பாடுபொருளும் இதற்குக் காரணமாக அமைந்துள்ளன. துணைக்கதைகள் காப்பியத்துள் பயின்றுவரும்போது, படிப்பவர்களுக்கு அக்கதைகள் வலிந்து திணிக்கப்பெற்ற உணர்வைத் தரக்கூடாது. இயல்பாகக் காப்பியத்துடன் ஒன்றி நிற்குமாறு எடுத்துரைக்கப்பட வேண்டும். அடிகளும் சாத்தனாரும் துணைக்கதைப் படைப்பில் இம்முறையை நன்கு பேணியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

8.1 சிலப்பதிகாரம் மணிமேகலை இரண்டிலுமே துணைக்கதைகள் பயின்றுவரும் முறை ஒன்று போலவே அமைந்துள்ளது. துணைக்கதைகள் இக்காப்பியங்களில் உவமைகளாக, வர்ணனைகளாக, எடுத்துக்காட்டுகளாக-பின்னணி விளக்கங்களாக என்று பல பயன்பாட்டு நிலைகளில் எடுத்தாளப்பட்டுள்ளன. ஆனால், சிலப்பதிகாரத்தில் துணைக்கதைகள் பரவு மொழியாகவும் பயின்று வந்துள்

ன. மணிமேகலையில் பரவு மொழித் துணைக்கதைகளைக் காண முடியாது.

8.2 சிலம்பு, மேகலை இரண்டிலும் புராணக்கதைகள், வரலாற்றுக்கதைகள், நாட்டுப்புறக்கதைகள் என்ற மூவகைக் கதைகள் பயின்று வந்துள்ளன. இரண்டு காப்பியங்களிலும் புராணக் கதைகள் அதிகமாகவும் நாட்டுப்புறக் கதைகள் குறைவாகவும் பயின்று வந்துள்ளன.

8.3 சிலப்பதிகாரத்தில், அடிகள், 61 துணைக்கதைகளை எடுத்தாண்டுள்ளார். சாத்தனார் சிலப்பதிகாரத்துணைக்கதைகளில் பகுதியாக 32 துணைக்கதைகளை எடுத்தாண்டுள்ளார்.

8.4 சிலப்பதிகாரத்தில் பயின்று வந்த நாளங்காடிப் பூதக்கதை பிரத்தியும்நன் பேடி வடிவம் கொண்டது, திருமகள் கொல்லிப்பாவை உருவெடுத்தது, அகத்தியர் சாபம், தூங்கெயில் எறிந்த தொடிதோட் செம்பியன் கதை, கரிகால் வளவனின் வடதிசைப் போர் போன்ற கதைகள் மணிமேகலையிலும் பயின்று வந்துள்ளன. ஆனால் இககதைகள் பயின்று வரும் முறை சிலப்பதிகாரத்திலிருந்து மாறுபட்டு இருக்கிறது.

8.5 சிலப்பதிகாரத்தில் சிபி மன்னர் கதை, மனு கதை, திருப்பாற்கடல் கடைந்த வரலாறு, கண்ணன் குருத்த மரத்தை ஒடித்தது, அவன் பாண்டவர்களுக்காகத் தூது நடந்தது, வாமன அவதாரம் போன்ற கதைகள் திரும்பத் திரும்ப எடுத்தாளப்படுகின்றன. மணிமேகலையில் கவேரன் தவம் இருந்த வரலாறு ஒன்றுதான் திரும்ப எடுத்தாளப் பட்டுள்ளது.

8.6 சிலப்பதிகாரத்தில் புராணக் கதைகள் ஒன்றுக் கொன்று தொடர்புடையனவாய் எடுத்தாளப்பட்டுள்ளன. அதனால், அவற்றை வகைப்படுத்திக்காண முடிந்தது. மணி-

மேகலையில் புராணத் துணைக்கதைகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாய் எடுத்துக் காட்டப்படவில்லை. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாய அமைவனவாய்ச் சாத்தனார் கவனித்துப் படைத்துள்ளார் என்று தோன்றுகிறது.

8.7 சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவையிலும் கடலாடு காதையிலும் பல துணைக்கதைகள் இடம் பெற்றுள்ளன. மற்றக் காதைகளில் இந்த அளவு துணைக்கதைகள் பயின்றுவரவில்லை. இப்படி, ஒரு காதையிலேயே அதிகக் துணைககதைகளைப் படைத்துக் காட்டும் போக்கு சாத்தனாரிடம் இல்லை. இவர், காப்பியம் முழுவதும் பரவலாகத் துணைக்கதைகளை எடுத்தாண்டுள்ளார்.

8.8 சாத்தனார் மணிமேகலையில் பௌத்தமதக்கொள்கையை விளக்க இரண்டு துணைக்கதைகளை எடுத்தாண்டுள்ளார். தவிர, மற்றுமொரு கதையைப் பௌத்த பீடிகையைப் பற்றியதாக அமைத்துள்ளார். மேலும், பௌத்த நூல்கள் கூறும் இரண்டு புராணக்கதைகளையும் எடுத்தாண்டுள்ளார் சாத்தனார். இப்படி ஒரு மதத்தை உயர்த்திப் பேச வேண்டும் என்ற நோக்கில் துணைக் கதைகளை எடுத்தாளும் போக்கை இளங்கோ அடிகளிடம் காண முடியாது.

8.9 மணிமேகலையில் சாத்தனார் உவமைகளாகத் துணைக்கதைகளைச் சற்று அதிகம் படைத்துள்ளார். சிலம்பில் 61 துணைக்கதைகளுக்கு 3 துணைக்கதைகளையே உவமை வாயிலாகப்படைத்துள்ளார் அடிகள். சாத்தனார் 82 துணைக்கதைகளில் 9 கதைகளை உவமைகளாகப் படைத்துள்ளார். காப்பிய உவமைகளாகத் துணைக்கதைகளை அமைக்கும் உத்தி காப்பியச் சுவையைப் பெருக்குகிறது. அதை உணர்ந்த சாத்தனார் காப்பிய உவமைகளை அடிகளைக்காட்டிலும் அதிகம் படைத்துக்காட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

**8.10** சிலப்பதிகாரத்தில், ஏழு நாட்டுப்புறக் கதைகளே துணைக்கதைகளாகப் பயின்றுவந்துள்ளன. மணிமேகலையில் மிகக்குறைவாக இரண்டே இரண்டு நாட்டுப்புறக கதைகள்தான் சாத்தனாரால் எடுத்தாளப்பட்டுள்ளன. இப்படி நாட்டுப்புறக் கதைகளைக் குறைவாகக் காப்பியப் புலவர்கள் எடுத்தாள்வதற்குக் காரணம் உண்டு. புராணக்கதைகளைப் போல் நாட்டுப்புறக் கதைகள் நாடு முழுவதும் அறிந்த கதைகளாக இருப்பது அபூர்வம். நாட்டுப்புறக் கதைகள் பெரும்பாலும் வட்டார வழக்காகவே இருக்க முடியும். நாட்டில்,எல்லா மக்களும் அறிந்த நாட்டுப்புறக் கதைகள் மிகக் குறைவாகவே இருக்க முடியும் துணைக்கதைகளில், கதை,படிப்பவர் ஊக்கத்திற்கு விடப்பட்டுள்ளதால், காப்பியப்புலவர்கள் நாடறிந்த கதைகளையே எடுத்தாள முடியும். அதனால், இரு காப்பியப் புலவர்களும் மிகக் குறைவான நாட்டுப்புறக் கதைகளையே எடுத்தாண்டுள்ளனர். எடுத்தாண்ட துணைக்கதைகளில் அடிகள் ஒரு கதையையும், சாத்தனார் இரண்டு கதைகளையுமே சற்று விரிவாகக் கதைச் சூழல் அறியும்படி படைத்துள்ளனர். காரணம், இவை நாட்டுமக்கள் எல்லோராலும் அறியப்படாத வட்டார வழக்குக் கதைகளாக இருந்திருக்க வேண்டும் என்பதே. இதனால் காப்பியப் புலவர்கள் பெரும்பாலும் நாடறிந்த கதைகளையே துணைக்கதைகளாக எடுத்தாண்டுள்ளனர் என்பது தெரிய வருகிறது.

8.11 சிலப்பதிகாரத்தில், பொற்கொல்லன் ஒரு நிகழ்ச்சி சொல்ல, அது கேட்ட காவலன் அது போன்ற நிகழ்ச்சி ஒன்றை உடன் சொல்வதாக ஒரு துணைக்கதை பயின்று வந்துள்ளது. இது போன்ற கதையை மணிமேகலையில் காண முடியாது.

*8.12* சிலப்பதிகாரம் மணிமேகலை இரண்டிலும் பின்னால் எழுந்த பிற காப்பியக் கதைகள் துணைக்கதைகளாக

அமைந்துள்ளன. இவை, வடமொழிக் காப்பியங்களையும், மக்கள் வழக்குகளையும் அடியொற்றி இரு காப்பியப் புலவர்களாலும் எடுத்தாளப்பட்டிருக்க வேண்டும். சிலம்பில் இராமாயண பாரதக் கதைகளும், மேகலையில் இராமாயண பாரதக் கதைகளுடன் பெருங்கதை என்ற காப்பியத்தின் கதையும் இவ்வாறு எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

8.13 சிலப்பதிகாரத்தில் ஓரே கதை துணைக்கதையாகவும் கிளைக்கதையாகவும் பயின்று வந்துள்ளது. மணிமேகலையில் சாத்தனார் இப்படி ஓரே கதையை, துணைக் கதையாகவும் கிளைக்கதையாகவும் எடுத்தாளவில்லை என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இவ்வாறு, இரு காப்பியப் புலவர்களிடையிலும் துணைக் கதைகளைப் படைப்பதில் ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் காணமுடிகிறது. சிலப்பதிகாரத்தில் துணைக்கதைகள் அதிகம் பயின்று வந்தாலும், அது காப்பியச் சுவையைப் பாதிக்கவில்லை மாறாக, காப்பியச் சுவையைக் கூட்டியுள்ளது. இதிலிருந்து காப்பியத்தில் துணைக்கதைகளின் அதிகரிப்பு காப்பியத்தை எவ்விதத்திலும் பாதிக்காது என்பதை அறியலாம். கிளைக்கதைகளின் பயன்பாடு இதற்கு நேர்மாறானது அடிகள் கிளைக்கதைகளை அளவுடன் எடுத்தாண்டு காப்பியத்தை ஒருமைப்படுத்தியதுடன் சுவைப்படுத்தியும் உள்ளார் சாத்தனார், கிளைக்கதைகளை அளவுடன் எடுத்தாளாததினால் காப்பிய ஒருமையைச் சிதைத்ததுடன் காப்பியச் சுவையும் குன்றியது. இதனால், மணிமேகலையில் துணைக்கதைகள் தரும் சுவையைக் குறிப்பாக காப்பிய உவமைகள் தரும் சுவையை அனுபவிக்க முடியாமல் போய் விடுகிறது.

# 9

## முடிவுரை

இரட்டைக் காப்பியங்களான சிலம்பும் மேகலையும் தம்முள் சொல், அடி, நிகழ்ச்சி, பாத்திர ஒற்றுமைகளையும், காப்பியப் பாடு பொருள் தொடர்புங் கொண்டிருப்பதுடன், கிளைக்கதைகள், துணைக்கதைகளை எடுத்தாள்வதிலும் தம்முள் தொடர்பும், ஒற்றுமைகளும் கொண்டு திகழ்கின்றன என்பதை இதுவரை கண்டோம். இக்கிளைக்கதைகள், துணைக்கதைகளின் தொடர்போ அல்லது ஒற்றுமைகளோ இவ்விரு காப்பியங்களில் எது முந்தியது என்ற ஆய்விற்குத் துணை நிற்குமா என்றும் சிந்திக்க வாய்ப்பு ஏற்படுகிறது.

பொதுவாக, கதை நிகழ்ச்சிகளைக் கொண்டு பார்த்தால் சிலப்பதிகாரம் முன்னால் எழுதப்பட்டதாகத் தோன்றும். மேகலை பின்னால் எழுந்ததாகத் தோன்றும். கிளைக்கதைகள், துணைக்கதைகளைப் பொறுத்தவரை, துணைக்கதையின் பங்கு காப்பியத்தில் மிகக்குறைவு ஆதலால் அவை இவ்வகை ஆராய்ச்சிக்குப் பயன்படா. இனி, கிளைக்கதைகளைக் கொண்டு இவ்வகைக் கருத்தை ஓரளவு வலியுறுத்த முடிவதை இங்குக் காணலாம்.

சிலப்பதிகாரத்தில், வரந்தருங் காதையில் எடுத்தாளப்படும் கிளைக்கதை மணிமேகலையின் துறவு பற்றியது. இக்கதையில் மேகலை,

மையீ ரோதி வகைபெறு வனப்பின்
ஐவகை வகுக்கும் பருவங் கொண்டது

பேசப்பட்டு, பின்பு மாதவி சித்ராபதியின் கேள்வியால், தன் மகளை,

> கோதைத் தாமங் குழலோடு களைந்து
> போதித் தானம் புரித்தறம் படுத்தனள்[2]

என்ற செய்தியும், இதனால் சோழ அரசன் முதல் குடிமக்கள் வரை வருத்தம் எய்தினர் என்றும் கூறப்பட்டுள்ளன. இக்காப்பியம், மணிமேகலைக் காப்பியத்திற்குப் பின்னால் எழுந்த காப்பியமாக இருந்தால், அடிகள் இதை ஒரு கிளைக்கதையாக மட்டும் படைத்துக் காட்டியிருக்கமாட்டார். காப்பியத்தின் பின்பகுதியை மணிமேகலையைப் பற்றியதாகவே அமைத்துக் காட்டியிருக்கலாம் மேகலையின் துறவைச் சுட்டிய அடிகள், மேகலை அமுதசுரபி பெற்ற பேற்றையும், அதன் மூலம் அறம் புரிந்த தொண்டையும் சமயவாதிகளுடன் போரிட்டு, கருத்தால் அவர்களை வென்று சிறந்த ஒரு பௌத்த துறவியாக உருவானதையும் அடிகள் குறிப்பிடாமல் இருந்திருக்கமாட்டார்.

அடுத்ததாக, மேகலையில், மணிமேகலை கண்ணகியைக் காணச் சென்ற நிகழ்ச்சியும், கண்ணகி, மேகலை தன் நிலைக்குக் காரணம் கேட்டு அரற்றியது கண்டு, கோவலன் முற்பிறப்பில் செய்த கொலையையும், அதன் பயன் மறுபிறவியில் உறுத்து வந்து ஊட்டியதையும் சுட்டுகிறாள். இந்நிகழ்ச்சிகள் யாவும், மேகலை கண்ணகியின் மேல் கொண்ட பாசத்தையும் தெள்ளிதின் எடுத்துக்காட்டுகிறது. இப்படி, மேகலை கண்ணகியைக் காண வஞ்சி சென்ற வரலாறும் சிலப்பதிகாரத்தில் சுட்டப்படவில்லை. தவிர, கிளைக்கதைகளுக்கு அப்பாற்பட்டுப் பிறநிகழ்ச்சிகளையும் எடுத்துக் காட்டலாம் மாசாத்துவானின் துறவை மாடலன் மூலம் எடுத்துக்காட்டிய அடிகள், அவர் வஞ்சி வந்து தங்கியதை ஏன் எடுத்துக்காட்டவில்லை? தவிர, புகாரின் சிறப்புப்

பேசியவர், அது கடலால் உண்ணப்பட்டதை ஏன் பேசவில்லை? இவ்வாறு, இந்நிகழ்ச்சிகள் படைத்துக்காட்டப்படாத போக்கிலிருந்து, சிலப்பதிகாரம் மேகலைக்கு முன்பே படைக்கப்பட்டிருக்க வேண்டும என்று தெரிகிறது.

முடிவாக, சிலப்பதிகாரத்தில் மேகலை துறவு பூண்ட வரலாறு பேசும் கிளைக்கதையைக் கொண்டு, அடிகள் சிலம்பை இயற்றிய காலம், மாதவி துறவறம் படுத்தப்பட்ட காலமாக இருக்கவேண்டும் என்று கருதலாம். அதாவது மற்ற அனுபவங்களையும், பேற்றையும் மேகலை பெறுவதற்கு முன்பே சிலம்பு எழுதப்பட்டிருக்க வேண்டும். மணிமேகலை காப்பியம், மேகலை, மன்னன் மகனால் மனச்சலனமுற்று பின்பு மனத்தெளிவு பெற்று, ஒருமையுடன் துறவு வாழ்க்கைப்பேணி, அமுதசுரபி பெற்று, அதன் மூலம் பசியைத் தீர்த்து அறப்பணி புரிந்த நிலைக்கும், சமயவாதிகளுடன் மேகலை சொற் போர் புரிந்து வென்று, பக்குவப்பட்ட சிறந்த துறவியாக உருவான நிலைக்கும் பின்னால் எழுதப்பட்ட காப்பியமாக இருக்க வேண்டும் என்பது தெரிய வருகிறது.

இவ்வாறு, கிளைக்கதைகள் காப்பியங்கள் பற்றிய முழுமையான ஆராய்ச்சிக்கும் பெருந்துணைப் புரிகின்றன.

## அடிக்குறிப்புக்கள்

1. சிலப்பதிகாரம்., 30:10-11
2. மேலது., 30:27-28.

❀ ❀ ❀

## அகர நிரல்

குறிப்பு: இந்நூலில் பயின்று வந்துள்ள ஆசிரியர்களின் பெயர்களையும், கிளைக்கதைகளின் பெயர்களையும், காப்பியம் தொடர்பான கலைச் சொற்களையும் அகர வரிசைப்படுத்தித் தந்துள்ளோம். எண், பக்க எண்ணைக் குறிக்கும்.


அகலிகை கதை 14, 16, 106, 150
அடியார்க்கு நல்லார் 2
அரக்கர் கதை 7, 111
அரண்மனையில் திருட்டு பற்றிய கதை 13, 18, 21, 26
பொற்கொல்லன் கூறும் கதை 34, 42, 47, 105
அரிஸ்டாடில் 2, 3
ஆதிரை கதை 52, 65, 78, 87
ஆபர் கிராம்பி 3
ஆபுத்திரன் கதை 52, 62, 63, 64, 65, 78, 80, 81, 84, 86, 92, 99, 105
இரணியன் கதை 17
இராமகிருஷ்ணன், எஸ் 5, 6, 10, 22
இளங்கோ அரசு துறந்த வரலாறு 26, 41, 48
உதயகுமாரன் முற்பிறப்புக் கதை 52, 69, 84, 87, 94, 104
உபகதை 5, 19
உபாக்கியானம் 4
ஊர்பெருமை பேசும் கதை 25, 102
ஊர்வசி சாபவரலாறு 21, 26, 27, 42, 43, 46
ஊன்று கிளைக்கதை 18 27, 29, 33, 37, 41, 42,

46, 47, 48, 58, 62, 67, 70, 71, 73, 75, 76, 81, 85, 86, 87, 88, 89, 102
எடுத்துரைக்கும் முறை 116
ஒட்டிய கிளைக் கதை 18, 29, 32, 38, 39, 40, 42, 46, 47, 48, 54, 55, 59, 61, 66, 69, 70, 74, 77, 81, 85, 86, 87, 89, 102
ஒன்றாத கதை 3
ஒன்றிய கதை 3, 18, 35, 42, 47, 81, 86, 103
கட்டமைப்பு 3, 14
கண்ணகி கதை 16, 26, 38, 48
கதாநாயகன் 5
கதாநாயகி 5
கதைப்பின்னல் 4
கதை வடிவம் 1, 8, 9
சுந்திற்பாவையின் வரலாறு 52, 70, 84, 88
கர்ணபரம்பரைக் கதை 7
கற்பனைப் பாத்திரங்கள் 2, 11
காப்பிய இணை 23, 65
காப்பிய இயக்கம் 118
காப்பிய உறுப்பு 2, 3, 4, 12, 107, 115
காப்பிய உத்தி 115, 118, 153
காப்பிய உவமை 7, 9, 10, 112, 155, 157
காப்பியக் கட்டுக்கோப்பு 43, 60, 73, 78
காப்பியத்துள் காப்பியம் 62
காப்பியத் தலைவன் 31
காப்பியத்தொடக்கம் 1, 77
காப்பிய முடிவு 1
காப்பிய முரண் 23
குசேலோபாக்கியானம் 4
குரங்குக்கை வானவன் கதை 13, 16, 19, 20, 21, 26, 32, 46
கூற்று முறை 2, 8, 11, 14, 110
கோவலன் கண்ணகி தாய்மார்களின் மறுபிறப்புக் கதை 26, 40, 48
கோவலன் கண்ணகி முற்பிறப்புக் கதை 12, 18, 22, 26, 37, 47, 53, 73, 80, 84, 89, 95, 98, 102, 104
சக்கரவாளக் கோட்டம் எழுந்த கதை 17, 51, 56, 78, 84, 85, 91, 105
சங்கர்லால், கே. பி., 5, 6, 21, 22
சாதுவன் கதை 52, 66, 84,

87, 93, 101
சாபவரலாற்றுக் கதை 7, 67, 111
சிறுபாத்திரங்கள் 45, 24, 49, 82.
சுதமதி கதை,பிற்பகுதி 51, 54, 80, 84, 85,90,105
சுதமதி கதை,முற்பகுதி 13, 51, 54, 85
சுப்பிரமணியம், ச வே., 5, 6. 10. 21, 22, 23, 84
சுயம்பிரம்பை கதை 14
செண்பகம், மா., 5,6, 10, 20, 21, 22, 119
செறிவு கிளைக்கதை 20
சோமசுந்தரனார் 134, 150, 151
டியுஸ்டே லாப்சாங்ராம்பா 67, 83
தலைமை மாந்தர் 1,12,16, 20,24,37,39,44,49.60, 70, 82, 121
தனிக்கதை 6, 10, 19
துணைப் பாத்திரத்தின் கதை 25
துணை மாந்தர் 6, 10, 13, 15,16,20,24,29,30,44, 45, 46, 49, 61, 68, 69 80, 82
தெய்வீகப் பாத்திரங்கள் 79
தெய்வப் பாத்திரக்கூற்று 79
தேவந்தி கதை 13, 15,16 19,26,28,29,42,43, 46, 48
தேவர் கதை 7, 111
நளோபாக்கியானம் 4
நாட்டுப்புறக் கதைகள் 25, 107,109,111,120,128, 130,136,148,149,154, 156
நாளங்காடிப்பூதக்கதை 13, 17,21,26,27,42,46,101
நிகழ்கால ஓட்டம் 1
நெகிழ்வுக் கிளைக்கதை 20
ப்ளேட்டோ 3
பஞ்சதந்திரக் கதை 7, 101
பரதன் பற்றிய கிளைக் கதை 6
பராசுரன் கதை 22,26,35, 36, 47
பழங்கதை 12
பழம் பிறப்புக் கதை 7
பாண்டுரங்கன், அ., 21,23
பாத்திரக் கூற்று 14, 79
பாத்திர நினைவோட்டம் 14
பாவிகம் 15, 17, 37, 117
பிரதிநாயகன் 5

பீலிவளை-நெடுமுடிக்கிள்ளி
வரலாறு53,72,84,88,105
புத்தஜாதகக் கதை 7, 56,
80, 101
புராணக் கதை 7, 25, 42,
45, 102, 107, 111, 114,
120,121,122,125,127,
128,136,137,144, 145,
154, 155, 156
புராண வரலாற்றுக் கதை
7, 42, 45,102,111,128,
130, 147, 148
புலவர் கூற்று 14
பௌரா, சி. எம்., 3
பொற்கைப்பாண்டியன்
கதை 19, 22, 26, 35,47
மங்களவதி கேபிரியல் 82
மணிசேகரன், கோ.வி., 72
மணிமேகலா தெய்வம்
கோவலன் பரம்பரைக்கு
உதவியவரலாறு53,76,89
மணிமேகலை துறவுபூண்ட
வரலாறு 26,39,48,158
மணிமேகலையின் முற்
பிறப்புக் கதை I 51,58,
84, 85, 91, 92, 104
மணிமேகலையின் முற்
பிறப்புக்கதை-II 56,59,86
மருதியின் கதை52,70,78,
80, 84, 88
மாடலன் கூறும் கோவலன்
பற்றிய மூன்றுக் கிளைக்
கதைகள் 12, 18, 26, 30,
46, 105
மாதவி சுதமதி ஆகிய இரு-
வரின் முற்பிறப்புக் கதை
51, 60, 84, 86, 92, 105
முற்பிறப்பு கதை 25
முன்னோன்கோவலன்கதை
53,75,80,89,95,100
முனிவர் கதை 7, 111
மீனாட்சிசுந்தரம், கா., 23
மீனாட்சி சுந்தரனார் தெ.
பொ., 5, 22
லூகாஸ், எப். எல். 3
வரதராசனார், மு., 5
வரலாற்றுக் கதை 7,25,73,
102,111,120,128,136,
145,146,147,148,154
விசாகை தருமதத்தன்
கதை 53,71,78,80,84,
88, 94, 105
விசுவாமித்திரன் கதை 13,
52, 61, 84, 86, 92
விவரிப்பு போக்கு 2
விளக்க முறை 1,11,116
வையாபுரி பிள்ளை, எஸ்.,
5, 21
ஸ்காட், ஏ, எப்., 21
ஹட்சன் 107

## துணை நூற்பட்டியல்

1. இராசமாணிக்கம், ம., [உ. ஆ], பழமொழி நானூறு, சென்னை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்-தாந்த நூற்பதிப்புக் கழகம், 1967.

2. இராமகிருஷ்ணன், எஸ்., கம்பனும் மில்ட்டனும் — ஒரு புதிய பார்வை, மதுரை, மீனாட்சி புத்தக நிலையம், 1978.

3. சங்கர்லால், கே. பி., சிலம்பில் திறனாய்வு, மதுரை, I.A.S. வெளியீடு, 1973.

4. சாமிநாதையர், உ. வே., [உ.ஆ], புறநானூறு, சென்-னை, ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு, 1956.

5. சாமிநாதையர், உ. வே., [ப.ஆ], கம்பராமாயணம் - பாலகாண்டம், சென்னை, உ. வே. சாமிநாதையர் நூல் நிலைய வெளியீடு, 1967.

6. சுப்பிரமணியன், ச.வே., சிலம்பும் சிந்தாமணியும் ஒப்பாய்வு, சென்னை, தமிழ்ப் புத்தகாலயம், 1977.

7. சுப்பிரமணியன், ச. வே., காப்பியப் புனைதிறன், சென்னை, தமிழ்ப் பதிப்பகம், 1979.

8. செண்பகம், மா., தமிழ்க்காப்பியங்கள், மதுரை, சரபோஜி, 1977.

9. சோமசுந்தரனார், பொ.வே., [உ ஆ], குறுந்தொகை, சென்னை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1965.

10. சோமசுந்தரனார், பொ. வே., [உ.ஆ], மணிமேகலை, சென்னை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1971.

11. சோமசுந்தரனார், பொ.வே., [உ.ஆ], சிலப்பதிகாரம், சென்னை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1973.

12. டியுஸ்டே லாப்சாங் ராம்பா, 'காரணம்காணா அதிசயங்கள்', மஞ்சரி, ஜனவரி 1979, பக்; 58-74.

13. பாண்டுரங்கன், அ., கம்பராமாயணமும் காப்பியக்கொள்கையும், (unpublished Ph.D. Thesis), மதுரை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1979.

14. மங்களவதி கேபிரியல், மணிமேகலையில் காப்பியக் கூறுகள், (unpublished M. Phil Thesis), மதுரை, மதுரை காராசர் பல்கலைக்கழகம், 1977 - 78.

15. மீனாட்சி சுந்தரம்,கா., சிலம்பில் துணைப்பாத்திரங்கள், பழனி, இளங்கோ வெளியீடு, 1973.

16. மீனாட்சி சுந்தரனார், தெ.பொ., குடிமக்கள் காப்பியம், மதுரை, மீனாட்சி புத்தக நிலையம், 1975.

17. வேங்கடசாமி நாட்டார், ந. மு., வேங்கடாசலம் பிள்ளை, R., [உ. ஆ], அகநானூறு, சென்னை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம். 1964.

18 வையாபுரிப்பிள்ளை, எஸ்., தமிழ் இலக்கிய சரிதத்தில் காவியகாலம். சென்னை, தமிழ்ப்புத்தகாலயம்.

19. Scott, A. F., *Current Literary Terms, A Concise Dictionary*, London, Macmillan, 1967.

20. *The Random House Dictionary of the English Language*, The unabridged Edition, New York, Random House, 1967.

21. *The Shorter Oxford English Dictionary on Historical Principles*, Oxford, At the clarendon Press, 1956.

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 13 | 16 | அமைந்துள்ளது[23] | அமைந்துள்ளது.[28] |
| 16 | 1 | கம்பராமயணத்தில் | கம்பராமாயணத்தில் |
| 21 | 17 | கம்பராமாயணம் | கம்பராமாயணமும் |
| 21 | 27 | ஊழ்வினை பற்றிய | ஊழ்வினைப் பற்றிய |
| 22 | 21 | 2.4 | 2.4.9 |
| 22 | 22 | 2.4 | 2.4.7 |
| 22 | 24 | 3.4 | 3.4.7 |
| 22 | 26 | 2.4 | 2.4.3 |
| 22 | 28 | 3.1.3-1,1.2 | 3.4.1,3.4.2 |
| 23 | 2 | 3.1 | 3.4.1 |
| 26 | 15 | முற்பிறப்பு | மறுபிறப்பு |
| 30 | 15 | இளைஞரின் | கிளைஞரின் |
| 34 | 14 | இளங்கோ, வேந்தனின் | இளங்கோ வேந்த-னின் |
| 34 | 18 | எடுத்துரைக்கின்-றான், பொற்கொல்லன் | எடுத்துரைக்கின்-றான் பொற்கொல்லன் |
| 40 | 14 | முற்பிறப்பு | மறுபிறப்பு |
| 62 | 25 | விட்டு, இறந்தது | விட்டு இறந்தது |
| 64 | 28 | ஆபுத்திரனோடு | ஆபுத்திரனாடு |
| 72 | 28 | தீபகச் சாந்தி | தீவக சாந்தி |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 75 | 1 | கதையாகவேக் | கதையாகவே |
| 84 | 12 | விசாகன் தருமதத்தன் | விசாகை- தரும- தத்தன் |
| 84 | 13 | மறுபிறப்பு | முற்பிறப்பு |
| 108 | 5 | கயு | கரு |
| 132 | 13 | காணலாம்[3] | காணலாம்[13] |
| 138 | 9 | விளிகிலாதான் | விளிகிலாதான்[2] |
| 143 | 13 | மாவள மன்னன் | மாவலி மன்னன் |
| 146 | 4 | உணரமுடிவு | உரைமுடிவு. |
| 151 | 17 | பாடல் 21 | பாடல் 6 |

அட்டவணைப் பகுதி:

சிலப்பதிகாரத்தில் பயின்று வரும் கிளைக்கதைகள்:

| எண் | பிழை | திருத்தம் |
|---|---|---|
| | 6 \| 7 | 6 \| 7 |
| 46 | — \| + | + \| — |

மணிமேகலையில் பயின்று வரும் கிளைக்கதைகள்:

| எண் | பிழை | திருத்தம் |
|---|---|---|
| 29 | கானாக மடந்தை | கானக மடந்தை |

## சிலப்பதிகாரத்தில் பயின்றுவரும் துணைக் கதைகள்

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | I கதை வகைகள் | | | | II பயின்று வரும் விதம் | | | |
| எண் | கதைப் பெயர் | பயின்று வரும் காதை | பாடலடிகள் | புராணக் கதை | வரலாற்றுக் கதை | நாட்டுப் புறக் கதை | வர்ணனை | எ. காட்டு | பின்னணி விளக்கம் | உவமை | பரவு மொழி |
| 1. | அகத்தியர் சாபம் | அரங்கேற்றுக் காதை | 1-4 | + | — | — | — | — | + | — | — |
| 2. | கரிகாலன் இமய வெற்றி | இந்திர விழாவூரெடுத்தகாதை | 89-98 | — | + | — | — | — | + | — | — |
| 3. | சிவன் திரிபுரம் எரித்த கதை | கடலாடு காதை | 40-43 | + | — | — | — | + | — | — | — |
| 4. | நான்முகன் காணப் பாண்டுரங்கன் ஆடிய கதை | ,, ,, | 44-45 | + | — | — | — | + | — | — | — |
| 5. | கஞ்சனின் வஞ்சனை பற்றிய கதை | ,, ,, | 47-48 | + | — | — | — | + | — | — | — |
| 6. | வாணாசுரனைக் கண்ணன் வென்ற கதை | ,, ,, | 48-49 | + | — | — | — | + | — | — | — |
| 7. | சூரனை முருகன் வென்ற கதை | ,, ,, | 49-53 | + | — | — | — | + | — | — | — |
| 8. | கண்ணன் அநிருத்தனைச் சிறை செய்த கதை | ,, ,, | 54-55 | + | — | — | — | + | — | — | — |

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 9. | காமவேள் பேடி உருவெடுத்த கதை | கடலாடு காதை | 56-57 | + | — | — | — | + | — | — | — |
| 10. | கொற்றவை மரக்கால் கொண்டு ஆடிய கதை | ,, ,, | 58-59 | + | — | — | — | + | — | — | — |
| 11. | திருமகள் கொல்லிப் பாவை உருவெடுத்த கதை | ,, ,, | 60-61 | + | — | — | — | + | — | — | — |
| 12. | அயிராணி கடைசி வடிவெடுத்த கதை | ,, ,, | 62-63 | + | — | — | — | + | — | — | — |
| 13. | கோழி யானையை வென்ற கதை | நாடுகாண் காதை | 247-248 | — | — | + | + | — | — | — | — |
| 14. | வடிவலம்ப நின்ற பாண்டியன் கதை | காடுகாண் காதை | 18-20 | — | + | — | — | — | + | — | — |
| 15. | திருப்பாற்கடல் கடைந்த வரலாறு | வேட்டுவ வரி | பாடல் 21 | + | — | — | — | — | — | — | + |
| 16. | கஞ்சனின் வஞ்சம் பற்றிய கதை | ,, ,, | பாடல் 22 | + | — | — | — | — | — | — | + |
| 17. | அகத்தியன் பொதியை வந்த வரலாறு | ,, ,, | பாடல் 23 | + | — | — | + | — | — | — | — |
| 18. | இராமன் கதை | புறஞ்சேரி யிறுத்த காதை | 63-65 | + | — | — | — | — | — | + | — |

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 19. | இராமன் கதை | ஊர்காண் காதை | 46-49 | + | — | — | — | + | — | — | — |
| 20. | நளன் கதை | ,, ,, | 50-57 | + | — | — | — | + | — | — | — |
| 21. | ஆயர்பாடியில் கண்ணன் பிறந்த கதை | கொலைக்களக் காதை | 46-47 | + | — | — | — | — | — | + | — |
| 22. | கண்ணன் நப்பின்-னையை மணந்த கதை | ,, ,, | 48-51 | + | — | — | — | — | — | + | — |
| 23. | கன்றின் வடிவாக வந்த அசுரன் கதை | ஆய்ச்சியர் குரவை | பாட்டு 1 | + | — | — | + | — | — | — | — |
| 24. | பாற்கடல் கடைந்த வரலாறு | ,, ,, | பாட்டு 2 | + | — | — | + | — | — | — | — |
| 25. | கண்ணன் குருத்த மரத்தை வெட்டிய கதை | ,, ,, | பாட்டு 3 | + | — | — | + | — | — | — | — |
| 26. | கண்ணன் நப்பின்-னையின் துணி ஒளித்த கதை | ,, ,, | பாட்டு 1,2,3 | + | — | — | + | — | — | — | — |
| 27. | கண்ணன் கதிரைத் திகிரியால் மறைத்த கதை | ,, ,, | ஒன்றன் பகுதி 1 | + | — | — | + | — | — | — | — |
| 28. | கண்ணன் குருத்து ஒடித்த கதை | ,, ,, | உள்வரி வாழ்த்து 1 | + | — | — | + | — | — | — | — |

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 29. | திருப்பாற்கடல் கடைந்த வரலாறு | ஆய்ச்சியர் குரவை | வாழ்த்து | + | — | — | + | — | — | — | — |
| 30. | கண்ணன் உலகை உண்ட கதை | ,, ,, | முன்னிலைப பரவல்-2 | + | — | — | — | — | — | — | + |
| 31. | திருப்பாற்கடல் கடைந்த வரலாறு | ,, ,, | பரவல்-1 | + | — | — | — | — | — | — | -\|- |
| 32. | கண்ணன் யசோதை-யார் கடைக்கயிற்-றால் கட்டுண்ட கதை | ,, ,, | முன்னிலைப் பரவல்-1 | + | — | — | — | — | — | — | -\|- |
| 33. | கண்ணன் வெண்-ணெய் உண்ட கதை | ,, ,, | பரவல்-2 | -\| | — | — | — | — | — | — | -\|- |
| 34 | வாமன அவதாரக் கதை | ,, ,, | பரவல்-3 | -\|- | — | — | — | — | — | — | -\|- |
| 35. | கண்ணன் பஞ்ச பாண்டவர்க்காக தூது சென்றது | ,, ,, | ,, ,, | -\|- | — | — | — | — | — | — | -\|- |
| 36 | வாமன அவதாரக் கதை | ,, ,, | படர்க்கைப் பரவல்-1 | \|- | — | — | — | — | — | — | -\|- |
| 37. | இராமவதாரக்கதை | ,, ,, | ,, | -\|- | — | — | — | — | — | — | -\|- |
| 38. | கஞ்சனை வென்ற கதை | ,, ,, | பரவல்-3 | -\|- | — | — | — | — | — | — | -\|- |
| 39. | பஞ்சவருக்குத் தூது சென்ற கதை | ,, ,, | ,, | -\|- | — | — | — | — | — | — | -\|- |

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 40. | மயிடாசுரனைக் கொற்றவை கொன்ற கதை | வழக்குரை காதை | 34-35 | + | — | — | + | — | — | — | — |
| 41. | இறைவனை ஆடல் கண்டருளிய பத்ரகாளி கதை | ,, ,, | 37-38 | + | — | — | — | + | — | — | — |
| 42. | தாருகனைக் கொன்ற கொற்றவை கதை | ,, ,, | 38-40 | + | — | — | — | + | — | — | — |
| 43. | சிபி மன்னன் கதை | ,, ,, | 51-52 | — | + | — | — | + | — | — | — |
| 44. | மனு சக்கரவர்த்தி கதை | ,, ,, | 33-36 | — | + | — | — | + | — | — | — |
| 45. | வன்னிமரமும் மடைப்பள்ளியும் சான்றாக நின்றவள் கதை | வஞ்சின மாலை | 5-6 | — | — | + | — | + | — | — | — |
| 46. | ஆதிமந்தி கதை | ,, ,, | 10-15 | — | — | + | — | + | — | — | — |
| 47. | கற்பினால் தன்னைக் கல்லுருவாக்கிக் கொண்டவள் கதை | ,, ,, | 15-17 | — | — | + | — | + | — | — | — |
| 48. | குழவிகளை உயிர்ப்பித்தவள் கதை | ,, ,, | 17-19 | — | — | + | — | + | — | — | — |
| 49. | குரங்காகத் தன்னை மாற்றிக் கொண்டவள் கதை | ,, ,, | 19-22 | — | — | + | — | + | — | — | — |

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 50. | சிறுவனை மணந்தவள் கதை | ,, ,, | 23-35 | — | — | + | — | + | — | — | — |
| 51. | மணற்பாவையைக் கணவனாகக் கொண்டவள் கதை | ,, ,, | 6-10 | — | — | + | — | + | — | — | — |
| 52. | சிபி கதை | கட்டுரை காதை | 38 | — | + | — | — | + | — | — | — |
| 53. | மனு கதை | ,, ,, | 38 | — | + | — | — | + | — | — | — |
| 54. | செவவேள் அவுனரைக் கொன்றது | ,, ,, | 188-190 | + | — | — | + | — | — | — | — |
| 55. | முருகன் சூரனாகிய மாமரத்தை வெட்டியது | குன்றக் குரவை | பாட்டு மடை 7 | + | — | — | — | — | — | — | + |
| 56. | முருகன் கார்த்திகைப் பெண்களிடம் வளர்ந்தது | ,, ,, | ,, 9 | + | — | — | — | — | — | — | + |
| 57. | முருகன் கிரவுஞ்ச மலையைப் பிளந்தது | ,, ,, | ,, 9 | + | — | — | — | — | — | — | + |
| 58. | தூங்கெயில் எறிந்த சோழன் கதை | வாழ்த்துக் காதை | அம்மானை வரி 16 | — | + | — | — | — | — | — | + |
| 59. | சிபி கதை | ,, ,, | ,, 17 | — | + | — | — | — | — | — | + |

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 60. | மனு கதை | ,, ,, | ,, 17 | — | -\|- | — | — | — | — | — | -\|- |
| 61. | பொறையன் பாண்டவருக்கு சோறிட்டது | ,, ,, | ஊசல் வரி 24 | — | -\|- | — | — | — | — | — | -\|- |

-|- = உள்ளமையைச் சுட்டும்

— = இன்மையைச் சுட்டும்

## மணிமேகலையில் பயின்று வரும் துணைக் கதைகள்

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| எண் | கதைப் பெயர் | பயின்று வரும் காதை | பாடலடிகள் | புராணக் கதை | வரலாற்றுக் கதை | நாட்டுப்புறக் கதை | வர்ணனை | எ. காட்டு | பின்னணி விளக்கம் | உவமை | பரவு மொழி |
| 1. | தூங்கெயில் எறிந்த செம்பியன் கதை | விழாவறை காதை | 4 | — | + | — | + | — | — | — | — |
| 2. | நாளங்காடி பூத கதை | ,, ,, | 19–20 | + | — | — | + | — | — | — | — |
| 3. | கரிகாலன் வரலாறு | ,, ,, | 39-40 | — | + | — | — | — | — | + | — |
| 4. | இந்திரவிழா தோன்றிய வரலாறு | ஊரலருரைத்த காதை | 1-3 | + | — | — | — | — | + | — | — |
| 5. | சம்பாதி சிறகிழந்த கதை | மலர்வனம் புக்க காதை | 33-34 | + | — | — | — | — | + | — | — |
| 6. | கவேரன் தவம் இருந்த வரலாறு | ,, ,, | 35-36 | + | — | — | — | — | + | — | — |
| 7. | பிரத்தியுநன் பேடி வடிவம் எடுத்த கதை | ,, ,, | 123-124 | + | — | — | — | + | — | — | — |
| 8. | அர்ச்சுனன் பேடி வடிவமெடுத்த கதை | ,, ,, | 146-147 | + | — | — | — | — | — | + | — |

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 9. | கரிகாலன் முதுமை உருகொண்டு நீதி செய்த வரலாறு | பளிக்கறை புக்க காதை | 107·108 | — | + | — | ·\|· | — | — | — | — |
| 10. | திருமகள் கொல்லிப் பாவை உருவெடுத்தது | மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதை | 4 | + | — | — | — | — | — | ·\|· | — |
| 11. | முருகன் கிரவுஞ்ச மலையைத் தகர்த்த கதை | ,, ,, | 13-14 | ·\|· | — | — | — | — | — | ·\|· | — |
| 12. | புத்த பீடிகைக்காக போரிட்ட வரலாறு | மணிபல்லவத்துத்துயருற்ற காதை | 54-61 | — | ·\|· | — | — | ·\|· | — | — | — |
| 13. | காவிரியின் பிறப்பு பற்றிய கதை | பீடிகை கண்டு பிறப்புணர்ந்த காதை | 52-53 | ·\|· | — | — | ·\|· | — | — | — | — |
| 14. | சூரியன் தோன்றிய கதை | அறவாணர்த் தொழுத காதை | 72-76 | ·\|· | — | — | — | — | — | ·\|· | — |
| 15. | அசலன் கதை | ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை | 43 | ·\|· | — | — | — | ·\|· | — | — | — |
| 16. | சிருங்கி கதை | ,, ,, | 43 | ·\|· | — | — | — | ·\|· | — | — | — |
| 17 | விருஞ்சி கதை | ,, ,, | 44 | ·\|· | — | — | — | ·\|· | — | — | — |
| 18. | கேச கம்பளன் கதை | ,, ,, | 44-45 | ·\|· | — | — | — | ·\|· | — | — | — |

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 19. | அகத்தியர் வசிட்டன் பிறப்பு பற்றிய கதை | ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை | 94-96 | + | — | — | — | + | — | — | — |
| 20. | தேவர்கள் அமுதுண்டு ஒளித்த வரலாறு | பாத்திரம் கொண்டு பிச்சை புக்க காதை | 51-52 | + | — | — | — | — | — | + | — |
| 21. | யூகி பித்தனாக நடித்த கதை | ,, ,, | 61-66 | — | + | — | — | — | — | + | — |
| 22. | சேது பந்தனம் | உலகறவி புக்க காதை | 9-12 | + | — | — | — | — | — | + | — |
| 23. | அகலிகை கதை | உதயகுமாரன் அம்பலம் புக்க காதை | 90-91 | + | — | — | — | + | — | — | — |
| 24. | சுவாகையின் கதை | ,, ,, | 92-97 | + | — | — | — | + | — | — | — |
| 25. | வாமன அவதாரம் | சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக்கிய காதை | 51-54 | + | — | — | — | — | + | — | — |
| 26. | மாயவன் ஆடிய குரவை ஆட்டம் | ,, ,, | 65-66 | + | — | — | — | — | — | + | — |
| 27. | பரசுராமன் கதை | சிறைசெய் காதை | 24-25 | + | — | — | — | + | — | — | — |
| 28. | மனு கதை | ,, ,, | 280 | — | + | — | + | — | + | — | — |
| 29. | கானாக மடந்- | சிறைவிடு | 104-111 | — | — | + | — | + | — | — | — |

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தையின் வரை வொழுக்கம் பற்றிய கதை | காதை | | | | | | | | | |
| 30. | வேடன் கதை | ,, ,, | 112-119 | — | — | + | — | + | — | — | — |
| 31. | அகத்தியர் சாபம் | ஆபுத்திரனாடு அடைந்த காதை | 7-14 | + | — | — | — | — | + | — | — |
| 32. | இராமன கதை | சமயக்கணக்கர் தந்திறவ கேட்ட காதை | 53-54 | + | — | — | — | + | — | — | — |

+ = உள்ளமையைச் சுட்டும்

— = இன்மையைச் சுட்டும்

# பிற வெளியீடுகள்

| | | ரூ. | பை |
|---|---|---|---|
| 1. | ஆய்வுக்கட்டுரை எழுதும் முறை ...<br>டாக்டர் முத்துச்சண்முகன்<br>டாக்டர் சு. வேங்கடராமன் | 4 | 50 |
| 2. | யாத்திரை அனுபவங்கள் சமர் ...<br>நீல. பத்மநாபன் | 6 | 00 |
| 3. | இக்காலத் தமிழ் ...<br>டாக்டர் முத்துச்சண்முகன் | 7 | 50 |
| 4. | சங்கத் தமிழ்ச் செய்யுட் கோவை ...<br>டாக்டர் ஜெயராமன் | 15 | 00 |
| 5. | காப்பியர் நெறி - சொல்லியல் ...<br>டாக்டர் ஆண்டியப்பன் | 8 | 00 |
| 6. | சங்க இலக்கியத் தொகை ...<br>டாக்டர் மோகன் | 9 | 00 |
| 7. | குறவஞ்சி ...<br>டாக்டர் முத்துச்சண்முகன்<br>நிர்மலா மோகன் | 8 | 00 |
| 8. | Collected Papers - Part I ...<br>Dr. M. Shanmugam Pillai | 12 | 00 |
| 9. | Tamil Studies-Future & Prospects<br>Dr. M. Shanmugam Pillai<br>Dr. R. Kothandaraman | | |
| 10. | த்வனி ...<br>லா. ச. ராமாமிருதம் | 7 | 00 |

முத்துப் பதிப்பகம்
"மாதவி" 7/332-ஆழ்வார் நகர்
மதுரை-625 019